விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 04 புதன்கிழமை (18.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 181

# அளுத்கமவில் தொடரும் பதற்றம் நேற்றும் ஊரடங்கு அமுலில்!

## பொலிஸார் குவிப்பு



(கொழும்பு)

அளுத்கம பகுதியில் பொலிஸார் பிறப்பித்திருந்த ஊரடங்கு உத்தரவை மீறியதான குற்றச்சாட்டில் 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அதன் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். இவர்களில் 25 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் மற்றவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந்த ஊரடங்கு உத்தரவு நேற்று நான்கு மணி நேரங்கள் தளர்த்தப்பட்டிருந்தாலும் மறுஅறிவித்தல்வரும வரை அது அமுலில் இருக்கும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் முஸ்லம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மாவன 19 ஆம் பக்கம் பார்க்க....

## கோண்டாவிலில் தொடரும் பதற்றம் நேற்று 20 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

மாணவன் ஒருவர் வாளால் வெட்டிப்படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து யாழ்.கோண்டாவல் மற்றும் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த சுமார் 20க்கும் மேற்பட்டோர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமின்றி இந்த வன்முறைச்சம்பவத்தில் ஈடுபட்ட ஏனையவர்களை பொலிஸாரும் இராணுவத்தினரும் தேடிவருகின்றனர்.

அத்தோடு உரும்பிராய் மற்றும் கோண்டாவில் பகுதியில் நேற்று முனதினம் இரவு முழுவதும் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பதற்றமான சூழல் நிலவிவருகின்றது.

யாழ்.கோண்டாவில் பகுதி நாராயணன் கோவிலடியில் உள்ள வீட்டிற்குள் புகுந்த இள்ளஞர் குழுவால மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்தில் யாழ்.சென் ஜோன் கல்லூரியில் கலைப்பிரிவில் கல்வி கற்று வந்த மாணவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே நேற்று முன்தினம் மாலை துடிதுடித்து உயிரிழந்தார்.

மேலும் உயிரிழந்தவரின் சகோதரயும், சகோதரனும் பலத்த காயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக உரும்பிராய் கிழக்கினைச் சேர்ந்த எம்.நிரோஜன் (வயது 23) என்பவரை கோப்பாய் பொலிஸார் நேற்று இரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து கைது செய்து செய்திருந்தனர்.

கோண்டாவில் நாராயணன் கோவிலடியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் உரும்பிராய் கிழக்குப் பகுதியினைச் சேர்ந்த இள்ளஞர்கள் மோட்டார் சைக்கிளில் சாகசம் செய்த காரணத்தினால் அப்பகுதி இளைஞர்களுக்கும், உரும்பிராய் பகுதி இளைஞர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் உரும்பிராய் பகுதியினைச் 19 ஆம் பக்கம் பார்க்க....

## பொது பல சேனா செயலரின் பேச்சே வன்முறைக்கு காரணம்
### அமைச்சர் பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

பொது பல சேனா பொதுச் செயலரின் பேச்சே வன்முறைக்குக் காரணம் என அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனி மதக் கலவரங்கள் நடைபெறாமல் தடுக்கும் நோக்கில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உரிய பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

அண்மையில் களுத்துறை மாவட்டம், அளுத்கமப் பகுதியில் கடும்போக்கு பௌத்த அமைப்பு என்று கருதப்படும் பொது பல சேனாவுக்கும், உள்ளூர் முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்க்ளில் குறைந்தது நான்கு பேர் உயிரிழந்த நிலையில், அரசின் உயர்மட்டக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஜயரட்ண தலைமையில நடைபெற்ற இந்தக் கூட்டத்தல், பசில் ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, டலஸ் அழகப்பெரும, பௌசி உட்பட பல அமைச்சர்கள் பங்கு பெற்றுள்ளனர்.

பௌத்த மதத் தலைவர்களும் பங்குபெற்ற இந்தக் கூட்டத்தில் அனைத்து சமூக மக்களுக்கும் உள்ள உரிமை 19 ஆம் பக்கம் பார்க்க....

அன்பு வாசகர்களே!
ஜோதிடக் கலைமணி
சிவல்புரி சிங்காரம்
எழுதும் ராகு - கேது பெயர்ச்சி பலன் நாளை முதல் வெளிவரும்.
வாசிக்கத் தவறாதீர்கள்.

## அளுத்கம மோதலின்போது எவரும் கொல்லப்படவில்லை
### பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



(கொழும்பு)

முஸ்லிம்- சிங்கள குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் எவரும் கொல்லப்படவில்லையெனவும் பொய்யான தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோன் தெரிவிதுள்ளார்.

அளுத்கம வன்முறை தொடர்பாக ஆங்கில இணைய ஊடகம் ஒன்றுக்கு அளித்த தகவல்களின் போதே பொலிஸ்மா அதிபர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

களுத்துறை மாவட்டம் அளுத்கம பிரதேசத்தில் கடும்போக்கு சிங்கள - பௌத்தர்களுக் 19 ஆம் பக்கம் பார்க்க....

## பூசகர் விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமுற்று ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேரக்கப்பட்ட பூசகர் ஒருவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந் 20 ஆம் பக்கம் பார்க்க....

## அளுத்கம தாக்குதல் மட்டு.வில் ஹர்த்தால்

(கொழும்பு)

களுத்துறை மாவட்டம் அளுத்கம மற்றும் வேருவளை ஆகிய இடங்களில் நடந்த முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களை கண்டித்து நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் கடையடைப்பு மற்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் காரணமாக இம் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட முஸ்லிம் பிரதேசங்களான காத்தானகுடி, ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி ஆகிய பிரதேசங்களில் வழமை நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

வியாபார நிலையங்களும் தனியார் அலுவலகங்களும் மூடப்பட்டன. சந்தைகள் கூடவில்லை. மாணவர்கள் வரவின்மையால் பாடசாலைகள் இயங்கவில்லை. அரசாங்க அலுவலகங்களின் செயல்பாடுகளிலும் ஸ்தம்பித நிலை காணப்பட்டன.

ஏறாவூர் பிரதேசத்தில் ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என்று நேற்று அதிகாலை பொலிஸாரினால் பள்ளிவாசல்களின் ஒலிபெருக்கிகள் மூலம் வர்த்தகர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அதனை நிராகரிக்கும் வகையில் அந்த பிரதேச வர்த்தகர்கள் கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காத்தான்குடி பிரதேச முஸ்லிம்கள், அளுத்கம மற்றும் வேருவளை பிரதேச முஸ் 19 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நலை தவறா நனன்றா காகதும் உங்கள் நாளதழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணசபை ஜூலை 16 வரை ஒத்திவைப்பு

(மட்டக்களப்பு)

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் ஏற்பட்ட மோதல்கள் தொடர்பில் விசேட உரையாற்ற அனுமதி கோரப்பட்டதால், கிழக்கு மாகாண சபையின் கூட்டம் மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டது.

இதனையடுத்து சபைத்தலைவர் சபையின் கூட்டத்தை எதிர்வரும் ஜூலை மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சபையின் அமர்வுகள் ஆரம்பிக்கப்பட்ட போது, விவசாய அமைச்சர் ஹசீர் அஹமட், அளுத்கம சம்பவம் தொடர்பில் விசேட உரையொன்றை ஆற்ற அனுமதி கோரினார். இதனால் ஏற்பட்ட அமளியை அடுத்து சபையின் அமர்வுகள் 15 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் சபை கூடிய போது அவர் அதே கோரிக்கையை மீண்டும் முன்வைத்தார்.

சபைத் தலைவர் இரண்டாவது முறையாகவும் சபையை ஒத்திவைத்து 12.30 அளவில் மீண்டும் ஆரம்பிக்க முயற்சித்த போது மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், அதற்கு தலைவர் மறுப்பு தெரிவித்ததையடுத்து சபையில் பெரும் அமளி ஏற்பட்டது.

இதன் காரணமாக தலைவர் சபையின் அமர்வை எதிர்வரும் ஜூலை 16 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (எ-11)

# இலங்கைத் தூதரகம் முன் சென்னையில் ஆர்ப்பாட்டம்

## முஸ்லிம்களின் கொலையைக் கண்டித்து

(சென்னை)

இலங்கையில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்தை முற்றுகையிட்ட ஆயிரக்கணக்கான தவ்ஹீத் ஜமாத் இயக்கத்தினர கைது செய்யப்பட்டனர்.

இலங்கையின் அளுத்கம, பேருவளை ஆகிய இடங்களில் சிங்களர்கள் தமிழ் பேசும் முஸ்லிம்கள் மீது கடுமையாக தாக்குதல் நடத்தினர். இதில் 3 பேர் பலியாகி உள்ளனர்.

இந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து சென்னையில் உள்ள இலங்கை துணைத்தூதரகம் முன்பாக தவ்ஹீத் ஜமாத் அமைப்பினர் நேற்று முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.


இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான பெண்களும் கலந்து கொண்டனர்.



இலங்கையில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்தும் தாக்குதலில் ஈடுபட்ட பொது பல சேனா அமைப்புக்கு தடை விதிக்கவும் கோரியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

அப்போது இலங்கை தூதரகத்தை முற்றுகையிட முயன்றதாக தவ்ஹீத் ஜமாத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோரை பொலிசார் கைது செய்தனர். (எ-11)

# மரண அறிவித்தல்



## கந்தையா தியாகரத்தினம்

உடுவில் உதயசூரியன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தியாகரத்தினம் நேற்று (17.06.2014) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா – சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், சதாசிவம் – நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாதேவியின் (கிளிநொச்சி) பாசமிகு கணவரும், ரஜிந்தன், விஜிந்தன், விஜேந்தினி, ஜசிந்தன் (பப்பி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உதயசூரியன் வீதி,
உடுவில்,
சுன்னாகம். (6780)

தகவல்:-
குடும்பத்தினர்.
0778933039,0771042292

# மக்கள் நலன் பேணும் அமைப்பு, கோண்டாவில் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் 15.06.2014

| பரிசு | சீட்டு இல. | அதிர்ஷ்டசாலியின் பெயர் | முகவரி |
| --- | --- | --- | --- |
| 1ம் பரிசு | 0877 | S. லகுந்திரன் | கொக்குவில் மேற்கு |
| 2ம் பரிசு | 1111 | லோகேஷ் ஐயா | மகேந்திரன் கலைப்படி, கோண்டாவில் |
| 3ம் பரிசு | 0193 | கர்சாயினி | குட்செட் வீதி, கோண்டாவில். |
| ஆறுதல் பரிசுகள் | | | |
| 01 | 0134 | | இலக்சுமி இரும்புக்கலை இருபாலை வீதி, [illegible] |
| 02 | 1790 | | இலங்கை வங்கி, சுன்னாகம். |
| 03 | 0698 | சுதா | மனல்தறை லேன், அரியாலை. |
| 04 | 0844 | ராஜ் மியூசிக் | சுன்னாகம் |
| 05 | 1148 | | மக்கள் வங்கி, பல்கலைக்கழகம். |
| 06 | 0333 | விஜிந்திரன் | தையல் கலை, சுன்னாகம். |
| 07 | 1141 | | மக்கள் வங்கி, பல்கலைக்கழகம். |
| 08 | 0657 | பா.ஜெனி | பாலையூர் |
| 09 | 0521 | பி.தீபிகா | கோண்டாவில் ஒழுங்கை, கொக். |
| 10 | 1037 | அனித்தா | நாலாம் சந்தி, நல்லூர். |

வெற்றியாளர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்
0770740214 (6/83)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20 - 07 - 1940



உதிர்வு 21 - 06 - 2011



## அமரர் வேலுப்பிள்ளை கிருஷ்ணசாமி

(பொறியியலாளர்)

அடிக்கொரு தரம் அழைக்கும் எம்
தந்தையின் குரல் கேட்டு
ஆண்டுகள் மூன்று உருண்டோடி
விட்டது
மாண்டு போனதை எண்ண
மனம் துணியாமல்
மீண்டும் மீண்டும் அவர் குரல்
கேட்குமா என்றொரு ஏக்கம்
அப்படி ஒரு அன்பும் ஆதரவும்
அரவணைப்பும்
எப்படி முயன்றாலும் கிடைக்கவா
போகின்றது?

முயன்று தான் பார்த்தோம்
- தந்தை என்ற உறவுக்கல்ல
இயன்றவரை எம் தந்தை தந்த
அவ்வளவில் எவ்வளவாவது
கிடைக்குமா – என

எம் தாய் எம்மிடமும் நாமோ
அக்கா தங்கையிடமும், தங்கை
அக்காவிடமும் அண்ணன், தம்பி
யிடமும், தம்பி அண்ணாவிடமும்
என்று மாறி மாறித் தேடினோம்

இரத்த சொந்தத்திலும் தேடினோம்
- எமக்கென
வந்த சொந்தத்திலும் தேடினோம்
எம் தந்தை எமக்களித்த
அத்தனையில்
இத்தினி கூடக் கிடைக்கவில்லை
ஒவ்வொரு சொந்தமும் ஒவ்வொரு
மாதிரி எம் தந்தை எம்
ஒவ்வொருவரிலும் கொண்ட
சொந்தமோ –ஒரே மாதிரி
என்றும் மாறாதது எமக்கு மட்டுமே
உரித்தானது

**ஐயா! ஆண்டுகள் எத்தனை எமைக் கடந்து சென்றாலும்**
**மீண்டும் மீண்டும் உங்கள் நினைவுடன்**

**வாழும் உங்கள்.**

(த-7880)

"எரிச்சோலை"
சமரபாகு, வல்வெட்டித்துறை.

மனைவி,
பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



## திருமதி சரஸ்வதி சபாரத்தினம்

தெல்லிப்பளை எழுவாவுடையைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை யா/வீமன்காமம் ம.வி - பண்டிதர் திருமதி சரஸ்வதி சபாரத்தினம் 16.06.2014 அன்று சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சபாரத்தினத்தின் பாசமிகு மனைவியும், கமலினி (ஆசிரியர்-கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்), செந்தில்நாதன், நந்தினி, சிறிமாலினி (ஆசிரியர்-யா/நடேஸ்வரா கல்லூரி), அருள்நாதன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலகிருஷ்ணன் (கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்), நவறதி (ஆசிரியை-அக்கராயன் ம.வி), ஜெகதீஸ்வரன், நடேசலிங்கம் (அக்கராயன் ப.நோ.கூ.சங்கம்), கிருஸ்ணவேணி (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கோபிராஜ், திபாஜினி, துளசிகா, கோபிகா, திருவளவன், கஜவாணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2014) முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் புண்ணியதீயில் ஆகுதியாக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சக உத்தியோகத்தர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

KKS வீதி,
துர்க்காபுரம்,
தெல்லிப்பளை. (6781)

தகவல்:-
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓமந்தையில் மீண்டும் சோதனை; மக்கள் அசௌகரியம்

(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடிகளில் கெடுபிடி அதிகரித்துள்ளமையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தெரியவருகின்றது.

வடக்கிற்கும் தெற்கிற்குமான சோதனை சாவடியாக அமைக்கப்பட்டுள்ள ஓமந்தை சோதனைச் சாவடி பல ஆண்டு காலமாக இயங்கி வரும் நிலையில் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியிலும் எவ்வித மாறுபாடுகளும் இன்றி இயங்கி வருகின்றது.

இந் நிலையில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் இச் சோதனைச்சாவடியில் சோதனை நடவடிக்கைகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் வாகனங்கள் மாத்திரம் பதிவு செய்து செல்ல வேண்டும் எனவும் பேருந்தில் செல்லும் பயணிகள் சோதனையிடப்படமாட்டார்கள் எனவும் பெருமெடுப்பில் ஊடகவியலாளர் மாநாடு நடத்தி அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் ஒருசில மாதத்திலுள்ளேயே மீண்டும் சோதனைகள் அதிகரிக்கப்பட்டு பேருந்துகளில் செல்லும் பயணிகளின் அடையாள அட்டைகள் பரிசோதனை என இடம்பெறுவதுடன் மோட்டார் சைக்கிளில் செல்வோர் வாகனம் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் (லைசன்ஸ்), காப்புறுதிப் பத்திரம், வரி அனுமதிப்பத்திரம் என்பவற்றை இராணுவத்திடம் நேரடியாக காட்டி பதிவு செய்ய வேண்டியுள்ளதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மோட்டார் சைக்கிளில் செல்வோர் நீண்ட நேரம் காத்திருந்து பதிவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன் அரச உத்தியோகத்தர்களும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தினமும் இவ் வீதியை பயன்படுத்தி சோதனைச்சாவடிகளை தாண்டிச் செல்வோரும் இவ்வாறான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமையால் பெரும் இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். (அ-250)


# சாந்திகம் உளவளத்துணை நிலையம்

## பதவி வெற்றிடங்கள்

சாந்திகம் கடந்த இருபத்தைந்து வருடங்களாக உளவளத்துணை மற்றும் சமுதாயமட்ட உளமருத்துவ - உள சமூகத் துறைகளிலே சேவை புரிகின்ற ஓர் அரசசார்பற்ற நிறுவனமாகும். தற்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் மேற்படி துறைசார்ந்த திட்டங்களை யூ.எஸ்.எயிட் நிதியுதவியுடன் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கீழ்வரும் பதவிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.கள இணைப்பாளர்**

- பூநகரி: 3 வெற்றிடங்கள்
- புதுக்குடியிருப்பு: 3 வெற்றிடங்கள்

திட்டப்பணிப்பாளரது ஒட்டுமொத்த நெறிப்படுத்தலின்கீழ் பணிபுரிபவராக இருப்பதோடு, திட்டப்பிரதேசத்தில் நிலைகொண்டு பணியாற்றும் கள இணைப்பாளர் கீழ்வரும் கடமைகளை நிறைவேற்றக்கூடியவராக இருப்பார்.

1.திட்டப் பிரதேசத்திற்காக நியமிக்கப்பட்ட பணியாளர்களை முகாமை செய்தலும் அவர்களுக்கான ஓர் தலைமைத்துவத்தினை ஏற்று வழிநடத்துதலும்.

2.திட்டத்தின் அடைவுகளை பெற்றுக்கொள்ளல் என்பதை நேரடியாக பொறுப்பேற்றல்.

3.நிறுவனத்தினது வளங்கள் முழுமையாகவும், திறமையாகவும் திட்டத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல்.

4.திட்டப் பிரதேசத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்களை உளசமூகப் பணியைச் செயற்படுத்தக்கூடிய வகையில் வழிநடத்தல்.

5.பணியாளர்களின் திறன்களை வளர்க்கக்கூடிய வகையில் தேவைகளை அறிவதிலும், பயிற்சிகளை வழங்குவதிலும் திட்டப்பணிப்பாளருக்கு உதவுதல்.

6.உள்ளார்ந்த மற்றும் வெளிப்புற பிரச்சினைகளையும், சவால்களையும் அடையாளம் காண்பதற்கும் அவற்றைத் தீர்ப்பதற்கும் திட்டப் பணிப்பாளருக்கு உதவுதல்.

7.திட்டப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டம் தொடர்பான முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதை உறுதிசெய்தல்.

8.கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுக்கு உதவுதல்.

9.திட்டப் பகுதியின் திட்டத்திற்கான பிரதான தொடர்பாளராகவும், சரியான முறையில் தொடர்பாடல் இடம்பெறுவதையும் உறுதிசெய்தல்.

**எதிர்பார்க்கப்படும் தகுதிகள்:**

1.அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம், நிறுவனமொன்றின் பட்டம் அல்லது டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.

2.சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தது மூன்று வருட அனுபவம்.

3.சாந்திகம் நிறுவனத்தையும் அதன் விழுமியங்களையும் புரிந்து அவற்றை பிரதிநிதித்துவப்படுத்துபவராக இருத்தல் வேண்டும்.

4.மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் தங்கியிருந்து பணிபுரியக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

5.கணனியைக் கையாளக்கூடியவராக இருப்பதோடு ஆங்கிலமொழியில் எழுதக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

6.மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் மேலதிக தகைமையாகக் கொண்டிருத்தல். சமூகப்பணியில் அர்ப்பணிப்புடன் செயற்படும் பண்புள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**2.கள உதவியாளர்கள்**

பூநகரி: 8 வெற்றிடங்கள், புதுக்குடியிருப்பு: 8 வெற்றிடங்கள் கள உதவியாளர்கள் கள இணைப்பாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழும் திட்டப்பணிப்பாளருடைய ஒட்டுமொத்த நெறிப்படுத்தலின்கீழும் பணிபுரிபவராக இருப்பதோடு கீழ்வரும் கடமைகளையும் நிறைவேற்றுபவராக இருப்பார்.

1.திட்டத்திற்கு உதவும் வகையில் கிராமம் மற்றும் சம்பந்தப்பட்ட சமூகம் சார்ந்த அடிப்படைத் தரவுகளைத் திரட்டுதல்.

2.குடும்ப மதிப்பீடுகளை மேற்கொள்ளலும், தேவைநாடிகளை இனங்காணலும்.

3.இனங்காணப்பட்ட தேவைநாடிகளுக்கு கள இணைப்பாளர்களின் உதவியுடன் உரிய உதவித்திட்டங்களை வகுத்தலும், அவை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தலும்.

4.திட்டம் தொடர்பான முன்னேற்ற அறிக்கையினை தயாரிப்பதற்கான தகவல்களைப் பேணுதலும் வழங்குதலும்.

5.திட்டப் பிரதேச அபிவிருத்தி தொடர்பாகவும், தேவைநாடிகளின் அபிவிருத்தி தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட அரச, அரசசார்பற்ற துறைசார் உத்தியோகத்தர்களுடன் தொடர்பினைப் பேணுதல்.

6.திட்டநோக்கத்தினை அடையும் பொருட்டு உள்ளூர் வளங்களை இனங்காணலும், ஒன்றுதிரட்டலும்.

7.திட்டநோக்கத்தினை அடையும் பொருட்டு உள்ளூர் நிறுவனங்களை இனங்காணலும், ஒன்றுதிரட்டலும், அவற்றைப் பலப்படுத்தலும்.

**எதிர்பார்க்கப்படும் தகுதிகள்**

1.க.பொ.த.உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2.சமுதாயமட்ட சமூகப்பணிகளில் ஈடுபாடும் ஆர்வமும்.

3.சாந்திகம் நிறுவனத்தையும் அதன் விழுமியங்களையும் புரிந்து அவற்றை பிரதிநிதித்துவப்படுத்துபவராக இருத்தல் வேண்டும்.

4.மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் தங்கியிருந்து பணிபுரியக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

5. குறிப்பிட்ட பிரதேசங்களை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6.கணனியைக் கையாளக்கூடியவராக இருப்பது விரும்பத்தக்கது.

7.சமூகப்பணியில் அர்ப்பணிப்புடன் செயற்படும் பண்புள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

8. 35 வயதிற்குகுறைந்தவராக இருத்தல் வேண்டும்.

சம்பளமானது தகுதி மற்றும் அனுபவத்திற்கேற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். பொருத்தமானவர்கள் எனக் கருதப்படும் விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களைக் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 22.06.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**மனிதவள உத்தியோகத்தர், சாந்திகம்,**
**இல. 8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல. 021-2223338**

(சி-7683)


# இராசி பலன்

**18.06.2014**

(ஆனி 04, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 8.23 மணிவரை
அவிட்டம் காலை 6.10 மணிவரை
சதயம் பின்னிரவு 4.41 மணிவரை
இராகுகாலம் 11.53-01.23 மணிவரை
சுபநேரம் 4.23-5.53 மணிவரை

வளவன்

**மேடம்:** வருமானம் அதிகரித்து வளம் காண்பீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு, கௌரவமான நாள்.

**இடபம்:** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** மங்கையரால் ஏற்பட்ட மனக்கிலேசம் மாறும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**கடகம்:** பிறருக்காக பொறுப்பு சொல்வதைத் தவிர்ப்பது நல்லது, செலவுகள் அதிகமாகும், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சஞ்சலங்கள் கூடும்.

**சிம்மம்:** உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** பாக்கிகள் திடீரென வசூலாகலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்:** வளர்ச்சி கூடும் நாள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்கு செல்லவேண்டிய நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், வாகன சுகமுண்டு, சந்தித்த நபர்களால் சந்தோசமான தகவல் ஒன்று வந்து சேரலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**தனுசு:** நீண்டநாளைய பிணக்குகளில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்துதவுவர், வியாபார விரோதம் விலகும், போசன சுகமுண்டு.

**மகரம்:** இன்று புதிய முயற்சி ஒன்றில் ஈடுபாடு காட்டுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** வருமானங்கள் கூடும் நாள், ஒருசில வேலைகளை முடிக்க பல மணிநேரம் காத்திருக்கும் சூழ்நிலை உருவாகலாம், சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**மீனம்:** ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் உருவாகலாம், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள், கோபப்படுவதனை தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறை மனனப்போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகத்தினால் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையை முன்னிட்டு நடத்தும் திருமுறை மனனப்போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது என மேற்படி கழகத்தின் பரீட்சை செயலர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.


இதற்கமைய பாலர் பிரிவில் தரம்-1, தரம்-2 ஆகியவற்றிற்கு முறையே முத்திநெறி அறியாத..., பூசுவதும் வெண்ணீறு... ஆகிய திருமுறைகளும் கீழ்ப்பிரிவில் தரம்-3, தரம்-4 இற்கு முறையே பால்நினைந்தூட்டும்..., வான் ஆகி மண் ஆகி..., வளி ஆகி ஒளி ஆகி... எனுந் திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

மனனப் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இப்போட்டிக்கான பரிசில்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசைத் தினத்தன்று வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் போட்டிக் கட்டணமாக 50 ரூபாவினைச் செலுத்தி சைவ சமய அபிவிருத்திக் கழக அறிவகம், இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை பிற்பகல் 3 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை 021-7904790 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)




# பாரம்பரிய கலைகளின் அரங்கேற்ற நிகழ்வு

பாரம்பரிய கலைகள் தொடர்பான போட்டியில் வடமாகாணத்தில் வெற்றி பெற்ற நிகழ்வுகளின் அரங்கேற்றமும் கௌரவம் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு இலங்கை கலைவேந்தன் கல்லூரியில் ஆற்றுகை செய்யப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

இவ் ஆற்றுகை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியின் ஏற்பாட்டில் வடமாகாண பாரம்பரிய கலைகள் தொடர்பான போட்டிகள் வடக்கின் பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத மன்றங்களிடையே மாவட்ட மட்டம் மற்றும் மாகாண மட்டங்களுக்கிடையே நடத்தப்பட்டன.

இதில் 80 இற்கும் மேற்பட்ட கலைமன்றங்கள் பங்குபற்றின. ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் கூத்து, இசைநாடகம், கூத்து வழி நடனம் என்ற 3 நிகழ்வுகள் இடம் பெற்றன.

இக்கலைஞர்களுக்கு சர்வதேச மட்டத்தில் ஓர் அங்கீகாரம் ஏற்படுத்திக் கொடுக்கவும் இப்போட்டிகள் நடத்தப்பட்டன.

அரங்கேற்றத்தின்போது கலைஞர்களுக்கான கௌரவமும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. இதில் முதலாம் பரிசாக ஒரு இலட்சம் ரூபாவும் இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாவும் வழங்குவதோடு 4 தொடக்கம் 10 இடங்களைப் பெற்ற மன்றங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

அத்தோடு பங்குபற்றிய அனைத்து கலைஞர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றிய முதுபெரும் கலைஞர் ஒருவர் கண்ணீர் மல்க எமக்குக் கூறிய கருத்து 12 வயதிலே மேடையேறிய எனக்கு 80 வயதில் தான் ஒரு அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது எனக் குறிப்பிட்டமை எமது நோக்கத்திற்கு கிடைத்த பெரும் அங்கீகாரமாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஒரு நிகழ்வில் குறிப்பிட்டுக் கூறவேண்டிய மற்றொரு அம்சம் வடக்கிற்குரிய தனித்துவமான ஆடல் வடிவமொன்று இப்போட்டி மூலமான கண்டறியப்பட்டுள்ளது.

பரதம் எமக்குரிய நடனம் அல்ல என்றும் வடக்கிற்குரிய சுதேச நடனம் எது என்றும் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் பலராலும் எழுப்பி வந்த காலகட்டத்தில் வடக்கிற்கான தனித்துவ ஆடல் வடிவம் கூத்துவழி நடனம் என்று இப்போட்டிகள் மூலமாகக் கண்டறியப்பட்டு அந்நடனங்களும் 28 ஆம் திகதி மேடையேற்றப்படவுள்ளன.

இதனைக் கண்டு களிப்பதற்கு விழாக்குழு சார்பாக அனைத்து கலைஞர்களையும் கலை ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ)

## ஞானவைரவருக்கு பொங்கல்

கோண்டாவில் வடக்கு அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மாபெரும் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.

இதற்கமைய அன்றையதினம் காலை 6 மணிக்கு அபிஷேகமும், தொடர்ந்து பொங்கலும் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு விஷேட பூசையும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ)




# இனந்தெரியாத நபர்களால் 7 வீடுகள் நொருக்கப்பட்டன

## 5 இலட்சம் பெறுமதியான பொருட்கள் சேதம்

யாழ்.உரும்பிராய்ப் பகுதியில் ஒரே வீதியில் உள்ள 7 வீடுகள் இனந்தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் இரவு அடித்து உடைக்கப்பட்டதுடன் ஒவ்வொரு வீட்டிலும் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியுடைய பொருட்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீடுகளில் இருந்தவர்கள் வெளியேறியிருந்தமையினால் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் நேற்று முன்தினமிரவு அதேயிடத்தினைச் சேர்ந்த பாடசாலை மாணவனொருவர் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இவ் வாள்வெட்டின் தொடர்ச்சியாகவே குறித்த வீடு உடைப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவனை உரும்பிராயினைச் சேர்ந்த இளைஞர்களே வெட்டிக் கொலை செய்ததாகவும் இதனையடுத்து கோண்டாவிலைச் சேர்ந்த இளைஞர்கள் ஆத்திரமடைந்து உரும்பிராயில் உள்ள இளைஞர்களின் வீடுகளை அடித்து நொருக்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-4)

# நெடியகாட்டுப் பகுதியில் கடை உடைத்து திருட்டு

(கரணவாய்)

வல்வெட்டித்துறை நெடிய காட்டுப் பகுதியில் உள்ள கடையொன்றின் மேற்கூரையைப் பிரித்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பலசரக்கு பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, நெடிய காடு பக்கத்தில் உள்ள கடலுக்கு அதிகாலை வேளை கடற்றொழிலாளர்கள் மேற்படி கடை வீதியூடாக சென்றுள்ளனர்.

இதன்போது கடைக்கு முன்பக்கமாக ஒரு மூடை அரிசி, துவிச்சக்கர வண்டியில் கட்டி வைத்தபடி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அவதானித்துள்ளனர்.

இதன்போது குறித்த கடையில் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றதை உணர்ந்த கடற்றொழிலாளர்கள் கடை உரிமையாளர்களுக்கு தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து கடை உரிமையாளர் அங்குவந்து கடையினுள் சென்று பார்வையிட்டனர். இதன்போது மேற்கூரை பிரிக்கப்பட்டு கடையின் பின் வாசல் உடைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக கடையின் உரிமையாளர் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் முறையிட்டதைத் தொடர்ந்து பொலிஸார் கடையை பார்வையிட்டதுடன் அங்கு நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இதில் அரிசி மூடைகள், கோதுமை மா முடை, சீனி, பால்மா பெட்டிகள், சவர்க்காரங்கள், மீன் ரின் வகைகள் உட்பட்ட பலசரக்கு பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவருகிறது. (அ-60)

## அலுவலகம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

17/3, கச்சேரி நல்லூர் வீதியில் இயங்கி வந்த வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் 151C, கச்சேரி நல்லூர் வீதியில் இயங்கி வருவதாக அதன் தலைவர் கெங்காதரன் அறிவித்துள்ளார். (அ)



யாழ்.அளவெட்டி அருணோதயா கல்லூரியின் 120 ஆவது அகவை நிறைவை முன்னிட்டு புதிய கட்டடத்திறப்பு விழாவும் அருணோதயா மலர் வெளியீடும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி கல்லூரியில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், கல்லூரியின் அதிபர் நா.கேதீஸ்வரன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் சண்முககுலகுமாரன் ஆகியோர் இணைந்து நாடாவினை வெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தே.சு.முன்னணியின் யோசனைகளை ஏற்றுக்கொண்டதாம் அரசாங்கம்

12 அம்ச யோசனைத் திட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது. கொள்கை அடிப்படையில் இந்த யோசனைத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு அறிவித்துள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் முஹமட் முசம்மில் தெரிவித்துள்ளார். 12 அம்ச கோரிக்கைகள் தொடர்பில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் தேசிய சுதந்திர முன்னணிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற் குழுவிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

யோசனைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு ஓர் செயற்றிட்டமொன்றை உருவாக்க இரு தரப்பினரும் இணங்கியதாகத் தெரிவித்துள்ளார். இந்த யோசனைத்திட்டங்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் விரைவில பேச்சுவார்த்தை நடத்த இவ யோசனைத் திட்டம் குறித்து ஜனாதிபதியின் நேரடிக் கருத்துக்களை பெற்றுக் கொள்ளவே விரும்புகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

**சாந்திகம்-உளவளத்துணை நிலையம் (8,8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை) கச்சேரி நல்லூர் றோட் அருகாமை நல்ல நிலையிலுள்ள கழிக்கப்பட்ட பொருட்கள், மர, இரும்புத் தளபாட வகைகள், கணனிப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருட்கள் (பகிரங்க ஏல விற்பனை)**

மேற்படி அலுவலக வளாகத்தில் வைத்து 30.06.2014 முற்பகல் 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன. ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 27.06.2014 பி.ப.3 மணிக்கு முன்பாக ரூபா 100 (மீளளிக்கப்படாதது) செலுத்தி தம்மைப் பதிவுசெய்து கொள்ள வேண்டும். பதிவு செய்தவர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள முடியும். கேள்விகளை ஏற்றல், நிராகரித்தல் விடயத்தில் கேள்விச் சபையின் தீர்மானமே இறுதியானது. உரிய பொருட்களை அலுவலக நேரங்களில் பார்வையிட முடியும். வேறு விபரங்களை நிதிக்கிளையில் அறிந்து கொள்ள முடியும்.

*தொ. இல.:- 021 321 1348 நிறைவேற்றுப் பணிப்பாளர் சாந்திகம் - 16.06.2014*

**சாந்திகம்-உளவளத்துணை நிலையம் (8,8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை) கச்சேரி நல்லூர் றோட் அருகாமை கேள்வி அறிவித்தல்**

பட்டக்கொட்டகையைப் பனை ஓலையால் வேய்தல் 19 அடி விட்டம் கொண்டது. பனை ஓலை வழங்கல், வேய்தல், துப்புரவு செய்து பாவனைக்கு கையளித்தல் உள்ளடங்கலாக உரிய கேள்விப்படிவத்தை ரூபா 250 (மீளளிக்கப்படாதது) செலுத்தி 27.06.2014 பி.ப. 3 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும். பூர்த்தி செய்த கேள்விப் படிவங்கள் 30.06.2014 நண்பகல் 12 மணிக்கு முன்னதாக இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியினை ஏற்றுக் கொள்ளல், நிராகரித்தல் விடயத்தில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். வேறு விபரங்களை சாந்திக நிதிப்பிரிவில் அறிந்து கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் 021 321 1348 மூலமும் அறிந்து கொள்ள முடியும்.

நிறைவேற்றுப் பணிப்பாளர் சாந்திகம்-16.06.2014 (சி-7684)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA VACANCY

Applications will be received by me up to 14 th July 2014 from suitably qualified candidates for the following post;

**1. POST – STENOGRAPHER GR.II (ENGLISH)**

(University of Jaffna and Vavuniya Campus of the University of Jaffna)

**QUALIFICATIONS :**

I. G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with credit passes in three subjects including English

II. Proficiency in English Stenography with the following minimum speeds;

Shorthand - 80 w.p.m
Typing - 35 w.p.m( Manual Type writer)
55 w.p.m( Computer )

**Notes :**

a) If suitable candidates are not available for recruitment according to the scheme of recruitment, applicants with lesser proficiency than specified, but who have successfully followed a course in English/Sinhala/Tamil stenography (as the case may be) of a recognized institution of which the duration is not less than one year, may be recruited as Trainee English/Sinhala/Tamil Stenographers (as the case may be ), on a fixed salary equivalent to the initial of the salary scale carrying the salary code U-MN 1 (III) per month. They may be placed in Grade.II within three years if they attain the specified proficiency. A Trainee who does not attain the specified proficiency within three years shall be discontinued.

b) The trainee period will not be taken into consideration for reckoning the required period for promotions.

Salary Scale : U-MN 1 (III A) Rs.16070-17x155-18705 p.m
Selection : Test and By Interview
Age Limit : Not more than 45 years
(Note - Age limit is not applicable for applicants in the Government / Departments/ State Corporation and statutory bodies.)

**Statutory Benefits:**

1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care

Application forms may be obtained from the Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/= per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of ***"Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna"*** together with a self- addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website ***www.jfn.ac.lk*** . Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- to the applications forms drawn in favor of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 14.07.2014

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in Public Service/ Corporations / Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointment if the applications routed through the Head of Department is not received.


***Registrar***
***2014.06.13*** (சி-7683)

### ஐ.நா.விசாரணையை ஆதரிக்கமாட்டோம் அமைச்சர்-திஸ்ஸ

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் இலங்கை தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட முடியாது. விசாரணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஆதரளிக்கக் கூடாது. யுத்தம் தனித்து வெற்றி கொள்ளப்பட்டதாகவும் உள்விவகாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்விவகாரப் பிரச்சின்னைகளுக்கு புறச்சக்திகளின் தலையீடு அவசியமற்றது எனவும் தெரிவித்தார். (அ)







## தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் A9 வீதி,ஆனந்தபுரம்,கிளிநொச்சி.

Institute of Technical Education
A9 Road, Ananthapuram, kilinochchi.

***மாற்றுவலுவுடையோருக்கான சுயதொழில் பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்***

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தால் எதிர்வரும் ஜூலை 2014 முதல் டிசெம்பர் 2014 வரை 6 மாத காலத்தைக் கொண்ட கீழ்வரும் பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளதால் இப் பயிற்சி நெறிகளுக்குப் பொருத்தமான மாற்றுவலுவுடைய ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சி நெறிகள்

01 .தையல் 02.கைத்தொலைபேசி திருத்தல்

மேற்படி பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ள விரும்பும் மாற்றுவலுவுடையோர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 23.06.2014 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். ஒழுங்காக பயிற்சியினை மேற்கொண்டு நிறைவு செய்பவர்கள் சமூக சேவைகள் திணைக்களத்திடமிருந்து கீழ்வரும் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியுடையவர்களாவர்.

- பயிற்சியில் ஈடுபடுவதற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா 110.00 வீதம் நாளொன்றிற்கு.
- பயிற்சியினை நிறைவு செய்யும் மாற்றுத் திறனாளிகளுக்கு குறித்த தொழிலை ஆரம்பிப்பதற்காக ரூபா 25000.00 வரையிலான கொடுப்பனவு
- பயிற்சிக்குரிய உபகரணங்களுக்காக ரூபா 10000.00 கொடுப்பனவு

***விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி:***


***அதிபர், தொழில்நுட்பகல்வி நிறுவனம், A9 வீதி,ஆனந்தபுரம், கிளிநொச்சி.***

***தொ.பே.இல:-021 228 5011*** (6778)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் நிரந்தர தீர்வை அமைச்சர் பெற்றுத் தருவார்

## கே.வி.குகேந்திரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வாழ்வாதாரப் பிரச்சினைகளை எங்கள் முன் கொண்டு வந்துள்ள உங்களுக்கு தீர்வை பெற்றுத்தர வேண்டியது எமது கடமையாகும். அமைச்சரிடம் சென்றால் எந்த விதமான உதவியையும் பெற்றுக் கொள்ளலாம் என ஆணித்தரமாக நம்பும் மக்கள் ஏன் அரசியலிலும் நிரந்தர தீர்வையும் பெற்றுத் தருவார் என நம்பிக்கை கொண்டு அவருக்கு அரசியல் பலத்தை கொடுக்க முன் வருவதில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) கேள்வியெழுப்பியுள்ளார்.

எழுதுமட்டுவாழ் பகுதி மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்திக் கொள்வதற்காக அப்பகுதி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பின் மத்தியில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்.


யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்திகளையும் அரசின் ஊடாக பெற்றுத் தருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான எமது கட்சி தான். இந்த யதார்த்த நிலையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் எமது கட்சி செய்த சேவைகள் மூலம் அரசியல் ரீதியில் பலம் மிக்கவர்களாக உங்கள் முன் வரமுடியாமல் இருப்பது வேதனை அளிக்கிறது.

1987 இல் இந்தியா கொண்டு வந்த வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வை பெற்றிருந்தால் இன்று முள்ளிவாய்க்கால் வரை சென்று ஒட்டுமொத்த அழிவுகளையும் கணடிருக்கத் தேவையில்லை. ஐ.நா விசாரணைக்கும் தேவை இருந்திருக்காது. நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிந்த கிழக்கை இணைத்து தீர்வை எட்டுவது இனி சாத்தியமற்ற ஒன்று.

நாங்கள் அழிவின் விளிம்பில் இருக்கின்றோம். வாருங்கள் அரசுடன் தமிழராகிய நாம் ஒன்றிணைந்து பேசுவோம் என்றால் தட்டிக் கழிக்கின்றார்கள் தமிழ்த் தேசிய வாதிகள்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அபிவிருத்தியை மட்டும் தான் செய்ய வேண்டும். அரசியல் அதிகாரத்தை தேசியவாதிகள் பெற வேண்டும் என தொடர்ந்தும் நீங்கள் சிந்தித்தால் அது தமிழர்களின் எதிர்காலத்தை மீண்டும் ஒரு அவலத்திற்கு கொண்டு சென்று விடும் என்பது தான் நியம் என்றார். (அ)

# பாக்.இராணுவ தளபதியின் வருகை பிற்போடப்பட்டது




பாகிஸ்தான் இராணுவ தளபதி ஜெனரல் ரஹீல ஷெரீபின் உத்தியோகபூர்வ இலங்கை விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. பாகிஸ்தான் இராணுவ தளபதி எதிர்வரும் 19 ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாகவும் இம் மாதம் 21 ஆம் திகதி தியதலாவ இராணுவ கல்வியியற் கல்லூரியின் கெடெட் பயிற்சி பெற்ற அதிகாரிகளின் பயிற்சி நிறைவு அணிவகுப்பில் விசேட விருந்தினராக கலந்துகொள்வாரென்றும் பாதுகாப்பு அமைச்சு முன்னர் அறிவித்திருந்தது. தவிரக்க முடியாத காரணங்களை முன்னிட்டே இவரது இலங்கை விஜயம் பிற்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 100-130 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 270 | 320 |
| தக்காளி | 200 | 180 | 170 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 50 |
| கோவா | 140 | 130 | 120 | 160 |
| கரட் | 200 | 160 | 190 | 200 |
| பூசணி | 70 | 70 | 70 | 70 |
| புடோல் | 70 | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 70-140 | 100 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 160 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 90-120 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 80-100 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 60-90 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 130 | 120 | 110 | 120 |
| கறிமிளகாய் | 260 | 160 | — | 200 |
| முருங்கைக்காய் | 120-200 | 300 | 250 | 160 |
| போஞ்சி | 140 | 180 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 | 20 |
| தேசிக்காய் | 80-130 | 140 | 110 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 10-35 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 | 120 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like (48)

கீத்து கரன்





அபி சனு





கரோலின் கெனி




அற்புதராஜா முகேஷ்ராம்




துசா துசா




இந்து இந்துஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தனையும் விக்கியையும் இந்தியா தனியாக சந்திக்கும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வட மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் ஆகியோரை தனித்தனியாக சந்திக்க இந்தியா தீர்மானித்துள்ளது.எதிர்வரும் காலங்களில் இரு வேறு சந்தர்ப்பங்களில் குறித்த இருவரையும் சந்திக்க இந்திய மத்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த சந்திப்புகள் தொடர்பிலான திகதிகள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடிக்கு சம்பந்தன் அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில் சந்திப்பு ஒன்றை நடாத்த அனுமதியளிக்குமாறு கோரியிருந்தார்.வட மாகாண முதலமைச்சர் சீ.வீ. விக்னேஸ்வரன் அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியிலும் சந்திப்பு நடாத்துவது குறித்து குறிப்பிட்டிருந்தார்.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் கருத்திற் கொண்டு இருவரையும் தனித்தனியாக சந்திக்க மத்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ)

# ஐ.நா. விசாரணைக்குழுவிடம் 2,30,000 முறைப்பாடுகள்

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் நிறுவப்பட்ட விசாரணைக்குழுவிடம் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக பாரியளவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகையின் செய்திக் குறிப்பில், நியூசிலாந்து நீதவான் கட்ரைட் உள்ளிட்ட 12 பேர் அடங்கிய விசாரணைக்குழுவினர் இலங்கை தொடர்பிலான விசாரணைகளை நடத்தவுள்ளனர். இந்த விசாரணைக் குழுவினரிடம் 2 இலட்சத்து 29 ஆயிரத்து 28 போலி மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது. தமிழகத்தில் உள்ள புலி ஆதரவாளர்களினால் இந்த மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

போலி முறைப்பாடுகளை செய்யும் நடவடிக்கையின் பின்னணியில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்ர குமாரன் செயற்பட்டு வருவதாக அதில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (2)

# வாஸிற்கு எதிராக மேலும் 115 சாட்சிகள்

கொழும்பு வட பிராந்தியத்தின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவிற்கு எதிராக மேலும் 115 பேர் சாட்சியமளிக்கவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே 162 சாட்சியாளர்கள் நீதிமன்றில் சாட்சியமளித்துள்ளனர். இதன்படி மொத்தமாக 277 சாட்சியாளர்கள் சாட்சியமளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பம்பலப்பிட்டி பிரபல வர்த்தகர் மொஹமட்சியாம் படுகொலை வழக்குடன் தொடர்புடையதாக வாஸ் குணவர்த்தன அவரது புதல்வர் ரவிந்து குணவர்தன உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருகின்றமை தெரிந்ததே. (அ)


## 6 ஆம் வகுப்பிலிருந்து 9 ஆம் வகுப்புவரை கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கான விசேட அறிவித்தல்

மொழியியல் மற்றும் கல்வியமைச்சின் ஆலோசனைக்கிணங்க பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு சனி,ஞாயிறு தினங்கள் மற்றும் கிழமைநாட்களில் மாலைநேரங்களில் ஆரம்ப சிங்களமொழி வகுப்புக்களும் ஆங்கிலமொழி வகுப்புக்களும் இந்து பௌத்த கலாசாரப் பேரவையால் யாழ்.மாவட்டத்தில் நடாத்துவதற்கு பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்ன தேரரூடாக பேரவையின் செயலாளர் MTS இராமச்சந்திரன் அவர்கட்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கான சம்பளத்தை மட்டும் தேசமானிய இராமச்சந்திரன் வழங்க மாணவர்களும் இந்து பௌத்த கலாசாரப் பேரவையும் மேலதிக அனுசரணை வழங்குகின்றனர். ஆறுமாத காலம் அல்லது 120 மணித்தியாலங்கள் கொண்ட இக்கற்கைநெறி ஆரம்பப்பகுதியான LEVEL-III பரீட்சைக்குரியதாக மொழியியல் மற்றும் கல்வியமைச்சின் ஆலோசனைக்கிணங்க பாடத்திட்டங்கள் சதகாம்செவன நிலையத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கற்கை நெறியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் கீழ்க்காணும் இடங்களில் பெற்றோரின் அனுமதியுடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

**யாழ்ப்பாண அலுவலகம், கைதடி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, வரணி மகா வித்தியாலயம், நெல்லியடி மத்திய கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்டோறியாக்கல்லூரி, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி,கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.**

மானிப்பாய், மருதனார்மடம், நெல்லியடி, இணுவில், மல்லாகம், ஆகிய இடங்களில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய இடங்களில் ஜூலை மாத முதல்வாரத்தில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளதால் இம்மாத இறுதிக்குள் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**மேலதிக விபரங்களுக்கு-**
**0212227542, 0212220021**
**இந்து பௌத்த கலாசாரப் பேரவை,**
**29. பழம் வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

(சி-7680) **நிர்வாகம்**



**பிரதம குருவின் ஆசியுரை**



அம்பிகை அடியார்களே!

ஈழவள நாட்டிலே இனிய வளங்கள் நிறைந்த யாழ்ப்பாணத்தின் கண்ணே சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஞான பூமியான உரும்பிராய்தன்னில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் காளி அம்பாளின் திருக்கோவிலில் அழகுச் சிற்பங்களும் கலை மிளிரும் கட்டட அமைப்பும் கண்கவர் வண்ணமும் கொண்ட அதி சுந்தர திரிதள இராஜகோபுர மஹாகும்பாபிஷேகம் இன்றைய தினம் நடைபெறுகின்றது. ஆலய பரிபாலன சபையினர்கள், அடியார் பெருமக்கள், கோபுரத்தை அமைத்தவர்கள், கட்டட கலைஞர்கள் எல்லோருக்கும் அம்பாளின் திருவருட் கடாட்சம் கிடைக்க அம்பாளின் பாத கமலங்களை பணிந்து நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து

ஆலய பிரதம குரு திஜாக தி. கிருஸ்ணமூர்த்தி குருக்கள்.

**அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்**



உரும்பிராயில் எழுந்தருளி தன்னைத் தினமும் தொழுவார்க்கு இரங்கி அருள்பாலிக்கும் காமாட்சி அம்பாள் அனைவரையும் காத்தருளுகின்றார். சிறிய ஆலயமாக இருந்த காளி கோயில் திருப்பணிகளால் உயர்ந்து அழகிய திருக்கோயிலாக விளங்குகின்றது. அலங்கார உற்சவம் நடைபெற்ற இவ்வாலயம் மகோற்சவம் நடைபெறும் பெரும் ஆலயமாக வளர்ச்சியடைந்துள்ளது.

இவ்வாலயத்தின் வளர்ச்சியின் சிகரமாக, ஆலயத்தின் திரிதள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு இன்றைய தினம் மிகச் சிறப்பாக மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள்.

இந்த ஊரும் இவ்வாலயமும் மேன்மையுறும் வண்ணம் அழகுச் சிற்பங்களும் கலை மிளிரும் கட்டட அமைப்பும் கண்கவர் வர்ணமும் கொண்ட இராஜ கோபுரம் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது.காமாட்சி அம்பாள் ஆலய திருப்பணிகளுக்கும் இராஜகோபுரம் அமைவதற்கும் உதவி புரிந்த அனைத்து அடியவர்களுக்கும் அம்பாளின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

ஏ.ஜெகதீஸ்வரன் ,தலைவர்

**உரும்பிராய்**
**காளி கோவில் என வழங்கும்**
**அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோவில்**
**நூதன திரிதள இராஜகோபுர**
**பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**



(6763)

**ஆனி மாதம் 04 ஆம் நாள் (18.06.2014) புதன்கிழமை காலை 9.00 மணி யாக பூஜை பகல் 11.15 மணிக்கு இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம்.**

**இவ்வண்ணம்:**
**ஆலய பரிபாலன சபையினர்**

**சோதிக்கும் இறைவனே சாதிக்கவும் வைப்பான்**



சகல செல்வங்களும் நிறைந்த ஈழத்திருநாட்டில் சைவமும் தமிழும் போற்றப்படுவதும் அறம் வளர்க்கும் சான்றோர்கள், பெருமக்கள் என நல்லோர்கள் வாழ்ந்துவரும் உரும்பிராய்ப் பதியிலே அருள்பாலித்துக் கொண்டு இருக்கும் காளியம்பாள் இராஜகோபுரம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான ஊக்கத்தை என் மனதில் அள்ளி வழங்கினார். தடைகளின்றி என் சக நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன் திருப்பணி உதவிய அடியவர்கள், புலம்பெயர் அடியார்கள் ஆசார லீலைகளை கற்றுத் தந்த குருமாரின் ஆசியுடனும் இராஜகோபுர கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது. சகல பக்தர்களுக்கும் என் சிரம் தாழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வாழ்த்துகின்றேன்.

ச.ஸ்ரீகெங்கபாலா, பொருளாளர்



மனுப்பக்குவத்தை அழியாப் பேரின்ப வீட்டிற்கு இட்டுச் செல்லும் வழியைக் காட்டி நிற்பவள் அன்னை. அன்னையின் அருளை அறிபவரே அறிவர்

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஈழவளநாட்டிலே உரும்பிராய் நகரிலே வேம்பன் சீமா வளவில் 1902 ஆம் ஆண்டு ஒரு புளியமரம் தறித்ததன் மகிமை அருணரின் மனைவியின் உடம்பில் அம்பாள் ஆட்கொண்டருளி அவ்விடத்தில் விளக்கு வைக்கும்படி வேண்டினார். அருணர் சின்னத் தம்பி என்பவர்கள் அவ்விடத்தில் உள்ள பூவரசுக்கு விளக்கு வைத்து அம்பாளைத் தரிசித்து வரும்வேளை வேப்பமரம் ஒன்று தலவிருட்சமாக வளர்ந்து மூலவர் தளமாக குளிர்ச்சியுடன் வீற்றிருக்கிறார். அம்பாள். விசேட தினங்கள் அனுஷ்டிக்கப்பட்டு பக்தி விசுவாசத்தால் மஹோற்சவம், கௌரி, வரலக்சுமி மேலும் உற்சவங்கள் இடம்பெற்ற வேளை உரும்பிராய் புலம்பெயர் லண்டன் வாழ் மக்களால் காமாட்சி அம்பாள் கல்யாண மண்டபம், சுற்று மதில்கள் மத்தியில் அமையப் பெற்றது. தற்போது மெருகூட்டும் சிற்ப வேலைகள், வர்ண வேலைகள் கொண்ட இராஜ கோபுரம் அம்பாளுக்கு அமையப் பெற்று கோபுர கும்பாபிஷேகம் இடம்பெற்றிருக்கின்றது. திருப்பணிகளை அள்ளி வழங்கிய தொண்டர்கள், பக்தர்கள், புலம்பெயர்ந்தவர்கள், பரிபாலன சபையினர், கட்டட ஒப்பந்தகாரர்களுக்கும், சிற்ப வேலைகள், வர்ண வேலைகளை செய்து முடித்தவர்களுக்கும் அம்பாளின் நல்லாசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

ச.பத்மலோஜினி,செயலாளர் பரிபாலன சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

838

## வெண்டைக்காய் வைத்தியம்

தேனுகா, அம்மாவைப் பார்த்தாள். அம்மா இரண்டு கைகளால் தலையை அழுத்திப் பிடித்தபடி படுத்து இருந்தாள். இப்போது எல்லாம் அம்மாவுக்கு ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாகி விடுகிறது.

தலைசுற்றல், மயக்கம் வருகிறது;

அம்மா டாக்டர்கிட்டே போகலாம் வா என்றாள் தேனுகா. அங்கே போனா கன்சல்டேஷன்,பிளெட் டெஸ்ட், மருந்து, ஊசின்னு ஐந்நூறு ரூபா ஆயிடும்.

இன்னிக்குத் திகதி இருபது. மாசக் கடைசியிலே அத்தனை பணம் செலவழிக்க முடியுமா?

உன் தம்பி சுரேந்தருக்கு அடுத்த வாரம் பிறந்தநாள் வருது. புது டிரஸ் வாங்கனுமே.... எல்லாத்தையும் யோசிச்சுதான் சும்மா இருக்கேன் என்றாள் அம்மா.

அதுக்காக முக்கியமான மருத்துவச் செலவைக் குறைச்சுக்கிறியா? எனக் கேட்டாள் தேனுகா.

வேற வழி இல்லையே. பக்கத்து வீட்டு அனிதா அம்மாவுக்கும் சர்க்கரை நோய் இருக்குது.

அவங்க கை வைத்தியம் பண்ணிக்கிறாங்க. நானும் அதைத்தான் செய்றேன் என்றாள் அம்மா.

தேனுகா பேசாமல் இருந்தாள். அனிதா அம்மாவுக்கும் ரத்தத்துல சர்க்கரை அளவு அதிகமாயிருச்சாம்.

வெண்டைக்காய் காம்புகளை ராத்திரி ஒரு டம்ளர் தண்ணியிலே ஊறவெச்சுட்டு காலையில் காம்புகளை எடுத்துட்டுத் தண்ணியைக் குடிச்சாங்களாம்.

சர்க்கரை லெவல் நார்மலுக்கு வந்துடுச்சாம்; அதைத்தான் நானும் செய்றேன் என்று மேலும் சொன்னாள் அம்மா.

அம்மா செய்வது சரியில்ல என்று நினைத்தாள் தேனுகா. அதை எப்படி புரிய வைப்பது என்று யோசனையில் மூழ்கினாள்.

ஒரு நோய் தீர வேண்டுமானால் நோயின் தன்மையை அறிந்து சரியான மருத்துவரை ஆலோசித்து மருந்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இல்லை என்றால் நோய் குணமாகாது. இப்படி நினைத்த போது தம்பி சுரேந்தர் வீட்டுக்குள் நுழைந்தான்.

அவனிடம் அம்மா டேய் மிக்ஸி சரியா ஓட மாட்டேங்குது. மெக்கானிக் கடையிலே குடுத்து சரிசெஞ்சுக்கிட்டு வா.

அரைக்க கரைக்கக் கஷ்டமாக இருக்கு.

காலையில் அப்பாவுக்கு இட்லிக்குச் சட்னி அரைக்க முடியல. இட்லிப்பொடி மட்டுமே தொட்டு சாப்பிட்டுப் போனாரு என்றாள் படுத்தபடியே.



மெக்கானிக் எல்லாம் வேணாம். நானே சரி பண்ணிடறேன் என்றான் சுரேந்தர்.

உனக்கு எலெக்டிரிக்கல் வேலை பத்தி என்ன தெரியும்? என்றாள் அம்மா.

அப்படி இப்படி செஞ்சுபார்த்து தெரிஞ்சுக்க வேண்டியதுதான் என்றான் சுரேந்தர்.

நீ ஏதாவது செஞ்சு வைப்பே. அது ஷாக் அடிக்கும்... வேணாம்ப்பா அந்த விபரீதம். கடையிலேயே குடுத்துடு என்றாள் அம்மா சீரியஸாக.

தேனுகாவுக்கு பொறி தட்டியது. மாலையில் அவள் வீட்டு வேலைகளில் அம்மாவுக்கு உதவினாள்.

இப்போது அம்மாவுக்கு தலை சுற்றல் நின்று விட்டது. ஆனால் களைப்பாகக் காணப்பட்டாள்.

மறுநாள் காலையில் அவர்கள் அருகில் இருக்கும் அணைக்கட்டுக்கு சுற்றுலா சென்றார்கள்.

மிகப் பெரிய மதகுகளின் வழியாகத் தண்ணீர் பாய்வதை, பயம் கலந்த ஆச்சரியத்தோடு வேடிக்கை பார்த்தாள் தேனுகா.

சாதுவாக நிற்கும் தண்ணீர், மதகுகளைத் திறந்தவுடன் எத்தனை வேகத்தோடு பாய்கிறது.

அந்த வேகத்தைப் பயன்படுத்தி மின்சாரம் எடுக்கிறார்கள் என்று தெரிவித்தார் அப்பா.

தேனுகா குடும்பத்தினர் தாங்கள் கொண்டு வந்திருந்த மதிய உணவை புற்தரையில் அமர்ந்து சாப்பிட்டார்கள். எல்லோருக்கும் நடந்து நடந்து கால்கள் வலித்தன.

அழகிய மரங்கள், புற் தரைகள், சலசலவென்று கொட்டும் தண்ணீர், வெயில் நேரத்தில் கூடக் குளுகுளுவென்று இருக்கும் சூழல் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன.

டிரைவரை சாப்பிடக் கூப்பிடு என்றார் அப்பா.

கார்களை நிறுத்தி இருக்கும் இடத்திற்கு சுரேந்தர் சென்றான். அங்கே அவர்கள் வந்த காரும் இல்லை டிரைவரும் இல்லை. இதை அப்பாவிடம் தெரிவித்தான்.

டிரைவருடைய செல் நம்பரை நான் வாங்கி வைத்திருக்கிறேன் என்ற தேனுகா தனது கைபேசியை எடுத்து தொடர்பு கொண்டாள்.

தொடரும்...........

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

06.2014
18

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 618 - லீ யுவான் சீனாவின் பேரரசனாக முடி சூடினான். டாங் அரச வம்சம் அடுத்த மூன்றாண்டுகளுக்கு சீனாவை ஆண்டது.
- 1429 - ஜோன் ஆஃப் ஆர்க் தலைமையில் பிரெஞ்சுப் படைகள் ஆங்கிலப் படையினரைத் தோற்கடித்தன..
- 1767 - பிரெஞ்சு மாலுமி சாமுவெல் வாலிஸ் பசுபிக் பெருங்கடலில் டாகிட்டி தீவை முதன் முதலாகக் கண்டான்.
- 1815 - வாட்டர்லூவில் நிகழ்ந்த போரில் நெப்போலியன் பொனபார்ட் தோல்வியுற்றதை அடுத்து தனது அரச பதவியை இரண்டாவதும் கடைசித் தடவையாகவும் இழந்தான்.
- 1869 - இந்திய ரூபாய் அதன் வெள்ளியில் குறிக்கப்பட்ட துணை அலகுகளுடன் இலங்கையின் சட்டப்படியான நாணயமாக அறிவிக்கப்பட்டது.
- 1948 - மலேசியாவில் கம்யூனிஸ்டுகளின் கிளர்ச்சியையடுத்து அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.
- 1953 - எகிப்தில் மன்னராட்சி முடிவடைந்ததை அடுத்து குடியரசாகியது.
- 1979 - சோவியத் ஒன்றியத்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் இரண்டாம் சால்ட் ஒப்பந்தம் கைச்சாத்தாகியது..
- 1981 - கலிபோர்னியா, சான் பிரான்சிஸ்கோவின் மருத்துவ ஆய்வாளர்கள் எயிட்ஸ் நோயை முறைப்படியாகக் கண்டுபிடித்தனர்.
- 1981 - அமெரிக்காவில் மசாசுசெட்ஸ் மாநில நாடாளுமன்றத்தில் தமிழ் ஈழத்தை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1983 - சாலஞ்சர் விண்ணோடம்: சலி றைட் விண்ணுக்குச் சென்ற முதலாவது அமெரிக்கப் பெண் ஆனார்.
- 1985 - விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் படையினருக்கும் இடையில் முதலாவது போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.
- 2001 - நாகா கிளர்ச்சிக்காரருக்கும் இந்திய அரசுப் படைகளுக்கும் இடையில் போர் நிறுத்தத்தை நீடிக்க மணிப்பூரில் எதிர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.
- 2004 - ஜெனீவாவில் CERN எனப்படும் ஐரோப்பிய துகள்-இயற்பியல் ஆராய்ச்சி மையத்தில் 2 மீற்றர் உயரமுடைய நடராஜர் சிலை நிறுவப்பட்டது.
- 2006 - கசக்ஸ்தான் கஸ்சாட் என்ற தனது முதலாவது செய்மதியை அனுப்பியது.

### பிறப்புகள்

- 1908 - கக்கன், தமிழக அரசியல்வாதி (இ. 1981)
- 1942 - தாபோ உம்பெக்கி, தென்னாபிரிக்க ஜனாதிபதி
- 1960 - தியாகராஜா மகேஸ்வரன், இலங்கையின் அரசியல்வாதி (இ. 2008)

### இறப்புகள்

- 1873 - லீவை ஸ்போல்டிங், யாழ்ப்பாணம், உடுவில் அமெரிக்க மிஷனைச் சேர்ந்தவர், தமிழறிஞர், ஆங்கில-தமிழ் அகராதியைத் தொகுத்தவர்.
- 1971 - போல் காரெர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1889)
- 2009 - அலி அக்பர் கான், இந்துஸ்தானி இசைக் கலைஞர் (பி. 1922)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



73

இதை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்ளப் போகிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இருந்தாலும் எழுதுகிறேன்.

பூமியில் எந்த இடத்தில் சென்று விழப்போகிறோம் என்று தெரியாமலேயே விண்ணிலிருந்து விடைபெறும் மழைத்துளிகளைப்போல இந்த என் எழுத்து எப்படி மதிப்பீடு செய்யப்படும் என்று தெரியாமலேயே இதை நான் எழுத எத்தனிக்கிறேன்.

இனிமேல் சந்திக்க முடியாத ஒருத்தியை இங்கே சிந்திக்கப் போகிறேன்.

அவளுக்கும் எனக்கும் உள்ள வயது வித்தியாசம்-

குறைந்த பட்சம் 12.

அதிகபட்சம் 15.

அவள் பெயர் எனக்கு மறந்து விட்டது.

மழை ஊறிய போட்டோ மாதிரி அவள் முகம் மட்டும் எனக்கு இன்னும் மங்கலாய் ஞாபகம்.

இப்போதெல்லாம் எங்களூர்த்தெரு வழியே எப்போது போனாலும் காரை பெயர்ந்த அந்த வீட்டைக் கடக்கும் போதெல்லாம் காரை மெதுவாய் ஓட்டச் சொல்கிறேன்.

நினைவுகள் கண் கசக்குகின்றன.

அந்த அரசமரம்- அந்த ஆடிக் காற்று- தரை உரசும் சீமைக்கருவேலவ் சிறு மரங்கள் வீட்டுக்குப் பின்புறம் மொய்த்திருக்கும் சில்லி முட்கள்- பல்லாங்குழிகள்- புளிய விதைகள் இவைகளோடு சாயம்போன புடவையோடு அவள் முகமும் என் நினைவுகளின் கூட்டிலிருந்து எட்டி எட்டிப் பார்க்கின்றன.

இதமாய் இமை கவிழ்கிறேன்.

பனிமூட்டம்; மனசுக்குள் பனிமூட்டம்.




நினைவோட்டம்; ஏதேதோ நினைவோட்டம்.

அவள் என்னைத் தலைகோதியிருக்கிறாள்; தழுவியிருக்கிறாள்; அன்பு செய்திருக்கிறாள்; ஆறுதல் பேசியிருக்கிறாள்; என்னைச் சீண்டியிருக்கிறாள்; சிரிக்க வைத்திருக்கிறாள்.

உடம்பில் ஒரு மயில் இறகு ஸ்லோமோஷனில் பயணம் செய்வது மாதிரி அவளால் எனக்குள் ஓர் இனம் தெரியாத சுகம் இருந்திருக்கிறது.

எனக்கு வயது பத்து.

அவளுக்கு வய்து இருபத்திரண்டோ இருபத்தைந்தோ இருந்திருக்கலாம்.

நான் அவளோடு சிநேகம் ஆனேனா, அவள் என்னோடு சிநேகம் ஆனாளா என்பது என் நினைவுக்குச் சிக்கவில்லை.

கூட்டில் கண் விழித்த குருவிக்குஞ்சாய் அந்த கிராமத்தையே முதன் முதலாய் வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு, அவள் வீடு ஒரு வசீகரமான வாசக சாலையாய் விளங்கியது.

எங்கள் ஊருக்கு அவர்கள் புதிதாய்க் குடி வந்திருந்தார்கள்.

ஊரோடு கோபித்துக்கொண்டு ஒதுங்கி நிற்கும் அந்த வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டார்கள்.

வயதான தாய்; இரண்டு மூன்று பருவப் பெண்கள்.

மற்ற பெண்களின் உடைகள் மட்டும் ஞாபகமிருக்கின்றன; முகங்கள் ஞாபகமில்லை.

அவள் இளையவளா, மூத்தவளா என்பதும் எனக்குத் தெரியாது.

அங்கே ஆடவர்கள் யாரும் இல்லை. அந்த வீட்டில் உலவிய ஒரே ஆண் நான்தான் என்று நினைத்தேன்.

அவர்கள் வீட்டில் கேரம்போர்ட் கிடைக்கும்.

பல்லாங்குழி இருக்கும்.

பத்திரிகைகள் கிடக்கும்.

எங்கள் ஊருக்குள் எனக்குத் தெரிந்து வீட்டுக்குள் பத்திரிகை வரவழைத்த முதல் குடும்பம் அதுதான்.

நான் பத்திரிகை படிக்க ஆரம்பித்தது அவள் வீட்டில்தான்.

புரியாத துணுக்குகளுக்கு அவளிடம் அர்த்தம் கேட்பேன்.

என்னைத் தொட்டிழுத்து அருகில் வைத்து அர்த்தம் சொல்வாள்.

(தொடரும்)

-வைரமுத்து-

# உங்கள் பிறந்த எண் 04 இல் கூட்டெண் 05 இன் பலன்கள்



24

**தோற்றம்**

இது ராகுவுடன் புதன் சேர்ந்த ஆதிக்கம் ஆகும். உயரமாக இருப்பர். மாநிறமுள்ளவர். சிறிய முகமும் முறம் போன்ற தலையும் இருக்கும். உடல் அளவான சதைப் பிடிப்புடன் இருக்கும். வாட்சாட்டமாக இருப்பர். பற்கள் வரிசையாக, சிறியவையாக இருக்கும். சிறிய வாய் பருத்த உதடுகளுடன் இருக்கும். கை, கால், கழுத்து எல்லா உறுப்பும் அளவோடு அழகாக இருக்கும். மூக்கு எடுப்பாக நேர்கோட்டில் அழகாக இருக்கும். கண்கள் கவர்ச்சியான பார்வையுடன் இருக்கும்.

**குணம்**

பார்வையில் இவர்களைப் பற்றி ஒரு முடிபிற்கு வர இயலாது. சாதுவாக ஏதும் அறியாதவர்போல இருப்பர். ஆனால் சரக்கு உள்ளவர். மிகவும் அறிவுள்ளவர். நிதானம் இல்லாமல் பரபரப்புடன் எதற்கும் அவசரப்படுவர். விளையாட்டு, சூதாட்டம் இவற்றை வெல்ல இந்த குணம் உதவும். நிறையப் படிப்பர். படிப்பில் தடையேற்படும். வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்படும். தாமே பல சங்கதிகளை அறிவர். நட்பிற்கு அடிமையாவர். நண்பர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வர். இதனால் சங்கடம் நேரும்.

பிறரையும் விரைவுபடுத்துவர். சுறுசுறுப்பாக இருப்பார். குடும்பப் பற்று இருக்கும். சகோதர சகோதரிகளிடம் பிரியமாக இருப்பர்.

வேளைக்கு உண்ணாமல் உறங்காமல் இருப்பார். வேலைகளை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக நடப்பர். அனைத்தும் அறிந்துகொள்ள ஆர்வமிருக்கும். தமிழ்மொழியுடன் வேற்று மொழியும் அறிவர். பிற தேசத்தில் போய்ப் பிழைப்பர்.

ஒருபோதும் தம் போக்கில் மாற மாட்டார். இவரை மிக நெருங்கி இருப்பவரும் புரிந்து கொள்ள முடியாது. பயணங்களில் விருப்பம் இருக்கும். கொஞ்சம் நரம்பு பலவீனமடைவர். பிறரைப் புரிந்துகொண்டு ஏற்றபடி நடப்பர். திடீரென எதிர்க்கவும் செய்வர்.

பிறர் வேலையுடன் தம் வேலையையும் பார்த்துக் கொண்டு விடுவார். எச் சூழ்நிலையிலும் இருக்க முடிந்தவர். சுயநலம், தற்பெருமை இருக்கும். வாய் ஜம்பமும் இருக்கும். பணிவும் இருக்கும். உடன் இருப்பவர் பொறுப்பை ஏற்க மாட்டார். அழகைக் காணப் பிடிக்கும்.

நண்பர்களை விரும்பிக் கூடி இருப்பர். நன்கு பழகி உதவிகரமாக இருப்பர். நண்பர்களையும் பயன்படுத்திக் கொள்வர். எப்போதும் கூடி இருக்கவும், தனித்திருக்கவும் முடிந்தவர். கடன் வாங்குவார். கொடுப்பார்.

வாழ்வில் நலம் பெற மட்டும் காரியசித்திக்காக என்றே கடவுள் பக்தி கொண்டிருப்பார். புத்தகம் படிப்பது, குறுக்கெழுத்து புதிர் போடுவது செய்வர். சுவை, உயர்ந்த பதார்த்தம் எனப் பாராமல் உண்டுவிட்டுச் சட்டென வேலையைக் கவனிப்பார். பிறர் தொழிலைக் கவனித்து நடத்தவே விரும்புவார். சொந்தத் தொழில் நடத்த அஞ்சுவர்.

அழகை ரசிப்பார். ஆனாலும் இவரிடம் அழகுணர்வைவிட அவசரக் கோலமே அதிகம் இருக்கும். அசட்டுத் துணிவும் இருக்கும். தம் வேலையைத் தாமே செய்ய அறியார். பெற்றோரை விட்டுப் பிரிந்தே இருப்பர். நண்பராலேயே வாழ்வு பெறுவர். நுனிப்புல்மேய்வர். மேம்போக்காகவே எதிலும் நடப்பர். ஆனால் நல்ல நிர்வாகியாக இருப்பார். ஆனால் அனாச்சாரி.

துணிவு ஓரளவே இருக்கும். சராசரி மனிதரைக் கவரும்படி பேசுவார். எவரையும் ஏதாவது கொடுத்து சரிக்கட்டவே பார்ப்பார். செலவாளிபோலக் காட்டிக் கொள்ளும் இவர்கள் சிக்கனக்காரரே. தமக்கு அதிகம் செலவழித்துக் கொள்வர். கொடூர மனமும் இருக்கும். ரகசியம் வைத்திருப்பார். சர்வ சாதாரணமாகத் தப்பு செய்வார். போதைப் பழக்கம், பெண்சபலம், சூதாடுதல் எல்லாமே இவரிடம் இருக்கும். சுகத்திற்காக வாழும் சராசரி மனிதரிவர்.

**குடும்பம்**

வருமானம் உயரும். தாழும். சாதாரண நிலையிலிருந்து முன்னுக்கு வருபவர். கலப்புத் திருமணம் புரிவார். மண வாழ்வு நீட்டிக்காது. வாரிசும் இருக்காது. பிடிவாதம், புரட்சி எனும் போக்கால் குடும்பமின்றிப் போகும். சண்டை சச்சரவின்றி இவர்களால் தூங்க முடியாது. பெற்றோர் ஆதரவின்றி தனித்தே வசிப்பர்.

வீடு வாசல் உண்டாகும். பொருளாதாரம் இருக்கும். ஏனோ தானோ என ஒரு குடும்ப வாழ்க்கை சுகமற்று நடக்கும். இவரால் பிறருக்குப் பெரிய நன்மை ஏற்பட்டு விடாது. சாதுபோல நாகரிக மனிதராக வாழும் இவர் நிறையச் சிறு சிறு குற்றம் புரிவார். மனதிற்குள் புழுங்குவார்.

**தொழில்**

தொழிற்சாலைகளில் நிர்வாகத்தில் வேலை புரிவார். ஏஜண்டுகளாகவும் போக்குவரத்துத் துறை, அச்சகம், பத்திரிகைத்துறை, பதிப்பகம், அரசியல் எனப் பலவகை வேலைகளுக்கு ஆதாரமான தொழிலகங்களில் அலுவலகங்களில் இருப்பார். தகவல்துறை, பிரதிநிதிகளாக, தூதுவர்களாகவும் மீடியேட்டர்களாகவும் பணி செய்வர். எங்கு வேலை செய்தாலும் நீண்ட நாள் இருப்பர். சிரமங்களைத் தாக்குப் பிடிப்பர். பேச்சு, எழுத்து பயன்படும் வேலைகளிலும் சிறப்பர்.

**நோய்**

வெப்பத்தோடு கபமும் இவர்களைப் பாதிக்கும். சாதாரணமாக அடிக்கடி உடம்பு நோயுறாது. குடிப்பழக்கம் இருந்தால் வயிற்றில் அறுவை நடக்கும். விபத்து ஏற்படும். கண் கோளாறு, பாதிப்பு ஏற்படும். இதயம் பலவீனப்படும். வாத பாதிப்பும், சர்க்கரை நோயும் 50 வயதுக்கு மேல் தாக்கலாம். மஞ்சள் காமாலையும் வரக்கூடிய நோயே!

(தொடரும்)

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறல் கடப்பாட்டிலிருந்து இலங்கை அரசு தப்பிக்க முடியாது

**மோடி அரசிடமிருந்து இலங்கை அரசு கூடுதலாக எதிர்பார்க்கிறதா என்னும் தலைப்பில் சண்டே லீடரில் ஜெகன் பெரேரா எழுதிய கட்டுரை வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரமாக்கப்படுகிறது.**

**தமிழில்: – யோகர் –**

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி தெரிவானதை இலங்கை அரசு தனக்குப் பக்கச் சார்பாக இந்தியாவை ஈர்த்துக் கொள்வதற்கு கிடைத்த ஓர் புதிய சந்தர்ப்பமாகவே எண்ணுகின்றது.

இலங்கை ஜனாதிபதி தொலைபேசி மூலம் மோடிக்கு தனது பாராட்டைத் தெரிவித்துக் கொண்டதன் மூலம் இந்தியாவுடனான உறவுகளை மீளவும் கட்டியெழுப்புவதற்கு அவர் முனைந்து பெற்றுக் கொண்டிருக்கிறார். என்பது வெளிப்படை.

இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்திய நிலைப்பாடு காரணமாகவும் அதிகாரப் பரவலாக்கம் பற்றிய வாக்குறுதிகள் வழங்கி அவற்றை நிறை வேற்றாத நிலையில் இந்தியாவின் முன்னைய அரசினை ஏமாற்றி திசை திருப்ப எடுத்திருந்த தந்திரோபாய முயற்சிகள் காரணமாகவும் இந்தியாவுடனான உறவுகளை இலங்கை ஏற்கனவே சிக்கலுக்குள்ளாக்கியிருந்தது.

கடந்த இரு வருடங்களின் போது "ஐ.நா.ம.உ" சபையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததைத் தொடர்ந்து மேலும் சிக்கலுக்குள்ளாகியிருந்த உறவு நிலை இந்த வருடத்தில் ஐ.நா.ம.உ. சபை பிரேரணை மீதான வாக்களிப்பை இந்தியா தவிர்த்துக் கொண்ட பின்னரே ஓரளவு இயல்பு நிலைக்குத் திரும்பத் தொடங்கியது.

மோடியுடைய பா.ஜ.கட்சியின் வெற்றியைத் தொடர்ந்து அவருடன் தொலைபேசி அழைப்பொன்றினை உடனடியாகவே ஏற்படுத்திக் கொள்வதற்கு ஜனாதிபதியினால் முடிந்திருந்த அவரது திறமையொன்றே இந்தியாவுடனான விசேட விதமான உறவுகள் எதிர்காலத்தில் எவ்வித யதார்த்த பூர்வமானவையாக இருக்கும் என்பதை வெளிக்காட்டுகின்றது.

புவியியல் மற்றும் சரித்திர ரீதியாகவும் ஏற்பட்டிருக்கும் இந்தவிதமான ஓர் அரிய சந்தர்ப்பம் மிகுந்த அவதானத் துடன் கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியமாகும்.

ஆனாலும் இது போற்றுவதற்குரிய ஒரு சொத்தாகவே கருதப்படவேண்டுமே தவிர வெறும் சம்பிரதாயத்திற்கான ஒன்றாக பேணப்படலாகாது.

ஜனாதிபதி தனது பாராட்டுக்கான தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டபோதே அவருடன் பேசுவதில் பெரு மகிழ்ச்சியடைவதாகக் கூறி புதிய இந்தியப் பிரதமரது சத்தியப் பிரமாணத்தில் கலந்து கொள்வது என்ற தனது தீர்மானத்துடன் மிகவும் விரைவான ஓர் ஆரம்பத்தை ஏற்படுத்திக் கொண்டதாகவே மனதில் நினைத்துக் கொண்டார்.

புதிய இந்தியத் தலைமைத்துவத்தில் புதுமையும் இதமானதுமான ஒரு இராகம் இழையோடுவதாகவே இலங்கையின் அரச தலைமைத்துவம் நம்புகிறது அல்லது உணருகிறது என்பது தெளிவாகத்தெரிகிறது.

இருநாடுகளின் தலைவர்களுக்கும் இடையில் ஒத்த தன்மைகள் காணப்படுகின்றன. மக்கள் மத்தியில் அபிமானத்திற்குரியவர்களாக இடம் பிடித்திருக்கும் இவர்கள் இருவரும் தத்தமது தாய் மொழியில் மிகச் சிறப்பாக உரையாடக்கூடிய பேச்சாளர்கள்.

இந்த இருவருமே தேசியவாதம் என்ற வசிய சக்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி மட்டிலான வாக்குறுதிகளூடும் தத்தமது சொந்த சமூகத்தைச் சேர்ந்த பெரும்பான்மை வாக்காளர்களை வெற்றிகரமாக ஒன்று திரட்டுகிறவர்களாகவே இருக்கின்றனர்.

அதேநேரத்தில் அவர்களது சொந்த சமூகங்களுக்குள்ளான மாநில தேர்தல் வெற்றிகளும் துருவப்படுத்தல் அடிப்படையையே வெளிப்படுத்துவதாக இருக்கின்றன.

பிந்திய தேர்தல் ஒழுங்குகளுக்கு அமைவாக முதன்முறை இடம்பெற்ற கடந்த தேர்தல் இயல்பின் படி பா.ஜ.க. பாராளுமன்றத் தொகுதிகளுக்கான அறுதிப் பெரும் பான்மையாக பெற்றிருந்த போதும் மொத்த வாக்கு எண்ணிக்கையின் படி மேலதிக வாக்குகளாக 31 வீதமான வாக்குகளையே அதிகப்படியாகப் பெற்றுக் கொண்டதும் நோக்கத்தக்கது.



### புதிய விளக்கம் ஒன்று உருவாகுதல்

புதிய பா.ஜ.க. அரசின் வருகையுடன் தனது இந்திய இணைத் தரப்பு சம்பந்தமாக புதிய விளக்கம் ஒன்றின் அடிப்படையில் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைப்பாடொன்றினை எட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பம் இலங்கை அரசுக்கு கிடைத்திருந்தது.

இந்த விதமான சந்தர்ப்பம் இலங்கைக்கு அனுசரணையாக அமைவதற்கு இரண்டு காரணிகள் இருந்தன.

அவற்றில் முதலாவது பா.ஜ.கவுக்கு அறுதிப் பெரும்பான்மையாக கிடைத்திருந்த பாராளுமன்ற ஆணை கிடைத்திருப்பதன் காரணமாக தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் தலைமையிலான அ.தி.மு.க. போன்ற பிராந்தியக் கட்சிகளில் தங்கியிருக்கவேண்டிய தேவை இல்லாது இருப்பது.

இரண்டாவது மனிதவுரிமைகள் போன்ற விவாதத்திற்குரிய சிக்கலான பிரச்சினைகள் மட்டிலான மேற்கத்திய கொள்கை மீது சாதகமான பார்வையைக் கொண்டிருப்பதற்கு [illegible] காரணங்கள் எதுவும் இந்தியப் பிரதமர் மோடி அவர்களுக்கு இருப்பதாக தெரியவில்லை.

ஏனென்றால் மோடி குஜராத் முதலமைச்சராக இருந்த போது இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான பாரிய இனக்கலவரங்களுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர் என ம.உ. சபை குறிப்பிடப்பட்டிருந்தது.

அவருங்கூட இந்த விதமான குற்றவியல் ஏற்பாடுகளுக்கு முகம் கொடுக்கும் நிலையிருப்பதால் இது போன்ற சர்வதேச சிக்கல்களுக்கு ஆதரவளிக்கும் சாத்தியம் அவரிடம் இல்லை.

போரின் போது இடம்பெற்ற மிகவும் மோசமான மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்புக்கூறி தனது நம்பகத்தன்மையை நிரூபிக்க வேண்டியிருப்பதே இலங்கை தற்போது முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் மிகவும் மோசமான வெளிவிவகாரப் பிரச்சினை. இதிலிருந்து இந்தியாவின் ஆதரவு பாதுகாப்பு அளிக்குமானால் அரசுக்கு இது பெருமளவில் உதவிக்கரமாகவே இருக்கும்.

காங்கிரஸ் தலைமையிலான முன்னைய இந்திய அரசு அதிகாரப் பரவலாக்க விடயத்தை வெறுமனே ஒழுக்கநெறிக்குட்பட்டது போலவே எதிர்பார்த்தது.

எப்படியும் புதிய இந்திய அரசானது இலங்கையுடனான இந்தியக் கொள்கையை அனுசரித்துச் செல்லும் விதத்திலான ஒரு சமநிலை நடவடிக்கைக்குரிய எதிர்பார்ப்பையே வெளிக்காட்டும் என்பதே சாத்தியமாகும்.

தமிழ்நாட்டுடனும் நாட்டு மக்களது அபிமானத்திற்குரிய மக்கள் தலைவியும் மாநில அரசுத் தேர்தலில் மத்திய பா.ஜ.க. அரசு போலவே அமோக வெற்றியை ஈட்டியவருமான ஜெயலலிதாவுடனும் முரண்பட்டுக் கொள்ள புதிய இந்திய அரசு விரும்பாது.

மறு பக்கம் பார்த்தால் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வாக முன்னைய காங்கிரஸ் அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட அதிகாரப் பரவலாக்க [illegible] திருந்த அதேயளவு அழுத்தத்தையே பா.ஜ.க. அரசும் தொடர்ந்து வழங்கும் என்பதற்கான சாத்தியமும் இல்லை.

அரச அதிகாரப் பயன்பாடுகள் எதுவும் இல்லாத விதத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாகவே தாம் இருப்பதாக தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் உணர்வுகளை தணிக்கும் விதத்தில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்வதற்கான வழிவகைகளைத் தேடுவதாகவே இலங்கையின் இன முரண்பாட்டு பிரச்சினைத் தீர்வுக்கான இந்தியாவின் அணுகுமுறையாக இருந்தது.

முன்னர் ஆதிக்கத்திலிருந்த காங்கிரஸ் தலைமையிலான அரசு இலங்கைப் பிரச்சினைக்கான தீர்வாக ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்த 13 ஆவது திருத்தச் சட்டத்துடனும் அதன் அனுசரணையில் நிறுவப்பட்ட மாகாண சபை அமைப்பையும் நடைமுறைப் படுத்துவதன் மூலம் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களுக்கு முடிந்தளவில் உச்ச அதிகாரப் பரவலாக்கம் செய்வதே நோக்கமாகக் கொண்டிருந்தது.

எப்படியாயினும் இத் தீர்வானது அடுத்தடுத்து பதவிக்கு வந்த இலங்கைஅரசுகளுக்கு முற்றிலும் ஏற்புடையதாக ஒரு போதுமே இருக்கவில்லை.

### தப்பிக்க முடியாது

இலங்கை அரசின் தற்போதைய அதிகார மையப்படுத்தல் மற்றும் தேசிய பாதுகாப்பு கொள்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அதிகாரப் பரவலாக்கல் திட்டம் உண்மையிலே அடிப்படை குளறுபடிக்குள்ளாக்கப்படும் விடயமாகவே இருக்கிறது.

இந்தியாவின் புதிய அரசாங்க தலைமை, பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு பழமையான வழிமுறைகளுடன் கட்டுண்டு செயற்படமாட்டாது என்பதுடன் இலங்கைக்குட்பட்ட பிரச்சினைகளுக்கு கூடுதல் வெளிப்படையான புதிய அணுகுமுறைகளையே பயன்படுத்தும் என்பதே சாத்தியமானதாகும்.

இன்னுமொரு பக்கம் பார்ப்போமானால் இலங்கையின் அந்நியப்படுத்தப்பட்டதான தமிழ் சமூகம் தென்னிந்தியாவில் வாழும் தமிழ் மக்களுடனான உறவுமுறைகள் மூலமும் மிக நெருக்கமான கலாசார பாரம்பரிய உறவுகள் மூலமும் பிணைக்கப்பட்டதாய் இருக்கிறது.

உண்மையிலேயே இரு நாடுகளையும் இணைக்கும் ஓர் நிரந்தரத் தொடர்பாகவே அது இருந்து வருகின்றது. எனவே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வின் பொருட்டு எந்தவொரு இந்திய அரசாங்கமும் தனது சொந்த உள்ளக உறவுகளை சிக்கலுக்குள்ளாக்காத விதத்திலேயே அதனைக் கையாள முயலும் என்பதே இங்கு யதார்த்தமானதாகும்.

பா.ஜ.க. அரசானது தனது வெளிநாட்டுக் கொள்கை விடயத்தில் கூடுதல் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டதாகவே இருக்கும். அண்டை நாடுகளுடனான பிரச்சினைகள் சம்பந்தமான வெளிநாட்டுக் கொள்கைகள் மட்டில் தீர்மானங்கள் மேற்கொள்ளும் போது இந்திய மாநில உணர்வுகளுக்கும் போதியளவு மதிப்பளிக்கப்படும் என தனது கடந்த தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது மோடி கூறியிருந்தார்.

அத்துடன் இந்திய பிரஜைகளாகப் பிறந்து இந்தியாவிற்கு வெளியே உலகத்தின் எந்தப் பகுதியிலாவது வாழ்ந்து கொண்டிருக்கும் எந்த மக்களும் புதியதும் பலம்வாய்ந்ததுமான ஒரு இந்தியாவின் உறுதியான பாதுகாப்பினை நிச்சயம் நம்பலாம் என்றும் அவர் கூறியிருந்தார்.

இவருக்கு முன்னர் அதிகாரத்திலிருந்தவரும் தளர்வுப் போக்கை கொண்டவருமான மன்மோகன் சிங்கைப் போன்று இல்லாத மோடி இந்தியாவை எவருமே தாம் நினைத்தவாறு கையாளுவதற்கு அனுமதித்து விடக்கூடியவரல்ல.

உண்மையில் வலுவான ஒரு அரசை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே அவர் பிரத்தியேகமான விதத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவராக இருந்தால் இலங்கைத் தமிழர்களது நிலைப்பாட்டின்பால் இந்தியாவின் அக்கறை தொடர்ந்தும் தீவிரமானதொன்றாகவே இருக்கும் என்பதையே அவரது உறுதியான ஆரம்ப முயற்சிகள் கோடிட்டுக்காட்டுகின்றன.

போர்க்குற்றம் தொடர்பில் இலங்கை தன்னுடைய நம்பகத்தன்மையை வெளிப்படுத்த வேண்டிய சந்தர்ப்பத்தில் பெரிய சக்தியான சர்வதேச சமூகத்திடமிருந்து இலங்கையைப் பாதுகாக்க வேண்டிய இந்தியாவின் பங்கிற்கான சக்தி எத்தகையது என்பது கேள்விக்கிடமானதே.

ஐ.நா.ம.உ. பேரவையில் இந்தியா பிரேரணைக்கு வாக்களிக்காமல் தவிர்த்திருந்த நிலையிலும் இலங்கைக்கு எதிரான அப் பிரேரணை நிறை வேற்றப்பட்டது.

இலங்கை மீதான விசாரணையை முடுக்கிவிடுவதென்ற ஜெனீவாத் தீர்மானத்தை மூன்றாவது மனித வுரிமைப் பேரவை வலியுறுத்தியிருப்பதால் அதை நிறுத்துவதற்கு இந்தியா பெரிதாக எதுவும் செய்வதற்கில்லை.

இலங்கை மீதான யுத்தக் குற்ற விசாரணை சர்வதேச மட்டத்தில் நிறுவனமயப்படுத்தப் பட்டாயிற்று என்பதே இதன் பொருளாகும்.

அதாவது யுத்தத்தின் போது என்ன நடந்தது என்பதை தெளிவுபடுத்த வேண்டிய 'பொறுப்புக் கூறல்' பிரச்சினையிலிருந்து இலங்கை தப்பிக்க முடியாது.

தற்போது ஆரம்பித்திருக்கும் ராஜபக்ஷ-மோடி தேனிலவு போன்ற ஒன்று நிகழ்வதாய் இருந்தாலும் கூட ஏற்கனவே செயற்பட ஆரம்பித்திருக்கும் சர்வதேச விசாரணை பொறிமுறையும் தொடரவே செய்யும்.

இந்த சர்வதேச பொறிமுறையை நிறுத்துவதற்கு நிச்சயமான ஒரே வழிதான் உண்டு.

இலங்கையில் நம்பகத்தன்மையை வெளிப்படுத்தும் நம்பகமான உள்ளக பொறிமுறையையும் சர்வதேச நியமங்களுக்கு அமைவானதுமான ஏற்றுக் கொள்ளப்படத்தக்க உண்மைப் பொறி முறையொன்றையும் ஏற்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இலந்தை

Botanical Name:- Zizyphus jujuba
Family:- Rhamnaceae
Engl:- Indian jujube
Sinh- Ilanda

பல கிளைகளையுடைய 6 மீற்றர் உயரம் வளரக்கூடிய மரமாகும். இதன்பட்டை சாம்பல் கலந்த மண்ணிறமுடையது. இதன் பட்டையின் உட்புறம் ரோஸ் நிறமான நார்த்தன்மையுடையதாகக் காணப்படும். கிளைகளில் முட்கள் காணப்படும். அநேகமானவை சோடியாகவும் நேராகவும் காணப்படுவதுடன் மற்றையவை வளைந்தும் காணப்படும். இலைகள் 3-6 செ.மீ நீளமும், 2.5-5 செ.மீ. அகலமும் கொண்டது. கோளவடிவானது. இலை ஓரங்கள் பற்கள் போன்றமைப்பு உடையன. பூக்கள் இளம் பச்சை நிறமுடையன. பழங்கள் முதலில் மஞ்சள் நிறமாகவும் பின்னர் செம்மஞ்சள் நிறமாகவும் இறுதியில் சிவப்பாகவும் காணப்படும். ஒரு வித்து பழத்தின் சதையால் மூடப்பட்டிருக்கும்.

வளமில்லாத நிலங்களில் பரம்பிக் காணப்படும். விதை மூலமும் மொட்டு ஒட்டுமூலமும் இனப்பெருக்கம் செய்யாமல் யாழ்.மாவட்டத்தில் இலந்தை மரம் தற்போது அருகிக் கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஆகவே இலந்தை மரங்களை போதுமானளவு நட்டு மேலும் வளர்த்து இது அரிதாகி அழிந்து கொண்டு வருவதை தடுக்கவேண்டும். ஏற்கனவே இருக்கும் மரங்களை பாதுகாக்க வேண்டும்.

100 கிராம் பழத்திலுள்ள சத்துக்கள்
புரதம் -0.8 கிராம்
கொழுப்பு-0.3 கிராம்
காபோவைதரேற்று- 17 கிராம்
கல்சியம்- 4 மில்லிகிராம்
பொஸ்பரஸ்-9 மில்லிகிராம்



இரும்பு-1.8 மில்லிகிராம்
கரோட்டீன்-21 மைக்ரோகிராம்
உயிர்ச்சத்து சி-76 மி.கி

இலந்தைப் பழத்தை சாப்பிட உடலுக்குகுளிர்ச்சியையும்உரத்தையும் தரும்மலத்தை இளக்கும். இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். இலந்தைப் பழம் தினமும் 20 கிராம் வரை சாப்பிடலாம்.

புழுக்கள் இல்லாத சுத்தமான பழங்களை விதைகளை நீக்கி பிசைந்து போதியளவு உப்பு, மிளகாய்த் தூள் சுவட்டி அடை தட்டிக்காய வைத்து உபயோகித்து வந்தால் வாந்தி, பித்த வாந்தி, அக்னி மாந்தம், சலக்கட்டு, முதலியன நீங்கி நல்ல பசி தீபனம் உண்டாகும்.

இலந்தை பழத்தின் கொழுந்து இலைகளை அரைத்து காலை வேளையில் வெறும் வயிற்றில் தினமும் 5கிராம் அளவு உண்டு பின்பு வெந்நீர் அருந்திவர கடுப்பு, பேதி, வயிற்று எரிச்சல் நீங்கும்.

இலைக்கொழுந்தை மைபோல அரைத்து 10 கிராம் அளவு எடுத்து 200 மில்லி மோரில் கலந்து பாதியாக இருவேளை அருந்தி வர மூல நோய்கள் குணமாகும்.

இலந்தை துளிரையும் கட்டையையும் நன்றாக அரைத்து கொப்பளங்கள் முதலியவற்றுக்கு பூச பழுத்து உடையும்.

பட்டையை உலர வைத்து இடித்துத் தூளாக்கி பழைய புண்களுக்கு தூவிக்கட்டலாம்.

பட்டையையும் இலையையும் சேர்த்து தண்ணீரில் கொதிக்கவைத்து குளிக்க கொடுத்தால் குடைச்சல் நீங்கும்.

இதன் பட்டையை பஞ்சுபோல நசுக்கி 20 கிராம் அளவுக்கு ஒரு மட்குடுவையில் போட்டு 500 மில்லி நீர்விட்டு 60 மில்லி அளவுக்கு காய்ச்சி வடிகட்டி 30 மில்லி வீதம் காலை, மாலை கொடுக்க காய்ச்சலினால் உண்டாகும் அயற்சி சோர்வு தீரும்.

இலந்தைப் பட்டையை தேங்காய் எண்ணெய்யில் காய்ச்சி பெறப்படும் தைலத்தை தடவிவர தோலில் ஏற்படும் கறுப்புப் படைகள் அகலும்.

இலந்தை இலைகள் 2 கிராம் அளவு எடுத்து 100 மில்லி பசும் பாலில் போட்டு கொதிக்க வைத்து பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தலுக்கு கொடுக்கலாம்.

இதன்வேர்ப்பட்டையை உலர்த்தி இடித்து சலித்து ஒரு கிராம் அளவு வெந்நீரில் உட்கொள்ள மலம் இளகும்.

இலந்தை இலைச்சாறு, முடக்கத்தான் இலைச்சாறு ஒவ்வொன்றும் 100 மில்லி எடுத்து உடலில் பூசிக் கொண்டால் கீல்வாயு குணமாகும்.

இலந்தை மர இலைகளை எடுத்து நசுக்கிச் சாறு எடுத்து உள்ளங்கை மற்றும் கால்களில் தடவிவந்தால் அதிகபடியான வியர்வை குறையும்.

இலந்தை மர இலைகளை சுத்தம் செய்து சாறு எடுத்து வழுக்கை உள்ள இடங்களில் தடவிவந்தால் முடிவளரும்.

இலந்தை மரப்பூக்களை சுத்தம் செய்து நன்றாக அரைத்து உடல் முழுவதும் பூசிக்கொண்டால் உடல் எரிச்சல் தணியும்.

இலந்தை மர இலைகளை வினிகர் சேர்த்து அரைத்து உடல் முழுவதும் பூசிக்குளித்தால் வாத நோயால் ஏற்படும் உடல் எரிச்சல் குணமாகும்.

இலந்தை அரப்பு (இலந்தைதம் பலம்) இதுவும் ஒரு முக்கிய மருந் துப் பொருளாகும். இலந்தையில் அதாவது தண்டுகளில் காணப்படும் ஒரு புற்றாகும்.(galls) இலந்தை சேகரித்து உலர்த்தி வெந்நீரில் பிசைந்து குழந்தைகளுக்கு தலையில் தேய்த்து முழுகிவர குழந்தைகளுக்கு ஏற்படும் உள்நாக்கு வளர்ச்சி இலசுன தாபிதம் (Tonsilities) பேச்சுத்தடுமாற்றம் நீங்கும்.

இலந்தை அரப்பு வைத்து தலை முழுகும் பழக்கம் இன்னும் சில கிராமங்களில் அவதானிக்கப்படுவது குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும். இதனால் குழந்தைகளுக்கு ஏற்படும் பொடுகுத் தொல்லை, மண்டைக்கரப்பான் ஆகியவை நீங்கும்.

இலந்தைகளில் சீமை இலந்தை என இன்னொரு வகையுண்டு. இதன் பழங்கள் பெரிதாகவும் முட்டை வடிவாகவும் இருக்கும். சீமை இலந்தைப் பழங்களும் உடலுக்குக் குளிர்ச்சியை ஏற்படுத்தக் கூடியன வாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

# அரசாங்கத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது

## மனோ கணேசன் தெரிவிப்பு

பொதுபல சேனாவின் பொது செயலர் ஞானசார தேரரை திட்டித் தீர்ப்பதில் பயனில்லை. தான் என்ன செய்ய போகின்றேன் என்பதை பற்றி முன்னறிவித்தல் கொடுத்துதான் அனைத்தையும் அவர் செய்கிறார்.

நடந்துள்ள அட்டூழியங்களுக்கு. தட்டிக்கொடுத்து, யாமிருக்க பயமேன் என்று சொல்லி, இந்த பொதுபல சேனாவை ஊட்டி வளரக்கும் அரசாங்கம்தான் பொறுபபேற்க வேண்டும். இதை முஸ்லிம் அரசியல்வாதிகள் உணர வேண்டும்.

இந்த அரசுக்குள்ளே குடியிருக்கும் கோர்ட்சூட் அணிந்த முஸ்லிம் அமைச்சர்கள் இந்த அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்ய வேண்டும். அது என்ன வைத்தியம் என நான் சொல்ல மாட்டேன். அதை தங்களுக்கு வாக்களித்து தெரிவு செய்த, கிழக்கு, மத்திய, மேற்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்களிடமே அரசில் உள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால் இவர்களுக்கு மக்கள் அதிர்ச்சி வைத்தியம் செய்யும் நிலைமை விரைவில் உருவாகலாம் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் இன்று நடத்திய விசேட ஊடக மாநாட்டில் சிங்கள, ஆங்கில மொழிகளில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

இந்த அட்டூழியங்கள் தமிழர்களுக்கு புதிது அல்ல. இதையெல்லாம் வலியுடன் அனுபவித்தவர்கள் நாங்கள். எங்கள் சொத்துகளும், உயிர்களும் எங்கள் கண்கள் முன்னே பறிக்கப்பட்டன. எரித்து அழிக்கப்பட்டன.

யுத்தம் நின்று விட்டதில் எங்களுக்கும் மகிழ்ச்சிதான். ஆனால், நாங்கள் பட்டாசு கொளுத்தவில்லை. அந்த யுத்தம் நடத்தப்பட்ட முறையை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம். நாட்டை விடுவிக்கின்றோம் என்ற போர்வையில், இனவாத அடிப்படையில் நடத்தப்பட்ட யுத்தம் அது என்பது எங்களுக்கு தெரியும்.

அதனால்தான் அதே இனவாதம் இன்று அப்பாவி முஸ்லிம் மக்கள் மீதும் பாய்கிறது. இன்று இந்த அரசில் இருக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள் இதற்கு மேலும் அங்கு ஏன் இருக்கின்றார்களோ என எனக்கு தெரியவில்லை. போதும் என்ற நிலைமை இன்று உருவாகிவிட்டது. உள்ளே இருந்தபடி சில காரியங்கள் ஆற்றலாம் என்ற நிலைமை கடந்து விட்டது.

இந்த அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்ய வேண்டிய காலம் வந்து விட்டது. அது நடந்தால்தான் முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாதிகளை அடக்கியே ஆக வேண்டிய கட்டாயம் இந்த அரசுக்கு ஏற்படும்.

இன்று தமிழர் பிரச்சினை உலக பிரச்சினையாகிவிட்டது. நீங்கள் பாராளுமன்றத்தில் விவாதித்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன, சர்வதேச விசாரணை நிச்சயம் நடக்கும் என்ற நிலைமை உருவாகிவிட்டது.

உள்நாட்டில் நியாயம் இல்லையென்றால் நாங்கள வெளிநாட்டுக்குதான் போவோம். அது எங்கள் உரிமை. அதை இன்று முஸ்லிம் மக்களும் செய்ய வேண்டும். ஐ.நா மனித உரிமை பேரவையில் அரசுக்கு ஆதரவாக முஸ்லிம் அரபு நாடுகளின் ஆதரவை பெற்று தந்தவர்கள் இனி தங்கள் பிரச்சினையை உலகிற்கு கொண்டு போக வேண்டும். எல்லாம் நடந்து முடிந்த பின், "சட்டத்தை கைகளில் எடுக்க எவருக்கும் இடம் கொடுக்க மாட்டோம்" என நாட்டுத் தலைவர் சொல்கிறார்.

இது ஒரு நகைச்சுவை. இனி சட்டத்தில் என்ன மிச்சம் மிகுதி இருக்கிறது என்று நான் கேட்கிறேன். தாம் அதிகாரபூர்வமற்ற பொலிஸ் படையை அமைக்க போவதாக பொதுபல சேனாவின் பொது செயலாளர் ஞானசார தேரர் சொல்லி நீண்ட நாட்களாகி விட்டது. இது ஒரு சட்டவிரோத பயங்கரவாத கருத்து. தான் என்ன செய்ய போகின்றேன் என்பதை பற்றி முன்னறிவித்தல் கொடுத்துத்தான் அனைத்தையும் அவர் செய்கிறார்.

அவர் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன? இன்று அந்த சட்டவிரோத பொலிஸ் படைக்கு, சட்டபூர்வ பொலிஸ் பயந்து கொண்டு இருக்கிறது. நாட்டை பாதுகாக்க வேண்டிய பாதுகாப்பு செயலாளர், இந்தச் சட்டவிரோத பொலிஸ் படைக்கு பாதுகாப்பு கொடுக்கிறார். இவைதான் மறுக்கமுடியாத உண்மைகள் என்றார். (அ)

# சட்ட ஒழுங்குகளை அரசாங்கம் உடன் அமுலாக்க வேண்டும்

## வன்முறை குறித்து நவிப்பிள்ளை கருத்து

இலங்கையின் தென் பகுதியில் இனங்களுக்கு இடையில் வன்முறை ஏற்பட்டு அதனால் மூன்று பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பௌத்த பிக்கு ஒருவரை முஸ்லிம இளைஞர் ஒருவர் தாக்கியதாக குற்றம் சுமத்தி, அடிப்படைவாத பௌத்த அமைப்பான பொது பல சேனாவின் பேரணியை தொடர்ந்து அளுத்கம நகரில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றன.

இதன்போது முஸ்லிம்களின் வீடுகள் மற்றும் கடைகள், பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன.

இதனையடுத்து சுமார் ஆயிரத்து 200 பொலிஸார் வரை கடமையில் ஈடுபடுத்தப்பட்டு பாதுகாப்பு மேற் கொள்ளப்பட்டது. எனினும் இரவு வேளைகளிலும் வன்முறைகள் தொடர்ந்தன.

இந்தநிலையில் வன்முறைகளை இலங்கை அரசாங்கம் உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும.

அதேநேரம் சகல சிறுபான்மை சமூகங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று நவநீதம்பிள்ளை கோரியுள்ளார். அத்துடன் ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம்கள் மீதான வன்முறை ஏனைய இடங்களுக்கும் பரவலாம் என்று தாம் அஞ்சுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே சட்ட ஒழுங்குகளை அரசாங்கம் உடனடியாக அமுல் செய்ய வேண்டும்.

பாதுகாப்பு தரப்பினரும் தமது கடமைகளை உரியமுறையில் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவுடன் தொடரப்போகும் நிழற்போர்!



ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இடத்துக்கு ஜோர்தான் நாட்டின் இளவரசர் சையிட் அல் ஹுசெய்னின் பெயரை, ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் முன்மொழிந்துள்ளார். தென்கிழக்காசியாவைச் சேர்ந்த ஒருவருக்கே இந்தப்பதவி கிடைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக, கூறப்பட்டு வந்த நிலையில் மேற்காசிய இராஜதந்திரியான சையிட் அல் ஹீ செய்ன் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தப் பதவிக்கு யார் நியமிக்கப்படப் போகிறார் என்று இலங்கை அரசாங்கம் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தது உண்மை.

ஏனென்றால், இந்தப் பதவிக்கு வரப்போகிறவர் தான், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பாக நடத்தும் விசாரணை அறிக்கையை, அடுத்த ஆண்டு சமர்ப்பிக்கப்போகிறவர். அது தவிர, தற்போது சர்வதேச சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் பொறுப்புக்கூறல் முயற்சிகளைஅடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் பொறுப்பையும் இவரே கொண்டிருப்பார். 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததில் இருந்தே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும், இலங்கைக்கும் இடையில், பெரியதொரு நிழல் யுத்தம் நடந்து வருவது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

போரின் போது நடந்த குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருவதால், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் மீது இலங்கை அரசு கடும் கோபம் கொண்டிருக்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ள சூழலில் தான் நவநீதம்பிள்ளையின் இடம் வெற்றிடமாக உள்ளது. இப்படியான நிலையில் -அவரது இடத்தை நிரப்பவுள்ளவர் யார் என்ற எதிர்பார்ப்பு மற்ற நாடுகளை விட இலங்கைக்கு அதிகம் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஐ.நா அமைப்புஒன்றுடன்முரண்போக்கை வளர்த்துக் கொள்வது அபாயகரமானது என்பதை இலங்கை அரசாங்கம் அறியும்.

ஆரம்பத்தில் நவநீதம்பிள்ளையுடன் ஏற்பட்ட முறுகலின் பாதிப்பை அரசாங்கம் உணர்ந்திருந்தாலும் பிற்காலத்தில் அதைச் சரிசெய்துகொள்ளக்கூடிய சூழல் ஏற்பட்டிருக்கவில்லை.

நவநீதம்பிள்ளையை விடுதலைப்புலி ஆதரவாளராக அவர்களின் அனுதாபியாக காண்பித்துவிட்ட அரசாங்கத்தினால், அவருடன் முட்டிமோதிப்பார்த்துவிட்ட அரசாங்கத்தினால், தமது கௌரவத்தை விட்டுக்கொடுத்து கைகொடுக்க முடியாமல் போனது. நவநீதம்பிள்ளைக்குப் பிறகாவது, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துடன் உறவை வலுப்படுத்திக்கொள்வதற்கு அரசாங்கம் நினைத்திருந்தால் அதற்கான திறவுகோலாக -புதிய ஆணையாளரின் நியமனத்தைக் கூர்ந்து கவனித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதுவும் இலங்கை அரசாங்கத்துக்கு கடுப்பை ஏற்படுத்தக் கூடியவர்களும் கூட இந்தப் பதவிக்கான போட்டியில் இருந்தனர். அவர்களில் முக்கியமானவர் இந்தோனேசியாவின் முன்னாள் சட்டமா அதிபர் மர்சுகி தருஸ்மன். இவர் ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் 2010ஆம் ஆண்டு நியமித்த இலங்கையில் நிகழ்ந்த போர்குற்றங்கள் குறித்து ஆலோசனை வழங்குவதற்கான நிபுணர் குழுவின் தலைவராக பதவி வகித்தவர். வடகொரியா குறித்த ஐ.நா விசாரணைக் குழுவிலும் இடம் பெற்றவர்.

இலங்கையில் நடந்த போர் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருபவர். இவர் இந்தப் பதவிக்கு வந்து விடக்கூடாது என்று இலங்கை அரசாங்கம் அதிகமாகவே பிரார்த்தனை செய்திருக்கும். அதைவிட கிழக்கு திமோரின் முன்னாள் ஜனாதிபதியும் நோபல் பரிசு பெற்றவருமான ஜோஸ் ராமோஸ் ஹோர்டா பாகிஸ்தானின் இரண்டு பெண் மனித உரிமை ஆர்வலர்களும்கூட இந்தப் போட்டியில் இருந்தனர். எனினும் மர்சுகி தருஸ்மன் அல்லது ஜோஸ் ராமோஸ் ஹோர்டா ஆகியோரில் ஒருவரே இந்தப் பதவிக்கு வரக்கூடும் என்ற தகவல்கள் ஐ.நா வட்டாரங்களில் ஏற்கனவே பரவியிருந்ததால் அரசாங்கத்தின் கவனம் இன்னும் கூடுதலாகவே இந்த நியமனத்தின் மீது இருந்து வந்தது. இப்படியான சூழலில் ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் ஜோர்தானிய அரச பரம்பரையைச் சேர்ந்தவரும் மூத்த இராஜதந்திரியுமான இளவரசர் சையிட் அல் ஹீ செய்னை அந்தப் பதவிக்கு தெரிவு செய்துள்ளார். இவரது நியமனத்தை ஐ.நா பொதுச் சபை அங்கீகரிக்க வேண்டும். இவர் மேற்குலகினது ஆதரவைப் பெற்றவராக இருப்பதால் பொதுச்சபையின் அங்கீகாரம் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை. அதைவிட இஸ்லாமிய நாடுகளும் ஆபிரிக்க நாடுகளும் இவருக்காக வாக்களிக்கத் தயாராக இருக்கும்.

ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் தெரிவு செய்த, சையிட் அல் ஹுசெய்ன் அடுத்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளராகப் பதவியேற்கப் போவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. இந்த நிலையில், இவர் இலங்கை அரசாங்கத்துடன் எவ்வாறு நடந்து கொள்வார்? அவர் மூலம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடனான உறவை இலங்கை அரசாங்கத்தினால் புதுப்பித்துக்கொள்ள முடியுமா? என்பன போன்ற கேள்விகள் எழுவது இயல்பு. சையிட் அல் ஹுசெய்னின் நியமனம் குறித்த அறிவிப்பு வெளியான மறுநாளே, அவர் இலங்கை விவகாரத்தில் நவநீதம்பிள்ளையை விடவும் கடும்போக்கைக் கொண்டவராக இருக்கக் கூடும் என்று பெயரை வெளியிடாத அரசாங்க அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்தி ஒன்று வெளியானது. அதாவது, இத்தகைய இக்கட்டான சூழலில் இப்படியொரு நியமனம் நிகழ்ந்திருக்கக்கூடாது என்ற தொனிப்பட அந்த அதிகாரி கருத்து வெளியிட்டிருந்தார். அதுமட்டுமின்றி, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகமும் ஐ.நா. விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்க மறுத்தால், இவர் நவநீதம்பிள்ளையை விடவும் கடுமையாகவே இலங்கையுடன் நடந்துகொள்வார் என்று குறிப்பிட்டிருந்தது.

இந்த இரண்டு தரப்புகளினது எதிர்பார்ப்புகளுக்கும் காரணம், சையிட் அல் ஹுசெய்னின் கடந்த கால செயன்முறைகள்தான்.

ஜோர்தான் நாட்டின் ஐ.நாவுக்கான தூதுவராகப் பணியாற்றிய இவர், நீதிக்காக குரல் கொடுப்பதில் முன்னிற்பவராக இராஜதந்திர மட்டங்களில் நன்றாக அறியப்பட்டவர்.

யூகோஸ்லாவியா விவகாரத்தில் இவர் செயற்பட்ட விதம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஆரம்ப உருவாக்குனராக செயற்பட்ட விதம் என்பன இவருக்கான முக்கியமான அடையாளங்களைக் கொடுத்துள்ளது.

அதுமட்டுமின்றி, ஐ.நா. அமைதிப் படையினரின் பாலியல் அத்துமீறல்களுக்கு எதிராக கடுமையான குரல் கொடுத்தவர்.

இலங்கை விவகாரத்திலும் கூட இவர் அவ்வப்போது எட்டிப் பார்த்தவர்தான் என்பதில் சந்தேகமில்லை.

ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதித் தூதுவரான மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவை, ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைக்கான மூத்த ஆலோசனை குழுவின் உறுப்பினராக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோது அதனைக் கடுமையாக எதிர்த்தவர்தான் சையிட் அல் ஹுசெய்ன். அதுமட்டுமின்றி, 2012ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்தபோது, ஜோர்தான் தம்மை ஆதரிக்கும் என்று இலங்கை வலுவாக நம்பியது. ஆனால், கடைசியில் ஜோர்தான் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகித்தது. ஜோர்தானின் இந்த முடிவுக்குக் காரணமாக இருந்தவரும், சையிட் அல் ஹுசெய்ன்தான்.

ஆக, அல் ஹு செய்னுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏற்கனவே இலேசான உரசல்கள் தொடங்கிவிட்டன என்றே வைத்துக்கொள்ளலாம்.

இவ்வாறான நிலையில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் புதிய உறவுகள் துளிர்ப்பதற்கான வாய்ப்புகள் அரிது.

ஆனால், ஐ.நா. விசாரணை விவகாரத்தில், இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு, கடுமையானதாக இருக்கும் நிலையில், இந்த இருதரப்புகளுக்கும் இடையிலான விரிசல் இன்னும் அதிகமாகவே வாய்ப்புகள் உள்ளன. இதனால் புதிதாகப் பொறுப்பேற்கும். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சையிட் அல்ஹுசெய்ன், இலங்கை அரசாங்கத்துடன் கடும்போக்கை கடைப்பிடிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும். அதேவேளை, ஜோர்தானுடன் இலங்கை கொண்டுள்ள நட்புறவை வைத்து, சையிட் அல் ஹுசெய்னை இலங்கை அரசாங்கம் வளைத்துப்போடுவதற்கு சாத்தியமுள்ளதா என்றும் பார்க்கலாம்.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ச, ஜோர்தானுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அதுபோலவே, மீண்டும் ஒருமுறை அங்கு சென்று சையிட் அல் ஹு செய்னை சந்தித்து, ஆதரவு தேட அவர் முனையலாம். ஆனால், ஜோர்தான் நட்பு நாடாக இருப்பதால் சையிட் அல் ஹுசெய்னும் அவ்வாறு இருப்பார் என்று நம்புவதற்கில்லை.

தென்கொரியா, இலங்கையுடன் நெருக்கமான நட்பைக் கொண்டிருந்தாலும் அதன் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான, பான் கீ மூன் ஐ.நா. பொதுச் செயலரான பின்னர், அவ்வாறு செயற்படவில்லை. அதுமட்டுமின்றி, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தையும் கூட, தென்கொரியா ஆதரித்து வருகிறது. எனவே சையிட் அல் ஹுசெய்னை வைத்து ஐ.நாவில் தனக்குச் சார்பான நிலையை உருவாக்க அரசாங்கம் முயன்றாலும் அதுபெரும்பாலும் சாத்தியமாகப் போவதில்லை. எனவே, ஜெனிவாவுக்கும் கொழும்புக்கும் இடையிலான நிழற்போர், இப்போதைக்கு ஓயப்போவதில்லை.

*-ஹரிகரன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய அபிவிருத்தி நிலையம் அமைக்க யுனெஸ்கோ இணக்கம்

## இலங்கையும் ஒப்புதல்

(கொழும்பு)

இலங்கையின் வேண்டுகோளை அடுத்து, இலங்கையும் யுனெஸ்கோவும் இணைந்து, மீப்பே பிரதேசத்தில், தென் ஆசிய ஆசிரிய அபிவிருத்தி நிலையமொன்றை அமைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவியின் கீழ் செயற்படும் "வகை 2" நிலையமாக இது காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தின் முழுமையான நேக்கம் ஆசிரியர்களின் அறிவு மற்றும் பயிற்சியை தரமுயர்த்துவதாகும்.

கொள்கை அபிவிருத்தி, தரமான ஆசிரியர் அலையை கட்டியெழுப்புவதில் மாற்றத்தை கொண்டுவருதல் மற்றும் ஆராய்ச்சிகளை விரிவாக்கல் என்பவற்றுக்கு ஆதரவு வழங்குவதற்கான தலைமைத்துவம் அளித்தல் என்பவை மூலம் தென் ஆசிய பிராந்தியத்தின் ஆசிரியர் அபிவிருத்தி செயன்முறையை மாற்றியமைத்தலில் இந்த நிலையம் முக்கிய வகிபாகத்தை கொண்டிருக்கும்.

யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் இரினா பொக்கோவா, கல்வி அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க ஆகியோர் இந்த நிலையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கடந்த 10 ஆம் திகதி கையொப்பமிட்ட னர். இதன்போது, இலங்கையின் கலாசார அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க பிரசன்னமாகியிருந்தார்.

கல்வியில், யுனெஸ்கோவின் பலத்த ஈடுபாட்டுக்கு இந்த மையம் சாட்சியாகும். கூடுதலான, நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான அவசர தேவை காணப்படும் இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான நிலையம் அமைவது வரப்பிரசாதமாகும்.

தற்போது 250 மில்லியன் மக்கள் அடிப்படை விடயங்களைக்கூட கற்க வசதியின்றி உள்ளனர் என பொக்கோவா கூறினார்.

யுனெஸ்கோவுக்கான நிரந்தர பிரதிநிதி கருணாரத்ன ஹங்கவத்த மற்றும் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், இந்தியா, துருக்கி, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் நிரந்தர பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# நாட்டின் பதற்றமான சூழல் சர்வதேச விசாரணைகளுக்கு வழிவகுக்கும்

## அமைச்சர் வாசு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமை சர்வதேச விசாரணைகளுக்கு மேலும் வலுச் சேர்க்கும் என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அளுத்கம மற்றும் பேருவளை சம்பவம் தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது நிலவி வரும் பதற்ற நிலைமை, ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை விசாரணைகளுக்கு மேலும் சாதகமாகவே அமையும்.

அளுத்கம சம்பவத்தின் போது ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மோதிக்கொள்ளவில்லை. வெளியிலிருந்து சென்றவர்களும் கிராம மக்களும் மோதிக் கொண்டுள்ளனர்.

இன மற்றும் மதவாதத்தை தூண்டும் நோக்கிலேயே இந்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர், ஆதரவாளர்களை திரட்டிக்கொண்டு வந்து பாரியளவில் கலகத்தில் ஈடுபட்டுள்ளார்.

தனிப்பட்ட நபர்களுக்கும், சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது. ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தப்பட்டமை எமது பலவீனமாகவே கருதப்பட வேண்டும்.

பொதுபல சேனாவின் கூட்டங்களினால் சமாதானத்தை நிலை நாட்ட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. பொதுபல சேனா இயக்கத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த பாதுகாப்பு தரப்பினர் உரிய நடவடிக்கை எடுத்தார்களா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அனைத்து இலங்கையர்களும் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டிய காலம் மலர்ந்துள்ளது. நாட்டில் ஏற்படும் இவ்வாறான பிரச்சினைகள், சர்வதேச ரீதியான எதிரிகளுக்கு மேலும் சந்தர்ப்பமாக அமைந்து விடும் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# வெளிநாட்டு வங்கிகளில் அரசியல்வாதிகளின் கணக்கு

சட்டத்திற்கு முரணான வழிகளில் பணத்தை சம்பாதித்த பிரபல அரசியல்வாதிகள் 8 பேர் வெளிநாடுகளில் உள்ள வங்கிகளில் இரகசியமான முறையில் வங்கி கணக்குகளை கொண்டிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

மடகஸ்கார், புருணை, சுவிட்சர்லாந்து, செனல் ஐலண்ட் ஆகிய நாடுகளில் உள்ள வங்கிகளில் இவர்கள் கணக்குகளை கொண்டுள்ளனர்.

மேற்படி அரசியல்வாதிகளில் இரண்டு பேர் மாகாண சபைகளின் பிரதானிகள் என தெரியவருகிறது.

மேல், மத்திய. சப்ரகமுவ மாகாணங்களை சேர்ந்த அரசியல்வாதிகள் சிலரும் இதனுடன் சம்பந்தப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வங்கிகளில் கணக்குகளை வைத்திருக்கும் அரசியல்வாதிகளுக்கு சொந்தமான வர்த்தக கப்பல்களும் இருப்பதாக தெரியவருகிறது.

எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருப்பதாக ஜனாதிபதி சந்தேகிக்கும் 8 அரசியல்வாதிகள் மீதே இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (2)

# புகையிலை கடத்த முற்பட்ட ஐவர் கைது

இராமமேஸ்வரம், பாம்பன் பகுதயில் இருந்து இலங்கைக்கு 5 இலட்சம் ரூபா பெறுமதியுடைய புகையிலையை கடத்த முற்பட்டதாக கூறப்படும் ஐவரை கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை கைது செய்துள்ளதாக இலங்கை பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு கிடைத்த இரக சிய தகவலையடுத்து, பாம்பன் கடற்கரையிலுள்ள படகுகளை சோதனையிட்ட போது 300 கிலோ கிராம் நிறையுடைய புகையி லையை கைப்பற்றியதுடன் ஐவ ரையும் கைது செய்துள்ளனர்.

மேலும் இலங்கைக்கு சொந்தமான படகு ஒன்றினையும் கைது செய்யப்பட்டவர்களுக்கு சொந்தமான கார் ஒன்றினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்தனர். (2)

# வன்முறைகள் மூலம் பிரச்சினைகளை தீர்க்க முடியாது- பொதுபலசேனா

(கொழும்பு)

வன்முறைகளின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அளுத்கம மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் மக்கள் நிதானத்தை பின்பற்ற வேண்டும்.

நாட்டின் சகல சிங்கள பௌத்த மக்களும் அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும்.

அவ்வாறு செய்யாவிட்டால் கடும்போக்காளர்களின் தேவைகள் பூர்த்தியாகிவிடும்.

குண்டாந்தடிகளை எடுத்து கற்களை கடைகள் மீது வீசி, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு நேற்று முன்தினம்வழங்கிய நேர்காணலின் போது இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (2)

# இன்று ஒரு தகவல்

## கருப்பையின் உள்ளே...

நாம் இந்த உலகத்திற்கு வருவதற்கு முன் கொஞ்ச நாள் ஒரு இடத்தில் தங்கி இருந்தோமே அந்த இடம் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? அதுதான் கருப்பை. பத்துமாதம் அங்குதான் இருந்திருக்கிறோம். இருந்தாலும் அங்கே என்ன நடக்கிறது என்பதைப் பற்றி யாருக்காவது நினைவிருக்கிறதா? நிச்சயமாக இருக்காது.

இப்பொழுது கேளா ஒலி வரைவுகள் மூலமாக அங்கு நடப்பதெல்லாம் விபரமாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

கருப்பைக்குள் இருக்கும் குழந்தை கொட்டாவி விடுகிறது, விரல்களை சப்புகிறது, கைக்கு எட்டுவதை பிடிக்கிறது, சோம்பல் முறிக்கிறது, கொட்டக் கொட்ட விழிக்கிறது!

இவை அனைத்தையும் ஒரு ரெலிவிஷன் திரையில் பார்க்க முடிகிறது. அந்த அளவுக்கு விஞ்ஞானம் வளர்ச்சி கண்டுள்ளது. கருப்பைக்குள் ஒரு திரவத்துக்குள் மிதந்து கொண்டிருக்கும் குழந்தை கொட்டாவி விட்டுக் கொண்டே கைகால்களை உதைக்கிறது! கைகளை நீட்டி தொப்புள் கொடியை பிடிக்கிறது! அதனுடன் கொஞ்சநேரம் விளையாடுகிறது! அதற்குப் பின்னர் கைக்கட்டை விரலை வாயில் வைத்துக் கொண்டிருக்கிறது!

தாயின் இதயத்துடிப்பு, சமிபாட்டுப் பாதையில் ஏற்படும் சத்தங்கள் இதையெல்லாம் கேட்டுக் கொண்டே? தாயின் குரலையும் உணர்ந்து அதை கவனிக்கிறது.

தாய் எழுந்து நடக்கும் போது கருப்பை நீரின் லேசான குலுக்கலில் மெய்மறந்து மறுபடியும் தூங்கிப் போகிறது! கருப்பைக்குள் மிகவும் அமைதியாக இருக்கிறது என்று எண்ணிவிடாதீர்கள். ஒரு மைக் மூலமாக அங்கே உள்ள சத்தத்தை பதிவு செய்து பார்த்ததில்,

தாயின் இதயத்துடிப்பு, சுவாசம் மற்றும் வயிற்றிலிருந்தும் குடலிலிருந்தும் வரும் பலவித சத்தங்கள் வெளியுலக சத்தம் எல்லாம் உள்ளே கேட்கிறதாம்! அதனால் தான் கருவுற்ற தாய்மார்கள் இருக்கும் அறையில் ரேடியோவும்– ரிவியும் அலறும் அளவுக்கு வைக்கக் கூடாது என்பார்கள். சத்தம் போட்டுக் கதைப்பதும் சண்டை போடுவதும் தவறு! சத்தமான இடங்களில் அவர்கள் இருக்கக் கூடாது.

கருப்பைக்குள் இருக்கும் சிசு வெளி உலகத்திற்கு வந்த பின்னர் சந்திக்க வேண்டிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப உள்ளே அது தன்னை தயார்ப்படுத்திக் கொள்கிறது. சாதாரணமாக உள்ளே இருக்கும் குழந்தைக்கு பசியோ தாகமோ ஏற்படாது. ஆனாலும் தாயார் சாப்பிடும் ஆகாரத்தில் சத்துப்பற்றாக்குறை இருந்தால் குழந்தைக்கும் சத்துப் பற்றாக்குறை ஏற்படும்.

ஒரு சிசு கருப்பையில் இருக்கும் போது ஒரு குறிப்பிட்ட தாலாட்டுப் பாட்டைப் பாடிக்கொண்டே இருந்தால் அந்த பாட்டுக்கேற்ற வகையில் கை, கால்களை ஒரு குறிப்பிட்ட வகையில் ஆட்டக் கற்றுக் கொள்ளுமாம். குழந்தை பிறந்த பின்னர் அதே பாட்டைப்பாடி அழும் குழந்தையை அமைதிப்படுத்தி விடலாமாம்.

இதுவரைக்கும் வைத்தியர்கள் சொன்னதைப் பார்த்தோம். இனி நம் கதைக்கு வருவோம். குழந்தை வயிற்றில் இருக்கும் போது தாயார் தாலாட்டுப்பாடுவது தான் நல்லது. அப்பொழுதுதான் அது சுகமாக காலை ஆட்டும்.

அப்பாக்கள் தாலாட்டுப் பாடினால் என்ன நடக்கும் தெரியுமா? வயிற்றிலிருக்கும் போதே குழந்தை ஒரு தீர்மானத்துக்கு வந்துவிடும். வெளியில் வந்த பின்னர் காலாட்டுவதற்குப் பதிலாக உதைக்க ஆரம்பித்து விடும்.

ஒரு வீட்டில் தொட்டிலிலிருந்து குழந்தை சத்தம் போட்டு அலறிக் கொண்டிருந்தது. அப்பா தொட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தார். வெளியே போயிருந்த அம்மா திரும்பி வந்தார்.

" சும்மா தொட்டிலை ஆட்டிக் கொண்டிருக்கிறீர்களே! ஒரு தாலாட்டுப் பாடக் கூடாதா?" என்றார். அதற்கு " நான் தாலாட்டுப் பாட ஆரம்பிச்ச பின்னர்தானே தூங்கிக் கொண்டிருந்த குழந்தை இப்படி அலறவே ஆரம்பித்தது" என்றார் அப்பா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி சந்தையில் தொடரும் அசௌகரியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் உள்ள மலசல கூடங்களை பெண்களுக்கென தனியாக ஒதுக்காததன் காரணத்தினால் அங்குள்ள பெண் வர்த்தகர்களும் பொதுமக்களும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஏறத்தாழ 365 இற்கு மேற்பட்ட வர்த்தகர்களைக் கொண்டுள்ள கிளிநொச்சி பொதுச் சந்தையில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இச்சந்தையில் முன்பகுதியிலும் பின்பகுதியிலும் மூன்று மூன்றாக மொத்தம் ஆறு மலசல கூடங்கள் உள்ளன. ஆனால் இவை ஆண்கள், பெண்களுக்கென வேறாக பிரிக்கப்படாததினால் தினமும் இருபாலாரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும் பின்பகுதியிலுள்ள மலசல கூடத்திற்கு வேறான நீர்வசதி இல்லை. இதனால் சந்தை பகுதியிலுள்ள வெற்றிலைக் கடைக்கு அருகில் இருக்கும் குடிநீர்குழாயிலேயே மேற்படி மலசல கூட தேவைக்கான நீரினையும் எடுக்கின்றனர்.

எனவே சந்தையின் பிற்பகுதியிலுள்ள மேற்படி மூன்று மலசல கூடங்களுக்குமென வேறான நீர்க்குழாயினை அமைப்பது கட்டாயமானது.

கிளிநொச்சி பொதுச் சந்தையில் மேற்படி இரண்டு பிரச்சினைகளும் சிறிய பிரச்சினைகளாகத் தோற்றினாலும் நாளாந்தம் அங்குள்ள வர்த்தகர்களும் பொது மக்களும் இதனால் பெரும் அசௌகரியங்களைக் எதிர்நோக்கி வருகின்றனர்.

கரைச்சி பிரதேச சபைக்கு கீழுள்ள மேற்படி சந்தையில் சந்தை வர்த்தக சங்கம் இயங்கினாலும் பிரதேச சபையின் அனுமதியின்றி தனியாக எதனையும் செய்யமுடியாது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே மேற்படி பிரச்சினைகளை தீர்க்குமாறு அப்பிரதேச வர்த்தகர்களும் பொது மக்களும் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-271)

# தட்டுவன்கொட்டி மக்களின் அவல வாழ்வு தொடர்கிறது

## வடக்கு விவசாய அமைச்சரிடம் ஆதங்கப்பட்டனர் மக்கள்

போரினாலும் இயற்கையினாலும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட கிராமம் தட்டுவன்கொட்டி. இப்படி ஒரு கிராமம் ஆனையிறவுக்கு அண்மையிலிருக்கின்றது என்பதே பலருக்குத் தெரியாது.

அரசியல்வாதிகள் கூட தட்டுவன் கொட்டியின் கதவுகளைத் தேர்தலின் போது மட்டுமே தட்டுகிறார்கள் என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் தட்டுவன் கொட்டி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை தட்டுவன்கொட்டிக்குச் சென்ற அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அங்குள்ள வயல்கள், குளங்கள் மற்றும் பாடசாலையைப் பார்வையிட்ட பின்னர் பொது மக்களைத் தட்டுவன் கொட்டி பொதுநோக்கு மண்டபத்தில் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்தார். இதன்போதே அம்மக்கள் மேற்குறிப்பிட்டவாறு முறையிட்டுள்ளார்கள்.

மிகப்பழைமை வாய்ந்த கிராமமான தட்டுவன்கொட்டிக்கு அருகாமையிலேயே ஆனையிறவு இராணுவமுகாம் அமைந்திருந்ததால், இப்பகுதி மக்கள் பலதடவைகள் இடம் பெயர நேர்ந்தது. குடிதண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத போதும் சொந்த மண்ணைவிட்டு நிரந்தரமாக வெளியேற விரும்பாத இம்மக்கள் 2010 ஆம் ஆண்டில் இருந்து மீளவும் குடியேற ஆரம்பித்துள்ளார்கள்.

மாகாணசபைத் தேர்தலின் போது அரசாங்கத் தரப்பினர் தட்டுவன்கொட்டிக்கு மின்சாரவசதி செய்து தருவதாகக் கூறியே வாக்குக் கேட்டனர். அடையாளமாக ஒரு மின்சாரக் கம்பத்தையும் நாட்டிச் சென்றார்கள். ஆனால், தேர்தலில் தோற்ற பின்னர் பழிவாங்கும் நடவடிக்கையாக மின்வழங்கும் திட்டத்தை அரசாங்கம் அப்படியே கிடப்பில் போட்டுவிட்டது என்று குற்றம்சாட்டிய பிரதேசவாசிகள், தங்கள் பிள்ளைகள் இரவு நேரங்களில் குப்பி விளக்கிலேயே படிக்க நேர்வதால் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும் இரவுநேரங்களில் கும்மிருட்டுக் காரணமாக அவசர தேவைகளுக்குக்கூட வெளியே சென்றுவர முடியாது இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்கள்.

நல்ல தண்ணீர் வசதியற்ற இக் கிராமத்துக்குக் கரைச்சிப் பிரதேசசபையினர் தினமும் ஒரு தடவை வாகனத்தின் மூலம் குடி தண்ணீர் விநியோகித்து வருகின்றனர்.

அவசர தேவைகளுக்கு கிராமத்தின் ஒரேஒரு பாடசாலையான கண்ணகையம்மன் மகாவித்தியாலயத்தின் மழைநீர் சேகரிப்புத் தொட்டியில் இருந்தும் நீர் பெறப்படுகிறது.

எரிபொருள் செலவு காரணமாகக் கரைச்சிப் பிரதேசசபை, முழுக்கிராமத்துக்குமான தண்ணீரை குறிப்பிட்ட மூன்று, நான்கு இடங்களில் வைத்தே வழங்கி வருகிறது.

தண்ணீருக்காகக் கரைச்சிப் பிரதேசசபைக்கு நன்றி தெரிவித்த பெண்கள், வயதுமுதிர்ந்தவர்களால் தண்ணீரை அதிக தூரத்துக்குக் காவிச் செல்லமுடியாது இருப்பதால் நீர் வழங்கும் இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஏற்பாடு செய்துதருமாறு அமைச்சரிடம் வேண்டுகோள் முன் வைத்தார்கள்.


கடற்றொழிலையும் விவசாயத்தையும் வாழ்வாதாரமாகக் கொண்ட இப்பகுதி மக்கள் மழையை நம்பியும் இரணைமடுவில் இருந்து வழிந்துவரும் நீரையும் நம்பியே விவசாயத்தை மேற்கொள்கின்றனர்.

ஆனால், மழை பொய்த்து, இரணைமடுவும் வற்றிப்போனதால் நெற்செய்கை இம்முறை முற்றாக அழிந்து போய்விட்டது. இதனால் தட்டுவன் கொட்டியின் பிரதான குளங்களான பரவக்குளத்தையும் காட்டுக்குளத்தையும் புனரமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இவர்களது கோரிக்கைகளுக்குப் பதிலளித்த அமைச்சர், விரைவில் தனது அமைச்சுக்கு உட்பட்ட நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரிகளை இப் பிரதேசத்துக்கு அழைத்துவந்து விவசாயத்துக்கு வேண்டிய நீரை நிரந்தரமாகப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியப்பாட்டு ஆய்வுகளை மேற்கொண்டு ஆவன செய்து தருவதாக உறுதியளித்தார்.

அத்தோடு, ஏனைய முறைப்பாடுகள் தொடர்பாக உரிய தரப்பினரோடு பேசி நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர் பொ. ஐங்கரநேசனுடன் கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப்பணிப்பாளர் அ.செல்வராசா, தட்டுவன் கொட்டி கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் நா.தியாகராஜா, முன்னாள் கல்விப் பணிப்பாளர் நா.தணிகாசலம் பிள்ளை, கண்ணகை அம்மன் வித்தியாலய அதிபர் த.கருணானந்தன், வைத்திய கலாநிதி த. சுக்ஷிதரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார்கள். (அ-6)







பூநகரி ஞானிமடம் அ.த.க. பாடசாலையின் 63 ஆவது ஆண்டு விழாவில் அரும்பு சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடை பெற்றபோது விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் விவேகானந்தர் பொன்மொழி மனனப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவி பரிசு பெறுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

## புதிய குரக்கன் இனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன

### விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்படும்

(கிளிநொச்சி)

பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பயனாக இரண்டு புதிய வகை குரக்கன் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வினங்கள் வெகுவிரைவில் விவசாயிகளுக்கு பரீட்சார்த்தமாக வழங்கப்படவுள்ளதாக விவசாய ஆராய்ச்சி மேலதிக பணிப்பாளர் கலாநிதி சி.ஜே.அரசகேசரி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செறிவான பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வட பகுதியில் குரக்கன் முக்கியமானதொரு பயிராகும். இரு போகங்களுக்கிடையிலான குறுகிய நாள் முதிர்வைக் காட்டும் குரக்கன் விவசாயிகளால் பெரிதும் விரும்பப்படுகின்றது.

ஏனெனில் விவசாயத்திணைக்களத்தால் வெளிவிடப்பட்டுள்ள இரவி இராவணா மற்றும் ஓசத என்னும் இனங்கள் நல்லியல்புகளை காட்டுவனவாகவிருப்பினும் இவை நீண்டகால வயதுடையதால் இரண்டு பயிர்களுக்கிடையில் பயிரிட வெளிவிடப்பட்டுள்ள இவ்வினங்கள் பொருத்தமானவையாக இல்லை என்பதாகும்.

இந்நோக்கத்தை நிறைவேற்ற விவசாய ஆராய்ச்சி நிலையம் திருநெல்வேலியிலிருந்தும் இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்திலும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பயனாக இரண்டு புதிய குரக்கன் தெரிவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

இவை போதுமான விளைச்சலை தரக்கூடியதும் குறுகிய வயதுடையதும் (நடுகைக்குப்பின் 65 நாட்கள்) தண்டு துளைப்பானின் தாக்கத்திலிருந்து தப்பக்கூடியதாகவும் அறியப்பட்டுள்ளது.

ஆராய்ச்சித்துண்டங்களில் பயனுள்ளனவாக அறியப்பட்டுள்ள இவ்வினங்கள் வெகுவிரைவில் விவசாயிகளுக்கு பரீட்சார்த்தமாக வழங்கப்படவுள்ளது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)




## புதுக்குடியிருப்பு சந்தையின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படும்

(குருமண்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புச் சந்தைக்கான அடிப்படை தேவைகள் படிப்படியாக நிவர்த்தி செய்யப்படுமென புதுக்குடியிருப்பு பிரதேச சபையின்செயலாளர்எஸ்.மிதிலைநாதன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இச் சந்தை எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி இருப்பதுடன், சந்தைக்கான கட்டடத்தொகுதி இல்லாமையால் வியாபாரம் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக வர்த்தகர்கள் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பர்தேச சபை செயலாளரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இச்சந்தைக் கட்டடம் அமைப்பதற்கு 2012 ஆம் ஆண்டு அரச சார்பற்ற நிறுவனமொன்றிலிருந்து 5 மில்லியன் ரூபா கிடைத்தது. எனினும், சந்தை அமைப்பதற்கு சொந்தக் காணி இல்லாமையால் குறித்த நிதி திரும்பிச் சென்றது.

இந்நிலையில், 2013 ஆம் ஆண்டு தொடக்கத்தில் புதுக்குடியிருப்பு வாழ் அன்பர் ஒருவர் சந்தை அமைப்பதற்கு தனது 2 ஏக்கர் காணியை நன்கொடையாக வழங்கினார்.

இருப்பினும், இக்காணியில் சந்தைக் கட்டடம் அமைப்பதற்கு நிதி மீளவும் கிடைக்கவில்லை.

இதனால், இக்காணியில் வர்த்தகர்கள் தாமாகவே வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இருப்பினும், சந்தைக்குத் தேவையான குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளை பிரதேச சபை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் அவர் கூறினார். (அ-250)

# கோயில் காணிக்கு உரிமை கோருகிறார் தனிநபர்

## தேரைச்சுற்றி வேலியும் அமைத்தார்

மன்னார் நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்து மாரியம்மன் ஆலய வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்த நபரொருவர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கோயில் தேரினை சுற்றி வேலி அமைத்துள்ளதாக ஆலய பரிபாலன சபை முருங்கன் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் நகரில் அமைந்துள்ள செல்வமுத்து மாரியம்மன் ஆலயம் சுமார் 120 வருட பழைமை வாய்ந்தது.

இக்கோயில் அமைந்துள்ள இடமும், அதனைச் சூழவுள்ள நிலப்பரப்பும் தனக்கு சொந்தமானதென உரிமை கோரிய தனி நபர் ஒருவர், கடந்த வெள்ளிக் கிழமை கோயிலின் தேர் நிறுத்தி வைக்கப்படும் காணியை சுற்றி முட்கம்பிகளினால் வேலியொன்றை அமைத்துள்ளார்.

இந்த நிலையில் நானாட்டான் ஸ்ரீசெல்வமுத்து மாரியம்மன் ஆலய பரிபாலன சபையினர் தேரைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வேலியை அகற்றுமாறு குறித்த நபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் அவர் அதற்கு இணங்க மறுத்துள்ளார்.

எனவே, பரிபாலன சபையினர் இவ்விடயம் தொடர்பில் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

இதனையடுத்து முருங்கன் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இக்கோயில் இந்து சமய கலாசார திணைக்களத்தில் குறித்த முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது.

தீ மிதிப்பு நிகழும் இடத்திலும் வேலி அடைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, மேற்படி தனிநபர் பிரச்சினையால் வருடாந்தத் திருவிழாவும் திருவிழாவை முன்னிட்டு நடைபெறும தீ மிதிப்பு வைபவமும் நடைபெறாமல் போய் விடுமோ என்ற அச்சம் கோயில் பரிபாலன சபையினருக்கும் பக்தர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. (அ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தில் பங்காளிக் கட்சியாக இருப்பதையிட்டு வெட்கப்படுகின்றேன்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

**அளுத்கமயில் நடைபெற்ற சம்பவங்கள் மத்தியில் அந்த மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அவலங்களுக்கும் நாங்கள் முகம்கொடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

அரசுக்கு காலக்கெடு விதித்து நாளை நடைபெறவுள்ள பாராளு மன்றத்தில் இப் பிரச்சினை சம்பந்தமாக நாங்கள் அறிக்கை ஒன்றை விடுக்க இருக்கின்றோம்.

இந்தப் பிரச்சினைக்கு காரணமாக இருந்த அமைப்பினரை கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது. கொழும்பில் பல்கலைக் கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடக்கின்றபோது நீதிமன்றம் சென்று தடைஉத்தரவு பெறும் பொலிஸார் ஏன் இந்த அமைப்பினரின் கூட்டம் அளுத்கமயில் நடைபெற முன்பே இதனை கட்டுப்படுத்தும்படி அறிவித்திருந்தும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆகவே இந்த விடயத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிச்சயம் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும். அந்த அமைப்பினர் இன உணர்வுகளை ஏற்படுத்தி பிரச்சினையை ஏற்படுத்துங்கள் என பேசிய பேச்சுக்கள் ஆதாரங்களாக உள்ளன.

அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கோ தீர்மானம் எடுப்பதற்கும் தலைமைத்துவத்துக்கு எமது கட்சியின் உயர்பீடம் சகல அதிகாரங்களை தந்துள்ளது. இந்த தலைமை ஏற்கனவே 2 முறை அமைச்சுப் பொறுப்பில் இருந்து விலகிய சந்தர்ப்பங்கள் உண்டு.

ஆகவே சரியான நேரத்தில் சரியான முறையில் பக்குவமாக நாங்கள் சிந்தித்து ஒரு முடிபை எடுப்போம்.

இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்பை இந்த அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

பதுளையில் நடைபெற்ற சம்பவத்தில் கூட இந்த அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தின் போது முஸ்லிம் வாலிபர் மற்றும் கடைகளை தாக்கும்போதும் கூட பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகவே தான் வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு இன்று காலை தர்கா நகரில் வைத்து நான் நீதி அமைச்சராகவும் இந்த அரசாங்கத்தின் பங்காளி கட்சியாக இருப்பதையிட்டு நான் வெட்கப்படுகின்றேன் என்றார். (அ)

# இணையத்தள குற்றங்களுக்கு பிரதான காரணம் காதல்

இலங்கையில் இடம்பெறும் இணையத்தள குற்றங்கள் மற்றும் சீர்கேடுகள் அதிகரித்துள்ளதாக இலங்கை கணனி அவசர பதிலளிப்பு ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் குறித்து கடந்த வருடத்தில் ஆயிரத்து 200 முறைப்பாடுகள் கிடைத்தன எனவும் இந்த வருடத்தில் கடந்த 5 மாதங்களில் 900 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் ஒன்றியத்தின் தகவல் பாதுகாப்பு சம்பந்தமான சிரேஷ்ட பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டில் முடிவடைந்த 5 மாதங்களில் கிடைத்த முறைப்பாடுகளில் 80 வீதமானவை பேஸ்புக் சமூக வலைத்தளங்களை தவறாக பயன்படுத்தியமை தொடர்பான முறைப்பாடுகள் எனவும் ஏனைய முறைப்பாடுகள் மின்னஞ்சல்களை தவறாக பயன்படுத்தியமை தொடர்பானவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இணையத்தளங்களில் இடம்பெறும் பல குற்றங்களுக்கு காதல் தொடர்புகளால் ஏற்படும் பிரச்சினைகளே காரணமாக இருக்கின்றன. இணையத்தளங்களை பயன்படுத்தும் நபர்கள் முடிந்தளவில் தமது இரகசியங்களை பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# வன்முறைகளை கட்டுப்படுத்த விரைவில் நடவடிக்கை

## அரசியல்வாதிகள் இணக்கம்

வன்முறைகளை கட்டுப்படுத்த பொறிமுறைமை ஒன்றை உருவாக்க அரசியல்வாதிகள் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் களுத்துறை மாவட்டச் செயலகத்தில் விசேட கூட்டமொன்று நடைபெற்றுள்ளது.

பௌத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் டி.எம். ஜயரட்ன இந்த கூட்டத்திறகு தலைமை தாங்கினார்.

அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, எஸ்.பி. திஸாநாயக்க, ஏ.எச்.எம். பௌசி மைத்திரிபால சிறிசேன, குமார வெல்கம, டலஸ் அழப்பெரும, மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

வன்முறைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பயங்கரவாத ஒழிப்பில் இலங்கையை பின்பற்றாதீர்

## நைஜீரியாவிடம் ம.உ. கண்காணிப்பகம் கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாத ஒழிப்பு தொடர்பில் இலங்கையை நைஜீரியா பின்பற்றக் கூடாது என மனித வுரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. போகோ ஹறாம் என்னும் தீவிரவாத அமைப்பை ஒழிப்பதற்கு இலங்கையின் பயங்கரவாத ஒழிப்பு பற்றிய அனுபவங்களைப் பின்பற்றப் போவதாக நைஜீரியா அறிவித்திருந்தது.

எனினும், பயங்கரவாத ஒழிப்பு தொடர்பிலான இலங்கையின் அணுகுமுறைகளை பின்பற்றுவது நைஜீரியாவிற்கு பொருத்தமாகாது என சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மனிதவுரிமை கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையை பின்பற்றும் நைஜீரியாவின் திட்டம் மிகவும் மோசமானதாகவே நோக்கப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை படையினர் நடத்திய யுத்தத்தின் போது பாரியளவில் குற்றச் செயல்களும் உரிமை மீறல்களும் இடம் பெற்றன.

குறிப்பாக 2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மிகவும் மோசமான முறையில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இரண்டு தரப்பினரும் குற்றச் செயல்களை மேற்கொண்டனர். இலங்கை அரசாங்கம் செய்ததனைப் போன்று பொதுமக்களை ஆபத்தில் ஆழ்த்தும் வகையில் நைஜீரிய அரசாங்கம் பயங்கரவாத இல்லாதொழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது எனவும் கண்காணிப்பகம் கோரியுள்ளது. (அ)

# தேர்தல் ஆணையாளரிடம் நட்டஈடு கோரி நீதிமன்றில் மனு

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளரிடம் நட்டஈடு கோரி நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கட்சியொன்றை பதிவு செய்ய நிராகரித்ததாகத் தெரிவித்து தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிற்கு எதிராக இவ்வாறு நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிங்கள பௌத்தம் என்ற கட்சியை பதிவு செய்ய தேர்தல் ஆணையாளர் இணங்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரான எஸ்.எம்.ஜீ.எஸ். பீரிஸ் என்பவரே இவ்வாறு நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

கட்சியை பதிவு செய்யாத காரணத்தினால் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் இதற்காக ஐந்து கோடி ரூபா நட்டஈடு வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்து அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

# பிரிவுத்துயர் பகிர்வு



### குமாரசாமி நல்லையாப்பிள்ளை இராசநாயகம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி நல்லையாப்பிள்ளை இராசநாயகம் கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு Community Centre,26-28 Carlyle Road, Manor Park London, E12 6BN UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### றெட்னேஸ்வரன் றோபேட் நிஷாந்தன்

மன்னார் சின்னக்கடையைப் பிறப்பிடமாகவும் லண்டன் Morden Surrey ஐ வசிப்பிடமாகவும் கொண்ட றெட்னேஸ்வரன் றோபேட் நிஷாந்தன் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு St.Teresa's Church,250 Bishopford Road,Morden SM4 6BZ,UK என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி தர்மலிங்கம் நேசமணி

புத்தூர் நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் நேசமணி நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நவக்கிரி இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் இன்று முற்பகல் 10 மணிக்கு நிலாவரை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### இராமலிங்கம் தியாகராஜா

யாழ்.சூறாவத்தையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Mengen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் தியாகராஜா கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு Bremer StraBe 9, 88512, Mengen ,Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி குமாரலிங்கம் பத்மாவதி

மானிப்பாய் சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரலிங்கம் பத்மாவதி கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை நடைபெறும்.




### திருமதி தேவராஜா வசந்தாதேவி

யாழ்.வறுத்தளைவிளான் கட்டுவனைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Neuss ஐ வசிப் பிடமாகவும்கொண்ட தேவராஜா வசந்தாதேவி கடந்த 15 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றுகாலமா னார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு Hauptfriedhof Rheydter StraBe 191 41464 Neuss, Germany என்னும் முகவரியில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவை தாக்கிய இரட்டை சூறாவளி



(நியூயோர்க்)
அமெரிக்காவில் உள்ள ஒக்லகோமா மாகாணத்தில் நேற்று அதிகாலை இரட்டை சூறாவளி தாக்கியது. மணிக்கு 265 கி.மீற்றர் வேகத்தில் வீசிய புயலுக்கு பில்கர், ஓமாஹா, நார்போல்க், நெப்ராசகா, ஸ்டேனடன் உள்ளிட்ட பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

பில்கர் நகரில் மின்சாரம், குடிநீர், சாக்கடை பணிகள் முற்றிலும் முடங்கின. ஓமா ஹாலில் இருந்து பொது மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

ஸ்டேன்டன், கமிங், வேயின் ஆகிய பகுதிகளில் பொது மக்கள் வெளியே செல்லாமல் வீடுகளுக்குள் முடங்கி கிடந்தனர். வீதிகள் மூடப்பட்டதால் பில்கர் பகுதியில் வாகனங்கள் ஓடவில்லை.

பல வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின. வீதிகளில் இடிபாடுகள் சிதறி கிடந்தன. வீதியோரங்களில் வாகனங்கள் உடைந்து நொறுங்கி கிடந்தன.

இந்த சூறாவளிப் புயலுக்கு ஒருவர் பலியானார். 16 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# ஈராக் நாட்டிற்கு இராணுவ உதவி

## அமெரிக்க ஜனாதிபதியின் திடீர் உத்தரவு

(வோஷிங்டன்)
ஈராக்கில் தீவிரவாதிகளை குண்டுவீசி தாக்க அமெரிக்கா முடிவு செய்து அதற்காக இராணுவ படையையும் அனுப்பியுள்ளது.

பக்தாத் வீழ்ந்தால், அடுத்த தாக்குதல் அமெரிக்கா மீதுதான். எனவே, அமெரிக்கா உடனடியாக ஈராக் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்காவில் எழுந்த கடும் அழுத்தத்தின் காரணமாகவே, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவினால் நேரடியாக அமெரிக்க இராணுவத்தை ஈராக் உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபடுத்த சம்மதித்துள்ளதாகத் தெரிகிறது.

ஈராக்கில் சன்னி பிரிவை சேர்ந்த சதாம் உசேனை ஜனாதிபதி பதவியில் இருந்து அமெரிக்கா விரட்டியது. அவரை கைது செய்து தூக்கிலிட்டது. அங்குள்ள ஷியா பிரிவை சேர்ந்தவர்கள் அரசு அமைக்க உதவி செய்தது.

அதைத்தொடர்ந்து சன்னி பிரிவை சேர்ந்த தீவிரவாதிகள் அரசுக்கு எதிரான வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டனர். வெடிகுண்டு தாக்குதலை நடத்தி அப்பாவி பொதுமக்களை கொன்று குவித்தனர்.

கடந்த சில நாட்களுக்கு முன் அரசுக்கு எதிரான தாக்குதலை தொடங்கிய அவர்களுடன் அரசு படையும் மோதுகிறது. இதனால உள்நாட்டு போர் மூண்டுள்ளது.

தற்போது மொசூல், திக்ரித், சாதியா, ரமாடி, சமர்ரா, ஜலாலா உள்ளிட்ட முக்கிய நகரங்களை கைப்பற்றினர்.

தற்போது, தலைநகர் பக்தாத் நோக்கி அதிரடியாக முன்னேறி வருகின்றனர்.

தீவிரவாதிகளின் முன்னேற்றத்தை தடுக்க ஈராக் அரசு படையால் முடியவில்லை. எனவே, அமெரிக்கா உதவியை ஈராக் பிரதமர் மலிகி நாடினார்.

தொடக்கத்தில் அமைதியாக இருந்த அமெரிக்கா தற்போது ஈராக்குக்கு உதவ முன்வந்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்கா



யு.எஸ்.எஸ். ஜார்ஜ். எச்.டபிள்யூ. புஷ் என்ற விமானம் தாங்கி போரக்கப்பலை நேற்று முன்தினம் ஈராக்குக்கு அனுப்பியது.

மேலும் ஷியா பிரிவினர் ஆட்சி நடத்தும் ஈரான் உதவியையும் அமெரிக்கா நாடியுள்ளது.

அதற்காக ஈரானுடன் பேச்சுவார்த்தையை தொடங்கியுள்ளது. இந்த தகவலை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி தெரிவித்துள்ளார்.

மேலும் தீவிரவாதிகள் மீது குண்டு வீசி தாக்கவும் அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இதற்கிடையே ஈராக்குக்கு 278 இராணுவ வீரர்களை அமெரிக்கா நேற்றுமுன்தினம் அனுப்பியது. அங்கு தங்கியிருக்கும் அமெரிக்க இராணுவ வீரர்கள் மற்றும் பக்தாத்தில் உள்ள தூதரகத்தை காக்கவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈராக்குக்கு அனுப்ப ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அங்கு மற்றொரு போரை திணிக்க தயாராக இல்லை என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.



பிரேசில் வந்திறங்கிய ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கலை பிரேசில் ஜனாதிபதி தில்மா ரூசாப் வரவேற்பதைப் படத்தில் காணலாம்

## இந்திய - பூட்டான் உறவினால் எமக்கு கவலை இல்லை

(பூட்டான்)
பூட்டானுடனான இந்திய உறவு குறித்து எங்களுக்கு கவலை இல்லை என சீன வெளியுறவுத் துறை செய்தித்தொடர்பாளர் ஹீவா சூன்யிங் கூறியுள்ளார்.

பூட்டானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அங்கு கூறிய கருத்துத் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த சில ஆண்டுகளாக பூட்டான் நாட்டுடன் தூதரக உறவுகளை மேற்கொள்வதற்கு சீனா எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. இந்த நிலையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அண்டை நாடான பூட்டானுக்கு 2 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது, இந்தியா - பூட்டான் இடையே வலுவான நட்புறவு மேலும் வளரும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து சீனாவிடம் கருத்து கேட்கப்பட்டது. அதற்கு பதில் அளித்து, சீன வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் ஹுவா சூன்யிங் மேலும் கூறியதாவது,

பூட்டானுடன் நாங்கள் தூதரக உறவுகளை அமைத்துக் கொள்ளவில்லை. எனினும், இரு நாடுகளிடையே நட்பு ரீதியான பரிமாற்றங்களும், பயண வருகைகளும் தொடரும். பூட்டானின் சுதந்திரம், இறையாண்மை, எல்லையில் ஒற்றுமை ஆகியவற்றை மதிக்கிறோம். தவிர, அயல் நாடு என்பதால் பூட்டானுடன் நட்புறவை வளர்த்துக் கொள்ளவே விரும்புகிறோம்.

பூட்டானுக்கு இந்திய பிரதமர் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தை நாங்கள் கவனத்தில் கொண்டோம். பூட்டானுடன் இந்தியா உறவை மேம்படுத்திக் கொள்வது குறித்து எங்களுக்கு கவலை எதுவும் இல்லை. அண்டை நாடுகள் ஒன்றுக்கொன்று நட்பு ரீதியாக உறவை மேம்படுத்திக் கொண்டால் அது எங்களுக்கு மகிழ்ச்சியானதுதான் என்றார்.

## தி.மு.க.விலிருந்து குஷ்பு விலகல்



(சென்னை)
தி.மு.க.விலிருந்து விலகுவதாக நடிகை குஷ்பு அறிவித்துள்ளார். இது தொடர்பில் நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தி.மு.க.வில் இணைந்த நாள் முதல், எனக்கு அளிக்கப்பட்ட பணியை, நூறு சதவீத சிரத்தையுடன் நிறைவேற்றியதை, தி.மு.க.வில் பொறுப்பில் உள்ளவர்கள் முதல், அடிப்படைத் தொண்டர்கள் வரை, அனைவரும் அறிவார்கள்.

எனினும் எனது இந்தப் பயணம் தாங்க இயலாத மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

எனவே, தி.மு.க.விலிருந்தும், அதன் அடிப்படை உறுப்பினரிலிருந்தும், விலகுவது என்ற முடிவை கனத்த இதயத்துடன் மேற்கொள்கிறேன். இவ்வாறு, அவர் கூறியுள்ளார்.

## வெளிநாட்டு நிறுவனங்களை வெளியேற தலிபான் தீவிரவாதிகள் உத்தரவு

(பாகிஸ்தான்)
பாகிஸ்தானை விட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் அகல வேண்டும் என சர்வதேச பயங்கரவாத அமைப்பான தலிபான் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



கராச்சி விமான நிலைய குண்டு வெடிப்பு சம்பவத்தையடுத்து தலிபான்கள் மீது பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதில் 100 இக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பாகிஸ்தான் இராணுவத்திற்கு பதிலடி கொடுக்க சபதம் மேற்கொண்டுள்ள தலிபான் இயக்கம், பாகிஸ்தானில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்களை வெளியேறும்படி எச்சரித்துள்ளது.

இதுகுறித்து தலிபான் செய்தி தொடர்பாளர் ஷாகிதுல்லா ஷாகித் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது,

வெளிநாட்டு முதலீட்டாளர்கள், விமான நிலையங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் பணிகளை நிறுத்திவிட்டு பாகிஸ்தானை விட்டு வெளியேற தயாராக வேண்டும். இல்லையென்றால் அவர்களுக்கு ஏற்படும் பேரிழப்புகளுக்கு அவர்களே பொறுப்பாக வேண்டியிருக்கும்.

மேலும், பழங்குடியின பெண்கள் மற்றும் குழந்தைகள் உயிரிழப்புக்கு நவாஸ் ஷெரீப் அரசும் பஞ்சாப் அரசும் பொறுப்பாகும்.

முஜாகிதீன்களின் பதில் தாக்குதல்கள் மூலம் வரலாற்றில் உங்கள் கதை எச்சரிக்கையாக இடம்பெறும்.

தலிபான் உங்கள் மாளிகைகளை கொளுத்துவார்கள். பேச்சுவார்த்தை மற்றும் அமைதி நிலவ நீங்கள் மீண்டும் கெஞ்சுவீர்கள். ஆனால் அது காலம் கடந்த முடிவாக இருக்கும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாய்லாந்து நாட்டிலிருந்து கம்போடியர்கள் வெளியேற்றம்

(பொய்பெட்)
தாய்லாந்திலுள்ள கம்போடியர்கள் தங்கள் தாய்நாட்டிற்கு மீளவும் திரும்பத் தொடங்கியுள்ளனர்.



தாய்லாந்தின் பிரதமர் யிங்க்லக் ஷினவத்ராவின் பதவி இறக்கம் தொடர்பாக எழுந்த பிரச்சினைகளில் கடந்த மாதம் அங்கு இராணுவம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது.

அனுமதி இல்லாமல் பணி புரிபவர்கள் கைது செய்யப்பட்டு நாடடை விட்டு வெளியேற்றப்படுவார்கள் என்ற எச்சரிக்கை அறிக்கை ஒன்று இராணுவத்தால் வெளியிடப்பட்டது.

சர்வதேச குடியமர்வு அமைப்பின் கணக்கீட்டின்படி தாய்லாந்தில் மூன்று மில்லியன் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அதிகாரபூர்வமற்ற வகையில் அங்கு தங்கியுள்ள ஒரு இலட்சத்து 80 ஆயிரம் கம்போடியர்களும் அடங்கும்.

இவர்களில் பெரும்பான்மையானோர் கடல் உணவு மற்றும் விவசாயத்துறையில் பணி புரிந்து வருகின்றனர். தாய்லாந்தின் தொழில்துறைகளிலும் முக்கிய பங்கு வகிக்கும் பெரும்பான்மையான வெளிநாட்டுத் தொழிலாளர்களும் வேலை அனுமதி பெறாமலே அங்கு பணிபுரிந்து வருகின்றனர்.

இராணுவத்தின் அறிக்கைகளை தொடர்ந்து அங்கிருந்த பெரும்பான்மையான கம்போடியர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பத் தொடங்கினர்.

தாய்லாந்திலிருந்து எல்லைப்புற நகரான பொய்பெட் வரை அந்நாட்டு டிரக்குகளில் வந்து இறங்கிய கம்போடியர்களுக்கு அங்கு உணவு வழங்கப்பட்டது. அதன் பின் அவர்கள் தங்கள் நாட்டு வாகனங்களில் சொந்த ஊர்களுக்குத் திரும்பினர்.

மேலும் கம்போடியர்களை மட்டுமே தங்களது அறிக்கை குறிப்பிடவில்லை என்று இராணுவத்தின் தகவல் தொடர்பாளரான வின்தை சுவரி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதனால் தாய்லாந்தில் அனுமதி இல்லாமல் இருக்கும் ஏனைய நாட்டவரும் அச்ச நிலை அடைந்துள்ளனர்.

# மோடி அரசால் நாட்டுக்கு கேடு

(புதுடில்லி)
மோடி அரசு பதவியேற்றதன் மூலம் நாட்டுக்கு கெட்டகாலம் ஆரம்பித்து விட்டது என்று காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது.

மோசமான பொருளாதார நிலையை ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு விட்டு சென்றுள்ளதால் மக்கள் கசப்பு மருந்துக்கு தயாராக வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளதை காங்கிரஸ் விமர்சித்துள்ளது.

மக்களுக்கு பாதகமாக எந்த முடிவையும் எடுக்க மாட்டோம் என்று கூறிய மோடி தற்போது இவ்வாறு கூறுவது முரண்பாடானது என்று அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் சக்திசிங் கோகில் தெரிவித்துள்ளார்.

மோடிக்கும் பாரதீய ஜனதாவுக்கும் நல்ல காலம் பிறந்திருக்கலாம் என்று கூறிய அவர் நாட்டுக்கு-கேடு காலம் ஆரம்பித்து விட்டது என்றார்.

இதே கருத்தை வெளியிட்டுள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் பி.சி.ஜேக்கோ புதிய அரசு பொறுப்பேற்ற 3 வாரத்திலேயே பணவீக்கம் உயர்ந்துள்ளதாக கூறியுள்ளார்.

முந்தைய அரசை குறை கூறி வந்த பாரதீய ஜனதா தற்போது பணவீக்கத்தை ஏன் கட்டுப்படுத்தவில்லை என்று மக்களுக்கு விளக்க வேண்டும் என்று ஜேக்கோ கேட்டுக்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழக் கனவு கண்டிருந்தபோது
எனது கோவணமும் பறிபோய் விட்டது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எங்கள் இளைஞர்களை - வழிப்படுத்துவது யார்?

மன்னன் ஒருவன் பட்டத்துக் குதிரைகளை பராமரிப்பதற்காக சேவகன் ஒருவனை நியமனம் செய்திருந்தான்.

இரவு முழுவதும் விழித்திருந்து குதிரைகளைப் பராமரிப்பது அவனது கடமையாக இருந்தது. எனினும் இரவு முழுவதும் முழித்திருப்பது அவனுக்கு கடினமான காரியமாக இருந்தது.

எனவே இரவில் விழித்திருப்பதற்கு என்ன உபாயத்தைக் கையாளலாம் என்று தனது நண்பனிடம் அவன் ஆலோசனை கேட்டான்.

அதற்கு அவனது நண்பன், இரவுவேளை வானத்தில் காட்சிதரும் நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருந்தால் விழித்திருப்பது சுலபம் என்றான்.

நண்பனின் ஆலோசனைப்படி குதிரைக் காவலன் வானத்து நட்சத்திரங்களை எண்ணிக் கணக்கிடத்தொடங்கினான். அதிகாலை வேளை விடிவெள்ளியும் தோன்றிற்று. அதையும் அவன் தன் கணக்கில் சேர்த்துக் கொண்டான்.

இப்போது முற்றுமுழுதாக விடிந்து விட்டது. அவன் அப்போதுதான் குதிரைகளைப் பார்த்தான். அந்த லயத்தில் எந்தக் குதிரையும் - எந்தக் குதிரைகளும் காணப்படவில்லை.

காவலன் திடுக்கிட்டுப் போனான். குதிரைகள் காணாமல் போன செய்தியை அறிந்த மன்னன் குதிரைக் காவலனுக்கு கடும் தண்டனை வழங்கினான் என்பது கதை.

காவலனை நியமித்தது குதிரைகளைப் பராமரிப்பதாக இருந்த போதிலும் அவன் வானத்து நட்சத்திரங்களை கணக்கிட்டு விழித்திருப்பதில் கவனம் செலுத்தினானே அன்றி, குதிரைகளைக் காவல் செய்யும் தனது பணியை கிஞ்சித்தும் நினைத்திலன். இதன் காரணமாக குதிரைகள் காணாமல் போயின. இந்தக் கதைக்கும் எங்களுக்கும் நிறையவே தொடர்பு உண்டு.

நாங்களும் உரிமை, சிங்களவர்கள் என்று பேசுவதில் முழுக்காலத்தையும் செலவழித்தோமேயன்றி எங்கள் இளைஞர்களை வழிப்படுத்துவதில் அவர்களுக்கு சமூக, பொருளாதார, அரசியல் தெளிவுகளை ஏற்படுத்துவதற்கு தவறிவிட்டோம்.

இதன் காரணமாக இன்று எங்கள் வட பகுதியில் கொலை, கொள்ளை, வன்மையான சண்டை, விரசங்கள் மலிந்து போயிற்று. எடுத்த எடுப்பில் வெட்டிச் சரித்து மனித கொலை புரியும் அளவில் எங்கள் இளைஞர்களின் ஒரு பகுதியினர் வன்மைத் தனத்துடன் செயற்படுகின்றனர். கூடவே போதைப் பாவனையும் இந்த நாசகாரியங்களுக்கு உந்து சக்தியாக அமைகிறது.

ஒரு காலத்தில் எங்கள் இளைஞர்களை விழிப்படையச்செய்வதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் களத்தில் இறங்கி பிரசாரம் செய்த ஞாபகங்கள் உண்டு.

ஆனால், இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு சில மாணவர்கள் குடித்து வெறித்து பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரன் கோயில் நந்தியை உடைத்தெறிந்து அட்டகாசம் செய்ததான தகவல்கள் இதயத்தை வெடிக்கச் செய்கின்றன.

தென்பகுதியில் பௌத்த மாணவர்கள் வெசாக் பண்டிகைக்கு விரதமிருந்து வழிபாடு செய்கின்ற பக்குவத்தை பார்க்கும் அதேநேரம், எங்கள் பல்கலைக்கழக பிள்ளைகள் சிலர் குடித்துக்கும் மாளம் போட்டு பரமேஸ்வரன் கோயில் நந்திச் சிலையை உடைக்கின்றனர் என்றால், எங்கள் இளைஞர் சமூகம் எங்கே போகிறது?

இவர்களை வழிப்படுத்துவது யார்? இப்படியே நிலைமை போனால் எங்கள் எதிர்காலம் எப்படியிருக்கும்? எதுவாயினும் ஒன்றை மட்டும் அடித்துக் கூறமுடியும். அதாவது இப்படியே வெட்டும் கொத்தும் கொலையும் என்பதாக எங்கள் நிலைமை இருந்தால், யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதியை நோக்கிய இன்னுமொரு இடப்பெயர்வை புத்திஜீவிகளும் பொருளாதாரபலம் உடையவர்களும் செய்வர் என்பது சர்வ நிச்சயம்.

# அளுத்கம கலவரத்திற்கு அரசே முழுப்பொறுப்பேற்க வேண்டும்

## ரில்வின் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கம் இனவாதத்தையும் மத வாதத்தையும் தூண்டும் வகையில் செயற்பட்டு வருவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

பத்தரமுல்லயில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும தெரிவிக்கையில்,

யாசகரின் காயத்தைப் போன்று அரசாங்கம் இனவாத, மதவாதப் பிரச்சினைகளை சுயலாபத்திற்காக பயன்படுத்திக் கொள்வதுடன் வடக்கு யுத்தத்தை காண்பித்து அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளை மூடிமறைக்க முயற்சித்தது.

யுத்த நிறைவின் பின்னர் அரசாங்கத்திற்கு காண்பிக்க எதுவும் இருக்கவில்லை எனவும் இவ்வாறான மத முரண்பாடுகளை தூண்டி அதன் மூலம் அரசியல் நடத்தவே அரசாங்கம் முயற்சிக்கின்றது.

அரசாங்கம் இனவாத சக்திகளை போஷித்து வருகின்றது.

அளுத்கம பிரதேசத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு அரசாங்கத்துடன் தொடர்பு இருப்பதாகவும், இதனாலேயே சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் தரப்பினர் உரிய முறையில் நடவடிக்கை எடுக்க முடியாமல் போனதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரே ஊரைச் சேர்ந்த மக்கள் இரண்டு குழுக்களாக பிளவடைந்துள்ளதாகவும், கஷ்டப்பட்டு சம்பாதித்த சொத்துக்கள் அழிவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் மக்களின் பலவீனங்களைப் பயன்படுத்தி கடும்போக்குவாத அமைப்புக்களின் ஊடாக பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டுள்ளது.

தற்போது இடம்பெற்று வரும் பிரச்சினைகள் தொடர்பான முழுப் பொறுப்பினையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டின் புத்திஜீவிகள், மதத் தலைவர்கள் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த முன்வர வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவங்களில் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக விசாரணைக் குழு நிறுவப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான மோதல் சம்பவங்கள் இடம் பெறுவது நாட்டுக்கு பாதக விளைவுகளை மேலும் ஏற்படுத்தும் எனவும், சர்வதேச தலையீடுகள் அதிகரிக்க வழிகோலும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# கச்சாய் பகுதியில் தங்கூசி வலைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் கச்சாய் கடற்கரையில் மீன்பிடிப்பதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை யாழ்.மாவட்ட நீரியல்வளத் துறை திணைக்களத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

கடற்றொழில் பரிசோதகர்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின்படி மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் 5 இலட்சம் பெறுமதியான 11 தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டன.

இது குறித்து யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தியிடம் கேட்டபோது,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலரிடம் இருந்தும் எமக்கு கச்சாய் பகுதியில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலை பாவித்து மீன்பிடிப்பதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதனடிப்படையில் பலமுறை முயற்சிகளை மேற்கொண்டும் எம்மால் வலைகளை கைப்பற்றிக் கொள்ள முடியவில்லை எனினும் நேற்று அதிகாலை மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் 11 வலைகள் கைப் பற்றப்பட்டுள்ளன.

எனினும் அதன் உரிமையாளர்கள் யார் என அடையாளம் காணப்படவில்லை. குறித்த வலைகளை சாவகச்சேரி நீதிமன்றத்தில் பாரப்படுத்தவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# வாள்வெட்டில் மூவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விநாயகபுரம் பகுதியில் இனம்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் மூவர் காயமடைந்துள்ளனர்.

விநாயகபுரம் பகுதியில் உள்ள கோயில் ஒன்றில் இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தினை அடுத்து நேற்று அதிகாலை 3 மணியளவில் இவர்கள் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த மூவரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குறித்த பிரதேசவாசி ஒருவர் தெரிவித்தார்.

இவ் வாள்வெட்டுத் தாக்குதல் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸரால் தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

# தெய்வீக தொடர் இசைச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மயிலங்காடு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அலங்காரத் திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி 12 நாட்கள் நடைபெறும். இதில் தினமும் மாலை 6 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு, கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சி.வை. நித்தியானந்த சர்மா பெரிய புராணம் பற்றி தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

வராகி அம்மன் கோவிலடி கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மூத்த விநாயகர் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினராஜா தயாகரன் அண்மையில் நீதவான் ஏ.ஒ.ஆனந்தராஜா முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஆனைக்கோட்டை உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை; மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனும் நல்லூர் வட்ட லயன்ஸ் கழகத்தின் உறுப்பினரும் ஆவார். (அ)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## தேடுவது உனக்கு கிடைக்கும்



✦ வெண்ணெய் எடுக்க சூரிய உதயத்திற்கு முன்பாக கடைய வேண்டும். பகலில் கடைந்தால் நன்றாகச் சேராது. அதுபோல் சிறுவயதிலேயே ஆன்மிக நெறியில் நின்று மனதைக் கடவுளிடம் செலுத்தினால் தான் இறைக்காட்சி கிடைக்கும்.

✦ மனிதனின் மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. அது கிழிந்து, நாலாப் பக்கங்களிலும் ஓடிவிட்டால் அதை ஒன்று சேர்ப்பது சிரமம். அதுபோல் மனம் பல வழிகளில் சென்று, உலக விஷயங்களோடு ஈடுபட்டிருக்கும் போது அதைக் குவித்து ஒருமுகப்படுத்துவதும் சுலபமல்ல.

✦ கடவுளைத் தேடுபவன் அவரை அடைகிறான். செல்வத்தைத் தேடுபவன் அவற்றை அடைகிறான். நீ எதைத் தேடுகிறாயோ அதையே அடைவாய்.


✦ "நான்" என்னும் அகங்காரம் அழியும்போது கடவுள் தோன்றுகிறார். ஒருவனது அகங்காரம் அவனது உடல் இருக்கும் வரை அவனைவிட்டு முற்றிலும் நீங்குவதில்லை.

✦ ஒளியை உணர்பவன் இருளையும் உணர்கிறான். பாவம் தெரிந்தவனுக்கு புண்ணியமும் தெரியும் குணத்தை அறிந்தவன், குற்றத்தைப் பற்றியும் அறிந்திருப்பான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜே.பி.எல். கிரிக்கெட் சுற்றுப் போட்டி

## யங்ஸ்ரார் வெற்றி



ஜே.பி.எல் பருவகாலம் 2 இற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி திருநெல்வேலி வை.எம்.எஹ்.ஏ விளையாட்டுக் கழக அணியை 2 விக்கெட்டுக்களால் போராடி வெற்றி கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற திருநெல்வேலி வை.எம்.எஹ்.ஏ விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி வை.எம்.எஹ்.ஏ விளையாட்டுக் கழக அணி 16.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. இதில் நிலாஜனன் 30 ஓட்டங்களையும் பந்துஷன் 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 34 ஓட்டங்கள் கிடைத்தன. ஏனைய எவரும் இரட்டை இலக்கங்களை எட்டவில்லை.


பந்துவீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் முகுந்தன் 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கோபிகன் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சுஜி 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 97 என்றும் இலகுவான வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி திருநெல்வேலி வை.எம்.எஹ்.ஏ அணியின் பந்துவீச்சில் தடுமாறி 19.1 ஓவர்களிலேயே 8 விக்கெட்டுக்களை இழந்து 97 ஓட்டங்களை பெற்றது. இதில் சுஜன் 16 ஓட்டங்களையும். சதீஷ் 11 ஓட்டங்களையும். குமுதன் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி வை.எம்.எஹ்.ஏ விளையாட்டுக் கழக அணி சார்பில் நிலாஜனன் 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் ஜெயராஜ் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சிவபாஸ்கர் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக யங்ஸ்ரார்விளையாட்டுக் கழக அணியின் முகுந்தன் தெரிவானார். (க-23)

## ஸ்கந்தாஸ்ரார் வெற்றி



ஜே.பி.எல் பருவகாலம் 2 இற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் நிரோஜன் அதிரடி கைகொடுக்க சுன்னாகம் ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணியை 18 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

நாணயசுழற்சியில் வென்ற மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி முதலில் களத்தடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் நிரோஜன் அதிரடியாக 64 ஓட்டங்களையும் சன்சயன் 39 ஓட்டங்களையும். விஷ்ணுப்பிரகாஷ் 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 16 ஓட்டங்கள் கிடைத்தன.


பந்துவீச்சில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி சார்பில் கிஷோக்குமார் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் சுபாஷ். வினோத். டுஷான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 149 என்றும் வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி 17 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களையே பெற்றது. இதில் கிஷோக்குமார் 34 ஓட்டங்களையும். வினோத் 22 ஓட்டங்களையும். சுபாஷ்கரன் 17 ஓட்டங்களையும் பிரதீபன் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தாஸ்டார் விளையாட்டுக் கழக அணி சார்பில் ஜனக்ஷன் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களையும் சன்சயன் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் விஷ்ணுப்பிரகாஷ் 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் நிரோஜன். கதேஜன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அதிரடியாக துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தாஸ்டார் விளையாட்டுக் கழக அணியின் நிரோஜன் தெரிவானார். (க-23)

## மூளாய் விக்டரி வெற்றி




ஜே.பி.எல் பருவகாலம் 2 இற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் மூளாய் விக்டரி விளையாட்டுக் கழக அணி திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழக அணியை 18 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழக அணி முதலில் களத்தடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக் களை இழந்து 91 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் சிவராஜ் 25 ஓட்டங்களையும் கபிலன். முரளி ஆட்டமிழக்காது தலா 13 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

உதிரிகளாக 24 ஓட்டங்கள் கிடைத்தன.

பந்துவீச்சில் மூளாய் விக்டரி விளையாட்டுக் கழக அணி சார்பில் நிஷாந் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு 92 என்றும் வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்டரி விளையாட்டுக் கழக அணி 17.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களை பெற்றது.

இதில் கணேஷானந் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழக அணி சார்பில் லவகாந் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களையும் சுரேந். விதுன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அதிரடியாக துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்டரி விளையாட்டுக் கழக அணியின் கணேசானந் தெரிவானார். (க-23)

## ஆஸி நியூசவுத்வேல்ஸ் வெற்றி

பருத்தித்துறை ஹாட்லியைற்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் அவுஸ்திரேலியா நியூ சவுத் வேல்ஸ் சி.சி.சி.சி. அணிக்கும் இடையிலான 30 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டியில் நியூசவுத் வேல்ஸ் சி.சி.சி.சி. அணி வெற்றி பெற்றுள்ளது.

பருத்தித்துறை ஹாட்லியைற்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் அவுஸ்திரேலியா நியூ. சவுத் வேல்ஸ் சி.சி.சி.சி. அணிக்கும் இடையிலான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா நியூசவுத் வேல்ஸ் சி.சி.சி.சி. அணி 7 விக்கெட் இழப்பிற்கு 198 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ரமேஸ் 33 ஓட்டத்தினையும் (ஆ.இ) சுபா 30 ஓட்டத்தினையும் ஜோன்சன் 27 ஓட்டத்தினையும் லால் 25 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் பரணிதரன், முகுந்தன் தலா 2 விக்கெட்டினையும் முரளி, கோகுலன், தவேந்திரன் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

SPORTS
விளையாட்டுச் செய்திகள்

199 ஓட்டத்தினை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பொடுத்தாடிய பருத்தித்துறை ஹாட்லியைற்ஸ் விளையாட்டுக்கழகம் 9 விக்கெட் இழப்பிற்கு 195 ஓட்டம் பெற்று தோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் தீபன் 40 ஓட்டத்தினையும் முரளி 33 ஓட்டத்தினையும் றொனி 24 ஓட்டத்தினையும் சசிதரன் 23 ஓட்டத்தினையும் நிர்மலன் 16 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் [illegible] தலா 2 விக்கெட்டினையும் ராம் [illegible] தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். (க)

## இன்றைய போட்டிகள்




சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தினதும் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தினதும் ஏற்பாட்டில் மின்னொளியில் உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ள போட்டிகள் வருமாறு,

மாலை 5.50 மணிக்கு சென்சேவியர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனை தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு பண்டத்தரிப்பு பிறைற்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாரந்தனை விளையாட்டுக்கழகம் களமிறங்கவுள்ளது.

பின்னர் இரவு 7.10 மணிக்கு சென்.தோமஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மாலு சந்தி [illegible] விளையாட்டுக்கழகம் களமிறங்கவுள்ளது. (க-23)



விளையாட்டு அமைச்சினால் வடமாகாண 2014 ஆம் ஆண்டுக்கான பெரு விளையாட்டுக்கள் அண்மையில் முல்லைத்தீவில் நடைபெற்றது. இதில் 49 கிலோ எடைப் பிரிவு குத்துச் சண்டைப் போட்டியில் வடமராட்சி பருத்தித்துறையை சேர்ந்த என்.கதிரவன் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷை வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா



பங்களாதேசுக்கு எதிரான 2-வது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

இந்திய அணி பங்களாதேஷில சுற்றுப்பயணம் செய்து மூன்று ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்ற நிலையில் இரண்டாவது போட்டி நேற்று நடைபெற்றது. இப்போட்டிக்கான இந்திய அணியில் பர்வேஸ் ரசூல் நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக ஸ்டுவர்ட் பின்னி சேர்க்கப்பட்டார்.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி இந்திய அணியை பேட்டிங் செய்யுமாறு கேட்டுக் கொண்டது. அதன்படி தொடக்க வீரர்களாக உத்தப்பாவும், ரகானேயும் களமிற ங்கினர். முதல் ஓவரின் இரண்டாவது பந்திலேயே ஆட்டமிழந்து ரகானே வெளியேற மூன்றாவது விக்கெட்டுக்கு புஜாரா களமிறங்கினார். இருவரும் பங்களாதேஷ் வீரர்களின் பந்துவீச்சை சந்திக்க சிரமப்பட்டனர். இந்த நிலையில் 6-வது ஓவரின் போது மழை பெய்ததால் ஆட்டம் தடைப்பட்டது.

மழை நின்ற பின் ஆட்டத்திற்கான ஓவர்கள் 41 ஆக குறைக்கப்பட்டது. பின்னர் ஆட்டத்தின் 8-வது ஓவரில் 14 ரன்களை எடுத்திருந்த உத்தப்பா டஸ்கின் பந்தில் கேட்ச் கொடுத்து அவுட்டானார்.

பின்னர் நான்காவது விக்கெட்டுக்கு களமிறங்கிய ராயுடு வந்த வேகத்திலேயே பெவிலியன் திரும்பினார். இதனால் ஐந்தாவது விக்கெட்டுக்கு கட்டன் ரெய்னா களமிறங்கினார். அவர் மட்டுமே பங்களாதேஷ் வீரர்களின் பந்துவீச்சை அடித்து ஆடினார். இந்த நிலையில் ஆட்டத்தின் 14-வது ஓவரில் புஜாரா டஸ்கின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆகி வெளியேறினார். பின்னர் வந்த வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்க ரன்களுக்கு ஆட்டமிழக்க கப்டன் ரெய்னா மட்டும் 27 ரன்கள் குவித்து ரன் அவுட்டானார். கடைசியாக களமிறங்கிய உமேஷ் யாதவ் மட்டும் சற்று ஆறுதல் தரும் வகையில் ஆட்டத்தில ஒரே ஒரு சிக்சர் அடித்து 17 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். இறுதியில் 25.3 ஓவர்களிலேயே இந்திய அணி 105 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

106 ரன்கள் என்ற இலக்குடன் பங்களாதேஷ் அணி ஆட்டத்தை தொடங்கியது. அந்த அணியின் தொடக்க வீரர்களாக தமீம் இக்பாலும், அனாமுல் ஹக்கும் களமிறங்கினர். முதல் ஓவரின் 2-வது பந்தில் அவுட்டாகி தமிம் நடையை கட்டினார். 3-வது ஓவரில் அனாமுல்லும் டக் அவுட்டாகி வெளியேறினார். பின்னர் களமிறங்கிய மிதுன் அலியும், முஷ்பிக்குர் ரஹிமும் சிறிது நேரம் பொறுமையாக விளையாடினார் எனினும் மிதுன் அலி 26 ரன்களுக்கும், ரஹிம் 11 ரன்களுக்கும் ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்க ரன்களில் ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணி 58 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது. இந்திய அணி சார்பில் ஸ்டுவேர்ட் பின்னி 28 பந்துகளில் 4 ரன்கள் மட்டுமே கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். வேகப்பந்து வீச்சாளர் மோகித் ஷர்மா 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்.(க)

# முல்லரின் ஹட்ரிக் கோலால் ஜேர்மனி அபார வெற்றி



உலகக்கிண்ண கால்பந்து போட்டியில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் ஜேர்மனி போர்த்துக்கல் அணியை 4-0 என்ற கோல்கணக்கில் வீழ்த்தியது.

இரு அணிகளும் பலமான அணியாக இருந்ததால் போட்டியைக்காண ரசிகர்கள் அதிமாக திரண்டனர். ரொனால்டோவின் தலைமையில் களமிறங்கிய போர்ச்சுக்கல் எந்த கோலும் அடிக்காமல் ஏமாற்றியது.

அந்த அணியின் நட்சத்திர ஆட்டக்காரரான ரொனால்டோவின் மீதான ரசிகர்கள் எதிரபார்ப்பும் ஏமாற்றத்தில் முடிந்தது.

எதிர்பாராத விதமாய் அதிரடியை காட்டிய ஜேர்மனி அணி 3-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. அந்த அணியின் வீரர் தோமஸ் முல்லர் ஆட்டம் தொடங்கிய 12-வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து அசத்தினார்.

இவர் ஹட்ரிக் கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். சோர்வான நிலையில் இருந்த போர்ச்சுக்கல் அணியின் வீரர்களின ஆட்டம் எடுபடவில்லை.

மேலும் ரொனால்டோவின் ஆட்டம் கூட கைகொடுக்காமல் இருந்த நிலையில், ஜேர்மனி அணியின் வீரர் ஹம்மல்ஸ் தன் பங்குக்கு ஒரு கோல் அடித்தார். இதன் மூலம் ஜேர்மனி 4-0 என்ற கோல்கணக்கில் போர்ச்சுக்கலை வீழ்த்தியது.

## அளுத்கம...

கும், முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் பெரும் வன்முறையாக வெடித்திருந்தது.

இதையடுத்து இப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதல் சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டனர். 80 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர். அத்துடன் இவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாகவும் உள்ளது என செய்திகள் வெளியாகின.

இந்தச் செய்திகளுக்கே பொலிஸ்மா அதிபர் இலங்ககோன் மறுப்புத் தெரிவித்தார். வன்முறைகளைப் பொலிஸார் கட்டுக்குள் கொண்டு வந்திருந்ததாகவும் கூறினார்.

இதேபோன்று வர்த்தக நிலையங்கள் எரியூட்டப்பட்ட போது பொலிஸாரிடம் துப்பாக்கிகள் எதுவும் இருக்கவில்லை என்றும் அதனாலேயே வன்முறையாளர்களை தடுக்க முடியாது போனது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## பூசகர்...

போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் பிற்பகல் அவர் உயிரிழந்தார். மாவிட்டபுரம் வீனியவரையைச் சேர்ந்தவரும் இடம்பெயர்ந்து மல்லாகம் சோடாக் கம்பனி ஒழுங்கையில் வசித்தவருமான வீனியவரை அம்மன் (இராஜ இராஜேஸ்வரி) ஆலய பிரதம குருக்களும் தர்மகர்த்தாவுமான அ.துரைச்சாமி குருக்கள் (வயது 70) என்பவரே உயிரிழந்தவராவார். (எ-6)

## அளுத்கம...

லிம்கள் மீதான தாக்குதல்களை கண்டித்தும் பொது பல சேனாவை தடை செய்ய வேண்டும் என கோரியும் கவன ஈர்ப்பு பேரணியொன்றை நடத்தினார்கள்.

காத்தான்குடி மெத்தப்பள்ளி வாசல் முன்பாக ஒன்றுகூடிய ஆயிக்கணக்கான முஸ்லிம்கள், அந்த பிரதேசத்தின் சிவில் நிர்வாக மையமான பிரதேச செயலகம் வரை பேரணியாக சென்று இது தொடர்பாக ஜனாதிபதிக்கான மகஜரொன்றை பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

காத்தான்குடி பிரதேச பள்ளிவாசல்கள் சம்மேளனம் மற்றும் ஜம் இயத்துல் உலமா சபையின் ஏற்பாட்டில் இந்த அமைதிப் பேரணி நடைபெற்றது. (எ-11)

## அளுத்கமவில் தொடரும்...

ல்லை நகரில் நேற்று பொது பல சேனா அமைப்பினர் நடத்தவிருந்த ஒரு கூட்டத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் தடை உத்தரவுவொன்றை பெற்று அதை அமல்படுத்தியுள்ளதாகவும் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார்.

அளுத்கம மற்றும் பேரு வளை ஆகிய பிரதேசங்களில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேசத்தின் பாதுகாப்பிற்காக பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுகம ஹேனேகம பகுதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெலிபென்ன நகரில் சில கடைகளுக்கும் நேற்றுமுன்தினம் தீ வைக்கப்பட்டது.

மதுகம, ஹேனேகம பிரதேசத்தின் பண்ணை ஒன்றின் காவலாளி ஒருவர் இதன்போது உயிரிழந்துள்ளார். சம்பவத்தின் போது அவருடன் பணியாற்றிய மற்றொருவர் காயமடைந்துள்ளார். 58 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை வெலிபென்ன நகரில் சில வர்த்தக நிலையங்கள் மீது சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

எனினும் நேற்று மதியம் நிலமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பிரதேசத்தின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. வேறு பகுதிகளில் இருந்து வந்தவர்களே இவ்வாறு செயற்படுவதாக வெலிபென்ன பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அஜித் ரோஹன தெரிவித்த கருத்து:-

"வெளியில் இருந்து வந்தவர்கள் இதனை செய்துள்ளதாக சிலர் கூறியுள்ளனர். அது தொடர்பில் நாம தற்போது ஆராய்கின்றோம். கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு அது குறித்து விசாரணைகளை மேற்கொள்கிறது. அந்த பிரதேசத்திலோ அல்லது வேறு பிரதேசங்களில் இருந்தோ வந்து இதனுடன் தொடர்புபட்டிருந்தால் நாம் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். தற்போது அளுத்கம, பேருவளை, மதுகம, வெலிபென்ன ஆகிய பொலிஸ் நிலையங்கள் ஊடாக 41 பேர் கைது செய்யப்பட்டுள்னர். அவர்களில் 25 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.'

இதேவேளை, பேருவளை மற்றும் அளுத்கம பகுதிகளில் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய கூறினார்.

பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்த கருத்து:-

"அளுத்கம, பேருவளை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்ட நிலைமைகளை கருத்திற் கொண்டு பொலிஸார் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதன்படி அளுத்கம, வெலிபென்ன, தர்கா நகர் மற்றும் பேருவளை பிரதேசங்களில் இராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. பொலிஸாருடன் இணைந்து அவர்கள் பிரதேசத்தின் பாதுகாப்பிற்காக செயற்படுகின்றனர்.

நேற்றுக் காலை எட்டு மணியில் இருந்து நான்கு மணித்தியாலங்கள் பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசங்களில் ஊடரங்குச் சட்டம் தளர்த்தப்பட்டது.

எனினும் மதியம் 12 மணி முதல் மீண்டும் அப்பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மதுகம மற்றும் பேருவளை ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது காயமடைந்த 23 பேர் களுத்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் பிரதீப் விஜேசிங்க கூறினார். (எ-11)

## பொது...

பாதுகாக்கப்பட வேண்டும், மத ஒற்றுமை ஏற்பட்டு. இனியும் இப்படியான சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டதாக அமைச்சர் பௌசி தெரிவித்தார்.

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலரின் மத உணர்வுகளைத் தூண்டும் பேச்சே அளுத்கமப் பகுதியில் ஏற்பட்ட அசம்பா விதங்களுக்கு காரணம் என்றும் அமைச்சர் பௌசி கூறுகிறார்.

இதனிடையே வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் உரையாற்றுபவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என, நேற்று நாடாளுமன்றத்தில் அனைத்து சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் அமைச்சர்களும் கோரினர் என்று அமைச்சர் பௌசி தெரிவித்தார். (எ-11)

## கோண்டாவிலில்...

சேர்ந்த டி.ரொபின் ராஜ் (வயது -20), எம்.நிரோஜன் (வயது- 23) என்ற இரு இளைஞர்கள் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக உரும்பிராயில் இருந்து வந்த இளைஞர்கள் குழு, கோண்டாவில் நாராயணன் கோவில் வீட்டிற்குள் புகுந்து சரமாரியாக வாள்வெட்டு நடத்தியது. இதில் மேற்படி மாணவர் உயிரிழந்தார்.

இச் சம்பவத்தில் ரவீந்திரன் சுகிர்தன் (வயது -19) என்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி உயர்தர கலைப்பிரிவு மாணவன் கழுத்தில் வாள்வெட்டிற்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதன் பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்படி மேற்படி வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டார் என்ற சந்தேகத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த உரும்பிராய் கிழக்குப் பகுதியினைச் சேர்ந்த எம்.நிரோஜன் (வயது 23) என்பவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

மேலும், யாழ்.போதனா வைத்தியசாலையிலும் பொலிஸார் பாதுகாப்பு பணிக்கென குவிக்கப்பட்டிருந்ததோடு இராணுவப்புலனாய்வுப்பிரிவினரின் பிரசன்னமும் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் நேற்று வரை அதிகரித்து காணப்பட்டது.

மேற்படி வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களின் நடமாட்டம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிகரித்து காணப்பட்டமையே பாதுகாப்பு தரப்பினரின் பிரசன்னத்திற்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆவா, டில்லு போன்ற பல குழுக்கள் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றமை மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை உரும்பிராய் மற்றும் கோண்டாவில் பகுதியினைச சேர்ந்தவர்கள் பல தமது குடும்பங்களுடன் வேறு இடங்களில் சென்று தங்கியுள்ளனர். உரும்பிராயில் 7 வீடுகள் அடித்து உடைக்கப்பட்டதையடுத்து அச்சம் காரணமாக அந்தக்குடும்பத்தினர் அங்கிருந்து வெளியேறி மறைந்து வாழ்ந்து வருகின்றனர்.

சினிமாப் பாணியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் வாள்வெட்டுச் சம்பவங்களும் குழு மோதல்களும் மக்கள் மத்தியில் பரபரப்பையும் அச்சயுணர்வையும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழரின் இளைய தலைமுறை திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருவதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்கள் மீது படையினர் தாக்குதல்

யாழ்.கோண்டாவில்- உரும்பிராய் கிராமங்களின் இளைஞர்களுக்கிடையிலான தர்க்கம் ஊர் சண்டையாக மாறி நேற்றைய தினம் இயல்பு நிலை திரும்பியிருந்த நிலையில், மீண்டும் தர்க்கத்தை உருவாக்க முனைந்த இளைஞரகள் மீது படையினர் நேற்று மாலை தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

இரு இளைஞர் குழுக் களுக்கிடையில் உருவான தர்க்கத்தினால் 19 வயதுடைய இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன், மேலும 6 பேர் இரு தரப்பிலும் படுகாய மடைந்தனர்.

சுமார் 8 வீடுகள் உடைத்து நாசமாக்கப்பட்டுள்ளன. இந் நிலையில்நேற்றுமுன் தினம் மாலை படையினர் இந்த இரு கிராமங்களையும் சுற்றி வளைத்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருந்தனர்.

இந் நிலையில் நேற்றுமுன்தினம் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட இளைஞனின் மரணச்சடங்கு நேற்று நடைபெற்றுள்ளது. இதனை யடுத்துமாலை 7 மணியளவில் கோண்டாவில் பகுதியிலிருந்து இளைஞர்கள் ஒரு தொகுதியினர் மீண்டும் தர்க்கத்தை உருவாக்கும் வகையில் செயற்பட்டதாக கூறிப்படும் நிலையில், படையினர்அந்த இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக தெரிய வருகின்றது. (எ-6)


Immediate Vacancy

தொடர்புகளுக்கு :- 0774458134,0214993166

இலங்கையில் முன்னணி வகிக்கின்ற No 1 நிறுவனமான Granton Company க்கு முழு நேர வேலை வாய்ப்பிற்கான பதவி வெற்றிடங்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலுள்ள துடிப்பும் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர். தங்களுக்கு O/L தகைமை இருப்பின் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வயதெல்லை 18-35. அனுபவம் அவசியமில்லை.
பயிற்சி இல்லாதவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

குறிப்பு :- சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும். உணவு மற்றும் தங்குமிட வசதிகள் இலவசம் (6782)
முகவரி :- 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்



## கட்டார் நாட்டில் அதிஉயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு

கட்டார் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

| | |
|---|---|
| AC Technicians | Qr.1500 - 2000 + OT |
| Plumber 15 | Qr.1500 - 2000 + OT |
| Electrician | Qr.1400 - 1700 + OT |
| Foreman / Supervisor | Qr.2000 - 2200 + OT |
| Carpenter (Finishing) | Qr.1200 - 1500 + OT |
| Driver (Qatar License) | Qr.1800 - 2000 + OT |
| Curtains Fixer Helper | Qr.1000 + OT |

தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம் கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம். எதிர்வரும் 20-ம் திகதி கட்டார் நாட்டவர்களால் நேர்முகப்பரீட்சை கொழும்பில் நடைபெறவுள்ளது. உங்கள் விண்ணப் பங்களை 19-ம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ...... உடன் பதிவு செய்து கொள்ள

AL/2248/ADVT10/14/11/15

Lanka Voice :- 0779527575 / 0766697789

கெப்பிடல் ரெக்ரூட்மன்ட் இன்டர்நெஷனல் (பி) லிமிடெட்
இல. 130/3/1. 3 மாடி, கிறேன்பாஸ் வீதி, கொழும்பு - 14

LLNO.2248 (C-7690)


# அவுஸ்திரேலியா எச்சரிக்கை

(சிட்னி)

இலங்கைக்கான பயணங்கள் தொடர்பில் அவுஸ்திரேலியா எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் சில பகுதிகளுக்கான விஜயங்கள் ஆபத்தாகலாம்என அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சின் புதிய பயண எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் சில பகுதிகளில்பதற்றநிலைமை நீடித்து வருவதனால் பயணங்களின்போது அவதானத் துடன் செயற்பட வேண்டியது அவசியமானது என தனது நாட்டு பிரஜைகளுக்கு அவுஸ்திரேலியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசத்தில்பொலிஸ்ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப பட்டுள்ளதாகவும் இதனை மதித்துச் செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடைபெறும் இடங்களுக்கான பயணங்களை தவிர்க்குமாறும், அவ்வாறான போராட்டங்களில் பங்கேற்பதனை தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து சரியான எதிர்வு கூறல்களை வெளியிட முடியாத இந்த தருணத்தில், அவுஸ்திரேலிய பிரஜைகள் எச்சரிக்கையுடனும், அவதானத்துடனும் செயற்பட வேண்டியது அவசியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# ஜோர்தான் இளவரசரை அங்கீகரித்தது ஐ.நா

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிய நியமனத்தை பொதுச்சபை உறுப்பு நாடுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதன்படி மனித உரிமைகள் ஆணைக் குழுவின் புதிய ஆணையாளராக, ஜோர்தான் இளவரசர் சாயிட் அல் ஹுசைன் நியமிக்கப்படவுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஒன்றுகூடி இருந்த ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை உறுப்பு நாடுகள் இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளன.

இதன்படி எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துடன் ஓய்வு பெறவுள்ள தற்போதைய ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பதவியை ஹுசைன பொறுப்பேற்கவுள்ளார்.

இந்த பதவியில் அமரும் முதல் ஆசியரும், இஸ்லாமியரும் இவராவார்.

அவரை ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் பான் கீ மூனே பரிந்துரை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


## உடனடி வேலைவாய்ப்பு

எமது அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கிளைகளுக்கு O/L, A/L படித்த இளைஞர்கள் தேவை!

- பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர தொழில் வாய்ப்பும், வெளிநாட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்.
- பயிற்சியின் போது 15,000/= பின் 40,000/=
- வயதெல்லை 18-35
- தங்குமிட வசதிகள் உண்டு

(C-7691)

இன்றே அழையுங்கள் :- 0775566224, 0777981471, 0213203687



## வேலைவாய்ப்புகள்

கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புகள். சம்பளம் 19000/-, 25000/-, 35000/- உணவு தங்குமிடம் சகாய விலைகளில். வருகை தரும் நாளிலே வேலைக்கு சேரலாம். நண்பர்கள்/குழுக்கள்/தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில். (ஜேம் / கோடியல் / பிஸ்கட் / டின் / கிளவுஸ் / ஆடை / கடதாசிப்பை / PVC / யோகட் / சொலட் / பிளாஸ்டிக் / தேயிலை போன்றவற்றுக்கு • உற்பத்தி • லேபல் • பொதியிடல் • தரம்பிரித்தல் • களஞ்சிய பிரிவுக்கு ஆட்கள் தேவை.) மேலதிக விபரங்களுக்கு

(C-7690) தொடர்பு :- 0775561883







## பூசகர்...

...தார். நேற்று நண்பகல் மோட்டார் சைக்கிளில் சந்தியைக் கடந்து புத்தூர் நோக்கி செல்லமுற்பட்டவேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி வீதி வழியாக வேகமாக வந்த ஹன்ரர் வாகனம் மோதியதில் தூக்கி வீசப்பட்டு ப்டுகாயமடைந்தார். உடனடியாக யாழ்.

19 ஆம் பக்கம் பார்க்க....


இணுவில் திருப்பதி
திருவருள்மிகு ஸ்ரீ வெங்கடேஸ்வரர் ஆலயம்
கும்பாபிஷேக தினம் - 2014



மெய்யடியார்களே !

திருவருள்மிகு பத்மாவதி தாயார் கோதை நாச்சியார் உடனுறை திரு வேங்கடேஸ்வரர் ஆலய மணவாளக் கோல விஞ்ஞாபனம்



04 (18.06.2014) புதன்கிழமை இன்று

காலம் :- 04 (18.06.2014) புதன்கிழமை
காலை :- 06.00 மணி விநாயகர் வழிபாடு,
புண்யாஹவாசனம், அனுன்யை கணபதி ஹோமம்,
யாக கலச மண்டப பூஜை, விஷ்ணு சகஸ்ரநாம ஹோமம்,
ஸ்ரீ லக்சுமி ஹோமம்
காலை :- 8.00 மணி
வேங்கடேஸ்வரப் பெருமானுக்கு பால் அபிஷேகம்
காலை :- 9.00 மணி மஹா பூர்ணாகுதி - தீபாராதனை
காலை :- 9.15 மணி விநாயகர் 108 சங்காபிஷேகம்
காலை :- 9.30 மணி பிரதான கலச வீதி பிரதட்சணம்
காலை :- 10.00 மணி 108 கலச அபிஷேகம் அதனைத் தொடர்ந்து
பத்மாவதி தாயார் கோதை நாச்சியார்,
ஆஞ்சநேயர் அபிஷேசகம்
மாலை :- 12.30 மணி மஹா தீபராதனை
மாலை :- 6.00 மணி விசேட பூஜை, பஜனை
மாலை :- 7.00 மணி சுவாமி வீதியுலா வரும் காட்சி
இடம்பெறும்
குறிப்பு :- அடியார்கள் எம்பெருமானுக்கு தேவையான
பால், இளநீர், பூக்கள் மற்றும் அபிஷேகப்
பொருட்களை அதிகாலைக்கு முன்னர் வழங்கும்படி
கேட்கப்படுகின்றார்கள்.

(6776) அதீனகர்த்தா :- ச.கணேசலிங்கம்



உலகப் புகழ்பெற்ற பாடகரும் இந்திய சிதம்பர நடராஜர் தேவஸ்தான பாடகருமான
'தெய்வீக கான மணி'
கதிர்.சுந்தரலிங்கம்
வழங்கும்



பக்திப் பாடல் இசை நிகழ்வு ஈழத்தின் புகழ்பூத்த வாத்திய இசைக் கலைஞர்களுடன் இணைந்து மகிழ விரும்புகிறீர்களா?

தொடர்பு :- சதா வேல்மாறன்
82/4 கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P :- 0213210906

(6774)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.